REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

www.thinakaran.lk

/ Thinakaran.lk / ThinakaranLK

2024 ஜூலை 8 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN

තිනකරන්

92 ANNIVERSARY

வரு. 92 இல. 161 | Monday 08, July, 2024 | 16 பக்கங்கள் | 50/-

## நெல் கொள்வனவுக்காக சலுகை வட்டியில் கடன்

### நெல் ஆலை உரிமையாளர்களுக்கு 50 மில். ரூபாவை வழங்கவும் நடவடிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்

விவசாயிகளிடமிருந்து நியாயமான விலையில் நெல்லை கொள்வனவு செய்வதை உறுதிப்படுத்தும் வகையில், 2024 சிறுபோக நெல் கொள்வனவுக்காக

06

# சஜித்தின் முறைகேடான வீடமைப்பு கடன் திட்டங்கள்

## அரசுக்கு ரூ. 5564 மில்லியன் நட்டம்

### 53,709 பேரின் தவணைகளை இடைநிறுத்த நடவடிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்

எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வீடமைப்பு அமைச்சராக பதவி வகித்த காலத்தில், முறையற்ற வீடமைப்புக் கடன்களை வழங்கியதால், அரசாங்கத்திற்கு 5,564 மில்லியன் ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரஜீவ் சூரியாரச்சி தெரிவித்துள்ளார். இதற்கிணங்க அவரது காலத்தில் முறையற்ற வகையில் வழங்கப்பட்ட 53,709 பயனாளிகளின் கடன்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாகவும் மேற்படி அதிகார சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கடன்களை இவ்வாறு மட்டுப்படுத்துவதன் மூலம் அரசாங்கத்திற்கு 7,852 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான தொகை மீதமாகும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; தற்போதைய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச வீடமைப்பு அமைச்சராக பதவி வகித்த 2015 - 2019 காலப்பகுதியில், 07 வீடமைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்தியுள்ளார்.

மாதிரிக் கிராமம், விசிறி கடன் உதவி, சிறுநீரக நிதியுதவி, விரு சுமித்துரு உதவித் திட்டம், கிராம சக்தி மற்றும் வெள்ள நிவாரண உதவித் திட்டம் போன்றவையே இந்த திட்டங்களாகும்.

இந்த முறையற்ற வீட்டுக் கடன்களில் பெரும்பாலானவை 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்டுள்ளது.

2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளில் நாட்டில் உள்ளூராட்சி சபை தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தலும் நடைபெற்றிருந்தன. 2019ஆம் ஆண்டில் 62,994 வீடுகள் நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் அதில் 40,500 வீடுகளுக்கு மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. அத்துடன் 2015 மற்றும் 2019 காலப் பகுதிகளில் அப்போதைய வீடமைப்பு அமைச்சரான சஜித் பிரேமதாச 3,41,510 வீடுகளை நிர்மாணிக்க ஆரம்பித்துள்ளார், எனினும்

06

## பிரிக்கப்படாத இலங்கைக்குள் தீர்வுகாண சம்பந்தனும் நானும் பணியாற்றினோம்

### தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அர்ப்பணிப்புடன் செயற்படுகிறேன்

### யார் நீதிமன்றத்திற்கு சென்றாலும் ஜனாதிபதித் தேர்தல் இந்த வருடம் நடைபெறும்

### அமரர் சம்பந்தனின் இரங்கலுரையில் ஜனாதிபதி தெரிவிப்பு



தமிழ் மக்களின் உரிமைகளுக்காக மாத்திரமன்றி ஒட்டுமொத்த இலங்கையரின் உரிமைகளுக்காகவும் அமரர் இரா. சம்பந்தன் முன்னின்று உழைத்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். திருகோணமலையில் அன்னாரது இல்லத்தில் நேற்று (07) பிற்பகல் நடைபெற்ற சம்பந்தனின் இறுதி கிரியையில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி

06

## நூறு எம்.பிக்களின் பட்டியலை இலஞ்ச ஆணைக்குழுவில் சமர்ப்பிக்க ஏற்பாடு

### சொத்து விபரங்களை சமர்ப்பிக்காததால் நடவடிக்கை

லோரன்ஸ் செல்வநாயகம்



பாராளுமன்ற உறுப்பினர்கள் 169 பேர் தமது சொத்துக்கள் தொடர்பான விபரங்களை சபாநாயகருக்கு சமர்ப்பிக்க வேண்டிய நிலையில், இதுவரை 69 பேரே தமது விபரங்களை சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களும் தமது சொத்துக்கள் தொடர்பான விபரங்களை பிரதி வருடமும் ஜூன் மாதம் 30 ஆம் திகதிக்குள் சபாநாயகருக்கு சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. எனினும் இதுவரை 100 எம்.பிக்கள் தமது விபரங்களை கையளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பாராளுமன்ற உறுப்பினர்கள் மாத்திரமே சபாநாயகரிடம் தமது சொத்துக்கள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிப்பர். அமைச்சர்கள் மற்றும்

06

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஸ்ரீல. பொதுஜன பெரமுன ஆதரிக்கும்

### நாடு, மக்களின் நாளைய தினத்தை சிந்தித்தே செயற்படுகிறோம்

லோரன்ஸ் செல்வநாயகம்



நெருக்கடியான காலகட்டத்தில் எமது தாய் நாட்டை வீழ்ச்சியிலிருந்து மீட்பதற்கான நடவடிக்கையில் ஒத்துழைப்பு வழங்கிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு,பொது ஜன பெரமுன தொடர்ந்தும் ஒத்துழைப்பு வழங்குமென, அக்கட்சியின் ஸ்தாபகரும் முன்னாள் அமைச்சருமான பஷில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். பொதுஜன பெரமுன தற்போதைய ஜனாதிபதி

06

## ஜனாதிபதி நிதிய உதவித் தொகை இம்மாதம் 12 இல் வழங்க ஏற்பாடு



குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு கல்வியைத் தொடர்வதற்காக ஜனாதிபதி நிதியம் வழங்கும் புலமைப்பரிசில் உதவித் தொகை, இம்மாதம் (12) முதல் வழங்கப்படவுள்ளது. மாவட்ட மட்டங்களில் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

தரம் 01 முதல் க.பொ.த. உயர் தரம் வரை கற்கும் தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு இப்புலமைப்பரிசில் உதவித் தொகை வழங்கப்படவுள்ளது. மாவட்ட செயலாளர்கள் தலைமையில், சகல வலயக் கல்வி

06

## அரசாங்க ஊழியர்களின் சகல பிரச்சினைகளையும் தீர்க்க குழு

### அடுத்த பட்ஜட்டில் தீர்வைப் பெற நடவடிக்கை



லோரன்ஸ் செல்வநாயகம்

அரசாங்க ஊழியர்களின் அனைத்து பிரச்சினைகளுக்கும் நிரந்தர தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதற்காக விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக இதற்கான தீர்வுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். ஒவ்வொரு

06

## இளைஞர்களின் வாழ்க்கையை சீரழிக்காது கடமைக்கு திரும்புங்கள்



நாட்டின் எதிர்காலத்தைப் பொறுப்பேற்கவுள்ள இளைஞர்களின் வாழ்க்கையை மேலும் சீர்குலைக்காமல், பல்கலைக்கழகங்களின் கல்விசாரா ஊழியர்கள் சகலரையும் கடமைக்கு திரும்புமாறு உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் கோரிக்கை விடுத்துள்ளார். ஜனாதிபதி ஊடக மையத்தில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலே அவர் இவ்விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார். இதுபற்றிக் கருத்து வெளியிட்ட

06

## IMF: ஒப்பந்தத்தை தசமளவாவது மாற்றினால் உலகம் நம்மை கைவிடும்



சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் மூலம், பாதியில் நிறுத்தப்பட்ட அபிவிருத்தி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிக்க வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

ஹோமாகம தேர்தல் தொகுதியில் பல வீதிகளின் புனரமைப்பு பணிகளை ஆரம்பித்து வைத்து உரையாற்றிய அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது; சர்வதேச நாணய நிதி ஒப்பந்தங்களை தசமளவிலாவது மாற்றினாலோ அல்லது கைவிட்டாலோ உலகம்

06

## 1,700 ரூபாய் சம்பளம் கிடைத்தால் மகிழ்ச்சி



வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் 1,700 ரூபாய் சம்பளம் கிடைத்தால் மகிழ்ச்சியாக இருக்குமென, மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

06

## கொழும்பில் போரா மாநாடு விசேட போக்குவரத்து அமுல்



போரா ஆன்மீக மாநாட்டை முன்னிட்டு கொழும்பில் விசேட போக்குவரத்து திட்டம் அமுல்படுத்தப்படும் என, பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

போரா ஆன்மீக மாநாடு நேற்று (07) ஆரம்பமாகி எதிர்வரும் (16) வரை பம்பலப்பிட்டி போரா பள்ளிவாசல் மற்றும் இலங்கை கண்காட்சி மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டுக்காக இந்தியா உள்ளிட்ட பல நாடுகளிலிருந்து சுமார் 15,000 போரா சமூகத்தினர்

06

## ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி ஜூலை 17க்கு பின்னர் வெளியாகும்

லோரன்ஸ் செல்வநாயகம்



ஜனாதிபதி தேர்தலுக்கான திகதி இம்மாதம் 17 க்குப் பின்னர் வெளியிடப்படும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. ஆணைக்குழுவின் தலைவர் ஆர். எம்.ஏ. எல். ரத்நாயக்க இது தொடர்பில் தெரிவித்துள்ளார். இதுபற்றி அவர் தெரிவித்துள்ளதாவது:

06

## மழையுடன் கூடிய காலநிலை தொடரும்




நாட்டின் சில பகுதிகளில் சில நாட்களுக்கு மழை பெய்யலாம் என, வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது. மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்தி மற்றும் வடமேல் மாகாணங்களிலும் மழை பெய்யும் சாத்தியம் நிலவும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

06

## லயனல் பெர்னாண்டோ காலமானார்



இறக்கும்போது அவருக்கு 88 வயது

இலங்கை நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரியும் இராஜதந்திரியுமான லயனல் பெர்னாண்டோ நேற்றுமுன்தினம் (6) கொழும்பில் காலமானார்.

06

## பிரிட்டிஷ் தேர்தலில் இலங்கை வம்சாவளிப் பெண் வெற்றி



பிரிட்டிஷ் பாராளுமன்றத் தேர்தலில் இலங்கை வம்சாவளியைச் சேர்ந்த தமிழ் பெண் உமா குமரன் வெற்றி பெற்றுள்ளார். பிரித்தானிய தேர்தலில் தமிழ் பெண் உறுப்பினர் ஒருவர் வெற்றி பெற்ற முதல் சம்பவம் இதுவாகும்.

பிரிட்டன் பொதுத் தேர்தலில் 19,145 வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டி பாராளுமன்ற உறுப்பினரான இப்பெண், சட்டத்தரணியுமாவார்.1981 ஆம் ஆண்டு யுத்தம் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் அவரது

06

## போதைப்பொருள், பாதாளச் செயற்பாடுகள் 2025 டிசம்பருக்குள் முற்றாக ஒழிக்கப்படும்

லோரன்ஸ் செல்வநாயகம்



நாட்டிலிருந்து போதைப்பொருள் மற்றும் பாதாள உலகச் செயற்பாடுகள் 2025 டிசம்பருக்குள் முற்றாக ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என, பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இவ்வருடம் டிசம்பர் மாதத்திற்குள் பெருமளவில் அவற்றை முடிவுக்குக் கொண்டுவர முடியும் என பொலிஸ் மா அதிபர் தம்மிடம் தெரிவித்துள்ளதாக குறிப்பிட்ட அமைச்சர், ஜனாதிபதியின் தலைமைத்துவத்தின் கீழ் அடுத்த வருட இறுதிக்குள் அவற்றை முடிவுக்குக் கொண்டு வர முடியும்

06

## இணையக் குற்றங்களில் ஈடுபட்ட 11 இலங்கையர்கள் நாடு கடத்தல்




இணைய குற்றங்களில் ஈடுபட்ட 11 இலங்கையரை ஐக்கிய அரபு இராச்சியம் நாடு கடத்தியுள்ளது.

நாட்டுக்கு அழைத்து வரப்பட்ட இவர்கள் மீது கடுமையான விசாரணைகள் முன்னெடுக்கப்படும் என, இலங்கை வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. இணையக்குற்றங்களில் ஈடுபட்ட நூற்றுக்கணக்கானவர்களை ஐக்கிய அரபு இராச்சிய பாதுகாப்புத் துறையினர் கைது செய்துள்ளனர். இவர்களில் ஆபிரிக்கர்கள் மற்றும் தெற்காசிய நாடுகளைச் சேர்ந்தோரும் உள்ளனர். இணைய வழிக்குற்றம் மற்றும் பாலியல் செயற்பாடுகள் உள்ளிட்ட

06

# எந்தக் குழுவாக இருந்தாலும் நாட்டின் நலனுக்காக கட்சி பேதமின்றி ஒன்றிணைந்து செயற்படத் தயார்

நாட்டை அபிவிருத்தி செய்யும் பணியில் சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ அல்லது வேறு எந்தக் குழுவாக இருந்தாலும் கட்சி, எதிர்க்கட்சி வேறுபாடுகள் இன்றி ஒன்றிணைந்து செயற்படத் தயார் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுனவின் அழைப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தனவின் அரசியல் வாழ்வின் 27வது ஆண்டு நிறைவை முன்னிட்டு களுத்துறை புகையிரத நிலைய மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 'தேசியப் பணியில் ரோஹிதவின் அடையாளம்' வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"சந்திரிகா குமாரதுங்கவுடன் இணைந்து செயற்படும் போது நல்லதைக் கூறியவர்கள், மஹிந்த ராஜபக்ஷவுடன் இணைந்து செயற்படும் போது குறை கூறுகிறார்கள்" எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

படுகுழியில் வீழ்ந்த நாட்டை மீட்க பொதுஜனபெரமுனவின் அரசாங்க கட்சி குழுவினர் நல்ல பங்களிப்பை வழங்கியதாகவும் அவர் தெரிவித்தார்.

பழைய அரசியலில் சிக்கிக் கொள்ளாமல், மாறிவரும் உலகில் புதிதாகச் சிந்தித்து முன்னோக்கிச் செல்லுமாறு பொதுஜன பெரமுனவை கேட்டுக் கொள்வதாக ஜனாதிபதி கூறினார். அந்த ஆலோசனையை ஐக்கிய தேசிய கட்சிக்கும் பெற்றுக்கொடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இவ்வைபவத்தில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷ, பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகர் பசில் ராஜபக்ஷ, பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ, பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா மற்றும் பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

ரோஹித அபேகுணவர்தனவின் 'ரோஹித பாஷண' புத்தகம் இங்கு வெளியிடப்பட்டது.



## சவால்களை எதிர்கொண்டு தப்பியோடியவர்கள், நாட்டை பின்னடையச் செய்வதற்கு விரும்புகிறார்கள் – முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ







அங்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் கூறியதாவது:

"இந்த இருபத்தேழு வருடங்கள் ரோஹிதவின் வாழ்க்கையில் கசப்பான காலமாகும். எதிர்காலம் இன்னும் கசப்பாக இருக்கலாம். இவற்றையெல்லாம் அவர் வெற்றிகரமாக எதிர்கொண்டுள்ளார். பல கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. இரண்டு வருடங்களுக்கு முன்பு என்னை ஆதரித்ததும் மிகவும் கடினமான முடிவாக இருந்திருக்க வேண்டும். அன்றிலிருந்து எனக்களித்த ஆதரவுக்கு நன்றி.

2002ஆம் ஆண்டு ரோஹித்தை நான் அறிந்து கொண்டேன். அப்போது நான் பிரதமராக இருந்தேன். அன்று எங்களுக்கு ரோஹித்த ஒரு தலைவலி. எழுந்து சத்தமிடுவார். ஆனால் நான் அவரை ஒரு எழுச்சியாளராகப் பார்த்தேன். ஆட்சியில் இருந்தாலும் சரி, எதிர்க்கட்சியாக இருந்தாலும் சரி அப்படித்தான் நடந்து கொண்டார். தனிப்பட்ட பலத்தை அவர் எப்போதும் வெளிப்படுத்தினார். ஒரு கட்சிக்குத் தேவையான மதிப்புமிக்க நபர் அவர். உடலுடன் மனமும் உண்டு. ஒரு கட்சியை வழிநடத்த இவ்வாறானவர்கள் தேவை.

இன்று காலை நான் ஐக்கிய தேசியக் கட்சியின் காலி கூட்டத்தில் இருந்தேன். அங்கே நான் சொன்ன அறிவுரையை மொட்டு கட்சி கூட்டத்திலும் சொல்கிறேன். உலகம் மாறிக்கொண்டிருக்கிறது. புதிதாக சிந்தியுங்கள். பழைய அரசியலில் சிக்கிக் கொள்ளாதீர்கள். அங்கிருந்து நாம் தொடரலாம். ரோஹிதவின் பணியை நான் எதிர்க்கட்சியில் இருந்தும், ஆளும் கட்சியில் இருந்தும் பார்த்திருக்கிறேன். அதற்காகத்தான் இந்தக் கூட்டம் வந்திருக்கிறது. அவர் ஒரு போதும் மாகாண மக்களை மறக்கவில்லை.



'ரோஹிதவின் நிகழ்வுக்கு செல்கிறீர்களா ?' என்று ஊடகவியலாளர்கள் கேட்டனர். 'நான் அங்கே போகிறேன்' என்றேன். 'மஹிந்த ராஜபக்ஷ பற்றி என்ன கூறுவீர்கள்?' என ஊடகவியலாளர்கள் என்னிடம் கேட்டனர். 'இது அவருக்கு 27வது வருடம் அல்ல, ரோஹித்தின் 27வது வருடம்' என்று கூறினேன்.

மகிந்த ராஜபக்ஷவுடன் அமர்ந்து என்ன செய்கிறேன்? என்று என்னிடம் எப்போதும் கேட்கப்படுகிறது. அதற்கு நான் பதில் சொல்கிறேன். மகிந்தவும் நானும் இரு தரப்பில் இருந்தோம். ஒன்று சேரவில்லை. எப்போதும் எதிராக இருந்தேன். அந்த யுத்தத்தை மீண்டும் சொல்ல வேண்டிய அவசியமில்லை. நான் ஏன் இப்போது இங்கே இருக்கிறேன்? சந்திரிகாவுடன் எனக்கு இதைவிட சண்டை அதிகம். சந்திரிகாவுடன் இருக்கும்போது யாரும் கேள்வி கேட்பதில்லை.

2020 தேர்தலுக்குப் பிறகு, கொரோனா காலத்தில் இந்த நாட்டின் நிலைமையைப் பற்றி பேச எங்களுக்கு வாய்ப்புக் கிடைத்தது. 2021 கிறிஸ்துமஸ் சீசனில், நாணய நிதியத்தின் நிர்வாக இயக்குநர் கிறிஸ்டினா ஜோர்ஜீவாவுடன் பேசினேன். முன்னாள் ஜனாதிபதி கோட்டபாயவுக்கு வழங்குமாறு அவர் என்னிடம் ஒரு செய்தியை வழங்கினார். நான் சென்று அதனைக் கொடுத்தேன். நாணய நிதியத்திடம் செல்லுமாறு கூறினேன். அதற்கு மஹிந்த சம்மதம் தெரிவித்தார். நான் நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப விரும்பினேன். பணத்தின் மதிப்பு குறைவதை நானும் விரும்பவில்லை. பேசிக் கொண்டிருந்தோம். இது ஒரு இரகசியம் அல்ல. அரசியலில் இருந்து நாட்டை எப்படி நகர்த்துவது என்பது பற்றி பேசினோம். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய அரசியல் கட்சிகளின் தலைவர்களை அழைத்த போது நானும் தமிழ்க் கட்சியினரும் மாத்திரமே அங்கு சென்றோம்.

மே மாதம் 9ஆம் திகதிக்கு முன்னர் பாராளுமன்றம் இடம்பெற்றது. ஒரு பகுதியினர் அரசாங்கத்திலிருந்து எதிர்க்கட்சிக்குச் சென்றனர். கோட்டாபயவின் அரசாங்கம் கவிழ்ந்தால் பிரதமர் பதவியை முதலில் எதிர்க்கட்சித் தலைவரிடம் ஒப்படைக்க வேண்டும் என சிலர் கூறினர். அதுபற்றி என்னிடமும் கேட்கப்பட்டது. அதுதான் மரபு என்பதை அவர்களுக்கும் தெரிவித்தேன். ஆனால் எதிர்க்கட்சித் தலைவர் அந்தப் பொறுப்பை ஏற்கவில்லை. அந்தப் பொறுப்பை ஏற்க வேண்டிய கடமை அவருக்கு இருந்தது.

நாங்கள் ஜனநாயகம் பேசுகிறோம். அவர் ஐவோ ஜென்னிங்ஸைப் படிக்க வேண்டும், இல்லையா? பிரதமர் பதவி விலகினால் எதிர்க்கட்சித் தலைவரே பொறுப்பேற்க வேண்டும் என அவர் தெளிவாக குறிப்பிட்டுள்ளார். ஜென்னிங்ஸ் எழுதிய cabinet Govt மற்றும் parliament புத்தகங்களைக் கண்டுபிடித்துப் படிக்குமாறு தெரிவிக்க விரும்புகிறேன்.

எதிர்க்கட்சித் தலைவர் நாட்டுக்கான கடமையைச் செய்யவில்லை. என் நண்பன் அனுராவைக் கூட கண்டுபிடிக்க முடியவில்லை. இரண்டு நாட்களாக பிரதமர் பதவிக்கு ஒருவரைத் தேடினோம். எந்த நாட்டில் இப்படி நடந்தது? பிரதமர் இல்லாமல் ஆட்சியை நடத்த முடியாது. பிரதமரின் ஆலோசனைக்கு அமைய ஜனாதிபதி செயற்பட வேண்டும். நான் பிரதமர் பதவியைக் கேட்கவில்லை. என்னை வந்து ஆதரிக்கும்படி கேட்டுக் கொண்டார். அதன்படி, அவர்களுக்கு ஆதரவளிக்க ஒப்புக்கொண்டேன். சஜித் நாட்டைக் கைப்பற்றினாலும் அவருக்கும் நான் உதவுவேன். அது எனக்குப் பிரச்சினையில்லை.

மஹிந்தவும் நானும் தற்போது அரசியலில் பல அத்தியாயங்களை நிறைவு செய்துள்ளோம். ஒரு நாடு பிரச்சினையில் இருக்கும் போது முக்கிய கட்சிகள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். நாங்கள் அடித்துக் கொண்டு திட்டிக்கொண்டுள்ளோம். ஆனால், நாடு பிரச்சினையில் இருந்தபோது ஒன்று சேர்ந்தோம்.

1931 ஆம் ஆண்டு முதல் தெற்காசியாவில் ஒரு கட்சி தோற்கடிக்கப்பட்ட போது ஜனநாயகம் அமைதியான முறையில் மற்ற கட்சிக்கு மாற்றப்பட்ட ஒரே நாடு இலங்கை மட்டுமே. இவ்வளவு அமைதியான முறையில் அதிகாரப் பரிமாற்றம் நடந்த ஒரு நாட்டை எனக்குக் காட்டுங்கள்.

நம்மிடம் குறைபாடுகள் இருப்பது உண்மைதான். இலங்கையில்தான் இப்படியொரு சம்பவம் நடந்துள்ளது. எவ்வளவு ஏசி பேசிக் கொண்டாலும் மாலையில் சந்திப்போம். திருமண வீடுகளில் சந்திப்போம்.

எங்கள் வீடுகளுக்கு தீ வைக்கப்பட்டது. அதன் பிறகு, என்னை பதில் ஜனாதிபதியாக வருமாறு பலர் கேட்டுக் கொண்டனர். நான் அதுபற்றி சஜித்திடம் கேட்டேன். சஜித் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவார் என்றும், தேவைப்பட்டால் பிரதமராக வாருங்கள் என்றும் எனக்குத் தெரிவிக்கப்பட்டது. நான் எப்படி அவருக்கு பிரதமராக முடியும் என்று நினைத்தேன். சஜித்தை போல் என்னால் ஓட முடியாது. நான் ஜனாதிபதியாவது நல்லது என்று நினைத்தேன். அந்தத் தேர்தலில் அநுரவும் கலந்து கொள்ளப் போவதாகத் தெரிவித்தார்.

## நாட்டில் அரசியல் ஸ்திரமின்மை ஏற்பட்ட போது, நாட்டைப் பொறுப்பேற்க முன்வந்த தலைவர் ரணில் விக்கிரமசிங்க - ரோஹித அபேகுணவர்தன

ஜி.எல்.இடம் கேட்டபோது, தான் பேசத் தயாராக இல்லை என்றார். பின்னர் மஹிந்தவிடம் பேசினேன் . அப்போது அவர் ஆதரவளிப்பதாக உறுதியளித்தார். இது தவறா? ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் ஒரு பகுதியினரும் எனக்கு வாக்களித்தனர். இது ஒரு இரகசியம் அல்ல. மொட்டுக் கட்சியின் பெரும்பான்மையானவர்கள் அரசாங்கத்திற்கு ஆதரவளித்தனர். அதற்கு நான் நன்றியுள்ளவனாக இருக்கிறேன். அதனால்தான் மஹிந்தவுடன் அமர்ந்திருக்கிறேன்.

அதற்கு என்னைக் குறை கூறுங்கள். இந்திர பகவான் பாராளுமன்றத்தில் இருந்தால் நான் இந்திரனையும் கேட்பேன். ஆனால் இந்திரன் பாராளுமன்றத்தில் இல்லை. மகிந்த ராஜபக்ஷ, சஜித், அனுர திஸாநாயக்க ஆகியோரே இருந்தார்கள். கஜேந்திரகுமார் ஆதரித்திருந்தால் அதையும் பெற்றிருப்பேன். ஏனென்றால் பொருளாதாரத்தை சரி செய்ய முடியும் என்று எனக்குத் தெரியும். தற்போது பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்துள்ளோம்.

எட்டு பில்லியன் டொலர் சேமிக்கப்பட்டுள்ளது. இப்போது நாம் முன்னேறிச் செல்ல வேண்டும். மொட்டு கட்சியின் ஆதரவு வேண்டாம் என்று சொன்னால் இன்று என்ன நடக்கும்? எரிபொருள் மாத்திரமல்ல தேங்காய் எண்ணெயும் கிடைக்காது. டொலர் நானூற்று ஐம்பதுக்கு செல்லும். யாரிடமாவது உதவி பெற்று வேலை செய்ய வேண்டும். இது நிற, கட்சி வேறுபாடுகள் பார்க்கும் சந்தர்ப்பமல்ல.

இப்போது நாம் அங்கிருந்து முன் செல்ல வேண்டும். இந்த அமைச்சர்களை நான் தெரிவு செய்யவில்லை. கோட்டபாய ராஜபக்ஷவினால் தெரிவு செய்யப்பட்டவர்களே அங்கு இருந்தனர். ஆனால் மொட்டு கட்சியைச் சேர்ந்தவர்கள் வேலையை கையிலெடுத்து ஓடினார்கள். நான் நினைத்ததை விட அதிகமாக முன்னெடுத்துச் சென்றார்கள். மொட்டு கட்சி அமைச்சரவையின் ஆதரவின்றி என்னால் தனியாக எதுவும் செய்திருக்க முடியாது.

நான் ஏன் இங்கே அமர்ந்திருக்கிறேன் என்று கேட்கிறார்கள். நான் மொட்டு கட்சியில் இணைய மாட்டேன். இந்தக் கட்சி இப்போது புதிதாக உருவாக்கப்பட வேண்டும். 2021, 2022, 2023 காலகட்டத்தில் கட்சி அமைப்பு உடைக்கப்பட்டது. அமைச்சரவையில் மொட்டு கட்சியின் ஆதரவின்றி என்னால் தனியாக இதைச் செய்ய முடியாது. மேலும் எந்த நேரத்திலும் நாம் இணைந்து செயல்பட வேண்டும். மற்ற நேரங்களில் பிரிந்து இருக்கமுடியும். அவ்வாறில்லாவிட்டால், நம் நாட்டுக்கு துரோகம் செய்தவர்களாவோம். நான் மொட்டு கட்சியுடன் சேரமாட்டேன், அதே போல் மொட்டு கட்சி ஐக்கிய தேசியக் கட்சியில் இணையாது.

ஐக்கிய தேசியக் கட்சியின் கூட்டத்திற்கும் மொட்டு கட்சியின் கூட்டத்திற்கும் ஒரே நாளில் என்னால் செல்ல முடிந்துள்ளது. நேற்று இரவு நான் ஐ.ம.ச உடன் இருந்தேன். எனக்கு வேண்டுமானால் அவர்கள் சென்ற கூட்டத்திற்கும் சென்றிருக்கலாம். என்னை துரத்துவதற்கு அங்கு யாரும் இல்லை.

நாம் இந்த நேரத்தில் இணைந்து செயல்படுவோம். எங்களுக்கு முன் ஒரு பெரிய சவாலுள்ளது. இறுதியில் அந்தச் சவாலை வெல்ல வேண்டியவர்கள் நாம் அல்ல. இந்த இளம் தலைமுறையே. நாம் இளைஞர்களுக்கு எதிர்காலத்தை வழங்க வேண்டும். அதற்காக எம்மை அர்ப்பணித்து அரசியல் செய்ய வேண்டும்."

## களுத்துறையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற 'தேசியப் பணியில் ரோஹிதவின் அடையாளம்' வைபவத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ:

ரோஹிதாவின் அழைப்பை அவர் மீது கொண்ட கௌரவத்தினால் மிகுந்த மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொண்டேன். மக்களுக்கு சேவை செய்வதே ஒரு அரசியல்வாதியின் மிகப்பெரிய மகிழ்ச்சி. எனக்கு தெரிந்த காலத்திலிருந்தே ரோஹித அந்த மகிழ்ச்சியை அனுபவித்து வந்தார். ரோஹித இன்னும் நீண்ட தூரம் செல்ல வேண்டியுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அழைப்பாளராக ரோஹிதவின் பங்கு அனைத்து மக்களாலும் பாராட்டப்படுகிறது.

இருண்ட யுகத்திற்குப் பிறகு, ஜனநாயகத்தைப் போற்றும் காலம் உருவாகி வருகிறது. சவால்களை எதிர்கொண்டு தப்பி ஓடிய தலைவர்கள் அரங்கிற்கு வந்து தேவதை கதை சொல்கிறார்கள். அவர்கள் இந்த நாட்டை மீட்க முடியாதபடி பின்னடையச் செய்ய விரும்புகிறார்கள். அரசியலை வார்த்தைகளால் மட்டுமே விமர்சிப்பவர்களை நியமித்து நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்ல முடியாது. நாட்டை முன்னோக்கி கொண்டு செல்லும் தலைவர்களுக்கு முன்பாக மாத்திரம் நிற்குமாறு மக்களுக்கு வேண்டுகோள் விடுக்கின்றேன்.

ஒரு கப்டனின் திறமையை அமைதியான கடலில் அல்ல, புயலில்தான் அறிந்து கொள்ள முடியும். இந்த வார்த்தை உண்மையான தலைவருக்கே பொருந்தும். அப்படிப்பட்ட குணாதிசயங்கள் கொண்ட தலைவர் ரோஹித என்றே சொல்ல வேண்டும்".

களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன:

"என்னை எப்போதும் தூக்கி நிறுத்தும் பலத்தை எனக்குக் கொடுத்தது களுத்துறைதான். அதனால்தான் இந்த நாட்டின் அரச தலைவரை அழைத்து நான் களுத்துறைக்கு நன்றி கூறுகிறேன். எனது இந்த பயணம் ரோஜாப் படுக்கையல்ல.

27 வருடங்களாக நான் தோற்கடிக்கப்படவில்லை, மக்கள் சொல்வதை கேட்டதால் தான் இங்கு அழைத்து வரப்பட்டுள்ளேன். எனக்குபல்கலைகழகப்பட்டமோ அல்லது கலாநிதி, பேராசிரியர் பதவியோ இல்லை. ஆனால் நான் பூமியில் அரசியல் அறிவியலைப் படித்துக் கொண்டிருக்கிறேன். எமது ஆசிரியர் பசில் ராஜபக்ஷ வழங்கிய பொறுப்பை நிறைவேற்ற கடமைப்பட்டுள்ளோம்.

எனது அரசியல் முத்திரை மஹிந்த ராஜபக்ஷ. என்னால் வழங்கக் கூடிய ஆதரவையும் நாட்டுக்கு புதிய மஹிந்தவை உருவாக்கும் பலத்தையும் அவருக்கு வழங்க உள்ளேன்.

ராஜபக்ஷக்கள் இந்த நாட்டு மக்களுக்கு இரண்டு முறை உயிர் கொடுத்துள்ளனர். பயங்கரவாதத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்காகவும், கொரோனா தொற்றுநோயைச் சந்தித்த மக்களுக்கு உயிரைக் கொடுக்கவும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த கால அரசியல் ஸ்திரமின்மையின் போது நாட்டைப் பொறுப்பேற்க முன்வந்தார். அப்போது அந்த வேலையைச் செய்யக் கூடிய ரணில் விக்கிரமசிங்கவிடம் பொதுஜன பெரமுன நாட்டை ஒப்படைத்தது. கட்சித் தலைவர் கூட எங்களை விட்டுப் போய்விட்டார். இந்த நாட்டில் அராஜக சட்டத்தை நீக்கியதற்கு நன்றி. அரசியல் ரீதியாக நாட்டுக்காகவும், கட்சிக்காகவும் பல கடமைகளைச் செய்ய வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். களுத்துறையே... நான் உனக்கு அன்று செய்தது போல் நாளையும் என் பொறுப்பை நிறைவேற்றுவேன்".

பாராளுமன்ற உறுப்பினர் தம்மிக்க பெரேரா:

"இன்று மிகவும் மகிழ்ச்சியான நாள். நாட்டைக் கட்டியெழுப்பும் பணியில் நானும் ரோஹிதவும் ஒரே பக்கம் நிற்கின்றோம். நாம் அனைவரும் ஒரே மாதிரியே சிந்திக்கிறோம். எமது தலைவர் ராஜபக்ஷவும் அவ்வாறே.

பொருளாதாரத்தை விரிவடையச் செய்யும் போது அது மேலிருந்து கீழாக மட்டும் விஸ்தரிக்கப்படாது நடுவிலும் விஸ்தரிக்கப்பட வேண்டும். மஹிந்தவின் சிந்தனையோடு அந்த பத்து வருடங்களில் டொலர்களை உருவாக்கினோம். அதன் பின்னர் எங்களால் இன்னும் டொலர்களை சம்பாதிக்க முடியவில்லை. மஹிந்த சிந்தனையுடன் எழுதப்பட்ட பொதுஜன பெரமுனவின் கொள்கைகளை நாம் தொடர்ந்தால் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவது என்பது பெரிய விடயமல்ல".

தினகரன் விளம்பரம் 0112429367
விற்பனை பிரிவு 0112429444, 0112429378
ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

2024 ஜுலை 8 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN



தொழுகை நேரம்
சுபஹ் - 04.37
லுஹர் - 12.17
அஸர் - 03.44
மஃரிப் - 06.32
இஷா - 07.48

இன்றைய சுபதினம்
குரோதி வருடம் ஆனி 24
ராகுகாலம் : காலை : 7.28 - 8.58வரை
சுபநேரம் : காலை : 11.58 - 1.28வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி

டெங்கு நோயாளர்கள் அதிகரிப்பு

## காய்ச்சல் நீடித்தால் வைத்தியரை நாடவும்

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

நாட்டில் நிலவும் மழையுடனான சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரித்து வருவதாக, சுகாதார அமைச்சின் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அப்பிரிவின் விசேட மருத்துவர் லஹிரு கொடுத்துவக்கு இது தொடர்பில் தெரிவிக்கையில்:காய்ச்சல் 48 மணித்தியாலங்கள் தொடர்ச்சியாக நீடித்தால் உடனடியாக மருத்துவரை நாடி சிகிச்சை பெறுவது அவசியம் என்றும் தெரிவித்துள்ளார். சுகாதார அமைச்சின் தரவுகளின்படி இந்த வருடத்தின் முதல் ஆறு மாத காலத்தில் 27, 755 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.இந்நிலையில் டெங்கு நோயினால் 09 மரணங்கள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நாடளாவிய ரீதியில் 13 மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளில் டெங்கு பரவல் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



அமரர் இராஜவரோதயன் சம்பந்தனின் இறுதிக்கிரியைகளில் பங்கேற்கச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று திருகோணமலை இந்து மயானத்தில் நடைபெற்ற நல்லடக்கத்தில் பங்கேற்றார். தமிழக பாரதீய ஜனதா கட்சியின் தமிழக மாநிலத் தலைவர் அண்ணாமலை மற்றும் இலங்கைக்கான இந்திய தூதுவர் சந்தோஷ் ஜா ஆகியோரும் அருகில் அமர்ந்துள்ளனர்.

# எதிர்காலத்தில் பாடசாலைகள் டிஜிட்டல் மயமாக்கப்படும்; இலவசக் கல்வியால் எழுத்தறிவு 93 வீதமாக உயர்வு

எதிர்காலத்தில் பாடசாலைகள் டிஜிட்டல் மயமாக்கலில் உள்வாங்கப்படவுள்ளதால், தேர்ந்தெடுக்கப்பட்ட 1,250 பாடசாலைகள் தற்போது வலையமைப்பினூடாக இணைக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

காலி ஹால் டி கோல் ஹோட்டலில் (06) நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே கல்வி அமைச்சர் இதனைக் குறிப்பிட்டார். அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

அடுத்த மூன்று ஆண்டுகளில் 10,026 பாடசாலைகளை டிஜிட்டல் மயமாக்க எதிர்பார்க்கிறோம்.

இன்று தென் மாகாணத்திலுள்ள இருநூறு பாடசாலைகளில் நவீன வகுப்பறைகள் உள்ளன.

2,000 டெப் கணினிகள் சொந்தமாக உள்ளன.

இதற்காக ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தொழில்நுட்ப அறிவைப் பெற்ற பல்கலைக்கழகங்களில் பட்டம் பெற்றவர்களில் 93 வீதமானோருக்கு தொழில் சந்தையில் தொழில்வாய்ப்புக்கள் உள்ளன.

நவீன தொழில்நுட்பத்தின் மூலம் உலகை வெல்லும் வாய்ப்பை நாம் பயன்படுத்த வேண்டும்.

இலவசக் கல்விச் சட்டம் இலங்கையில்



மாற்றத்தை ஏற்படுத்தியது. அதன்படி, 46 வீதமாக இருந்த எழுத்தறிவு விகிதம் 93 வீதமாக உயர்ந்துள்ளது.

இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பம், நவீன வகுப்பறைகள் என்பன அவசியமாகும்.

அதற்கு இந்தியா வழங்கிய ஆதரவுக்கு நன்றி தெரிவிக்கிறேன் இவ்வாறு அமைச்சர் குறிப்பிட்டார்.

தினகரன் THINAKARAN

## 92 வருடங்களுக்கு முன் தினகரன்

இன்று 08 ஜூலை 1932




### கவர்னரின் விசேஷ அதிகாரம்

திரு. பெரேராவின் மற்றும் இரு பிரேரணைகள் நிறைவேறின

### நிர்வாகசபை யாட்சி வேண்டாம்

திரு. பண்டாரநாயகாவின் எதிர்ப்பு

நேற்றுமாலை 230 மணிக்கு அரசாங்கசபை கூடியபொழுது திரு. பெரேரா அவர்களின் ஐந்தாவதும் ஆறாவதும் திருத்தப் பிரேரணைகள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டன.

முதலாவதாக ஸ்ரீமதி நேசம் சரவணமுத்து அவர்கள் வைத்தியக் கல்லூரிப் பொக்கிஷ அதிகாரி சம்பந்தமான ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார். வேறுபல அங்கத்தினர் சில பிரேரணைகளை முன்னறிக்கை செய்தார்கள்.

(அனுசரணை: லேக் ஹவுஸ் ஊடக நூலகம்)

# இஸ்லாமிய புது வருடம் சகலருக்கும் சுபீட்சமாக அமைய பிரார்த்திப்போம்

அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபை

மலர்ந்துள்ள ஹிஜ்ரி 1446 இஸ்லாமிய புதுவருடத்தில், நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் சமாதானமும் ஐக்கியமும் மலர்ந்து, நாட்டின் சகல விதமான நெருக்கடியான நிலைமைகளும் நீங்கி மக்கள் அனைவரும் மகிழ்ச்சியுடனும் சுபீட்சத்துடனும் வாழ்வதற்கு வல்ல நாயன் அல்லாஹ் அருள் புரியட்டும் என்று அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா தெரிவித்துள்ளது.

இஸ்லாமிய புதுவருடத்தின் நிமித்தம் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில், ஹிஜ்ரி நாட்காட்டி என்பது இஸ்லாத்தின் மிகப்பெரும் திருப்புமுனையாக அமைந்த ஹிஜ்ரத்தை அடிப்படையாகக் கொண்டு கலீஃபா உமர் ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் ஆட்சிக்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட நாட்கணிப்பு முறையாகும். ஒவ்வொரு சமுதாயத்தினருக்கும் அவரவர் கலாசாரங்கள், பண்பாடுகளின் அடிப்படையில் காலக் கணக்கீட்டு முறைகள் உள்ளன.

இதே போன்று முஸ்லிம்களுக்கும் தனித்துவமான ஒரு நடைமுறை இருக்கவேண்டும்.

06

## சுற்றுலாத்துறையால் ரூபா1.5பில் வருமானம்

சுற்றுலாத் துறை மூலம் இந்த வருடம் முதல் ஆறு மாதங்களில் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் வருமானம் கிடைத்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது. சுற்றுலாத்துறை வருமானம் இந்த ஆண்டு ஜனவரி முதல் ஜூன் வரை 1.55 பில்லியன் அமெரிக்க டொலரை எட்டியுள்ளது.அதேவேளை 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் இத்தொகை 77.9 சதவீத அதிகரிப்பாக இருந்ததாகவும் மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. இக்காலப்பகுதியில் பெறப்பட்ட வருமானம் 875 மில்லியன் அமெரிக்க டொலராகும்.

2024 இன் முதல் ஆறு மாதங்களில், 01 மில்லியனுக்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர். இக்காலப்பகுதியில் 1,010,249 சுற்றுலாப்பயணிகள் வருகை தந்ததாக மத்திய வங்கியின் புள்ளி விபரங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

06

## தொழிற்சங்கப் போராட்டத்தில் நாம் பங்கேற்கப் போவதில்லை

அகில இலங்கை தாதியர் சங்கம் தெரிவிப்பு

*(லோரன்ஸ் செல்வநாயகம்)*

அரச சேவை தொழிற்சங்கங்கள் இரண்டு தினங்களுக்கு முன்னெடுக்கவுள்ள தொழிற்சங்கப் போராட்டத்தில், தமது தொழிற்சங்கம் பங்கேற்கமாட்டாதென, அகில இலங்கை தாதியர் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

அந்த தொழிற்சங்கத்தின் பொதுச் செயலாளர் எஸ்.பி மெதிவத்த இது தொடர்பில் நேற்று தெரிவிக்கையில்; சுகாதாரத்துறையினர் வேலை நிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்வதால் நோயாளிகளே பாதிப்புகளை எதிர் நோக்க நேரும் என குறிப்பிட்டுள்ளார்.

அரச சேவை தொழிற்சங்கங்கள் இன்றும் நாளையும் தொழிற்சங்கப் போராட்டமொன்றை மேற்கொண்டு, இரண்டு தினங்களுக்கு பணி பகிஷ்கரிப்பை மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளன. இந்த போராட்டங்களில் கலந்து கொள்ளப் போவதில்லை என அகில இலங்கை தாதிமார் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

06

## மாணிக்க கங்கையில் நீராடியவர் முதலை தாக்கி உயிரிழப்பு

கதிர்காமம் மாணிக்க கங்கையில் நீராடச் சென்ற நபர் ஒருவர், முதலை தாக்கியதில் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாணிக்க கங்கையின் இரண்டாம் இலக்க பாலத்திற்கும் அபிநவாராம விகாரைக்கும் இடையில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. முதலை தாக்கியதால் இவர் நீரில் மூழ்கியிருக்கலாம் எனத் தெரிய வருகிறது.

உயிரிழந்தவர் எவரென இதுவரை அடையாளம் காணப்படவில்லை.கதிர்காமத்துக்கு வந்த பக்தராக இவர் இருக்கலாம் என சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்தனர். இதேவேளை ருஹுணு கதிர்காமம் எசல பெரஹெராவின் வீதி உலா ஆரம்பமாகிய சிறிது நேரத்தில், ஊர்வலத்தில் சென்ற யானை ஒன்று குழப்பமடைந்தது. இதில், 13 பேர் காயமடைந்ததாக கதிர்காமம் பொலிஸார் தெரிவித்தனர்.

06

## பிரசித்த ஏல விற்பனை

28ம், 29ம் டிசம்பர் 2023, 29ம், 30ம் ஜனவரி 2024, 26ம், 27ம் பிப்ரவரி 2024, 27ம், 28ம் மார்ச் 2024, 29ம், 30ம் ஏப்ரல் 2024, 30ம், 31ம் மே 2024, 27ம், 28ம் ஜூன் 2024 இல் மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் ருடே ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. மல்டி பினான்ஸ் பி எல் சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த தவறிய காரணங்களினால் ஏல விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ள தங்க நகைகள் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| மாத்தறை, மருதானை, கண்டி, குருநாகல், ரத்தினபுரி, கம்பஹா, அனுராதபுரம். | 24 ஜூலை 2024 |

மல்டி பினான்ஸ் பிஎல்சி எந்த அறிவிப்பும் இல்லாமல் ஏலத்தை ரத்து செய்வதற்கும் ஒத்திவைப்பதற்கும் உரிமையை கொண்டுள்ளது.

MULTI FINANCE

இல.275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

## பத்திரிகை அறிவித்தல்

### குளிரூட்டி மீட்பு இயந்திரமொன்றை கட்டமைக்கும் போட்டி

### சர்வதேச ஓசோன் தினம் 2024

சுற்றாடல் அமைச்சின் வாயு வள முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் பிரிவினால் சர்வதேச ஓசோன் தினத்திற்கு இணைவாக குளிரூட்டி மீட்பு இயந்திரமொன்றை கட்டமைக்கும் (Fabrication of refrigerant recovery machine) போட்டி ஒன்று நடாத்தப்படவுள்ளது. இதன் பிரகாரம் பின்வரும் இரண்டு வகுதிகளின் கீழ் போட்டிகள் நடாத்தப்படும்.

i. தொழில்நுட்ப பயிற்சி நிறுவன மட்டத்திலான போட்டி

மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவில் (TVEC) பதிவு செய்துள்ள அரச மற்றும் தனியார் துறை தொழில்நுட்ப மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனங்கள் இதற்கு முன்வரலாம்.

ii. திறந்த மட்டத்திலான போட்டி

எந்தவொரு நபர் அல்லது நிறுவன மட்டத்தில் இதன்பொருட்டு முன்வந்து ஆக்கத்தை முன்வைக்கலாம்.

குளிர்பதன மீட்பு இயந்திரத்தை உருவாக்கும்போது புதிய அல்லது பாவிக்கப்பட்ட பின்வரும் உபகரணங்களைப் பயன்படுத்தலாம்.

i. வாயு பீடனக் கருவி (Compressor)
ii. கன்டன்சர் சகிதமான விசிறி (Condenser with fan)
iii. உலர் வடிகட்டி (Filter dryers)
iv. வால்வு (Inlet Outlet valve)
v. பிரதான சுவிட்ச் (Main Switch)
vi. பாதுகாப்பு சுவிட்ச் மற்றும் வால்வு (Safety switches and valves)

**முக்கியம்**

இதற்குப் புறம்பாக ஏனைய உதிரிப்பாகங்களைப் பயன்படுத்துவதற்கு போட்டியாளர்களுக்கு அனுமதி உண்டு. (இது உற்பத்தி மதிப்பீட்டின்போது மேலதிக அனுகூலமாகும்)

குளிரூட்டி மீட்பு இயந்திரத்தை உருவாக்கும்போது பின்வரும் மூலப் பிரமாணங்களை கவனத்திற் கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| வினைத்திறன் | குளிரூட்டியின் வினைத்திறனை ஒன்றிணைப்பதற்காக இயந்திரத்தை திட்டமிடுதல் வேண்டும். |
| பாதுகாப்பு விசேடத்துவம் | குளிரூட்டியை கையாளும்போது பாதுகாப்பு மிகவும் முக்கியமானது என்பதுடன் தன்னியக்க நிறுத்தும் இயந்திரம் போன்ற பாதுகாப்பு பாகங்களை உள்ளடக்குதல் வேண்டும். |
| இயந்திரத்தின் பாரம் | இயந்திரம் இலகுவாக கையில் எடுத்துச் செல்லக்கூடிய பாரத்தில் இருத்தல் வேண்டும். |
| பாவனை வசதி | இயந்திரம் சூழலுக்கு இசைவானதாகவிருத்தல் வேண்டும், இயக்குவதற்கு தெளிவான அறிவுரைகள் இருத்தல் வேண்டும். |
| நீடித்துழைத்தல் மற்றும் நம்பகத்தன்மை | நீடித்துழைத்தல் மற்றும் நம்பகத்தன்மையை உறுதி செய்தல் வேண்டும். |
| கொள்ளளவு | குறைந்தபட்சம் ஒரு மணித்தியாலத்தில் 2kg க்கு மேல் குளிர்பதனத்தை மீட்கக்கூடியதாகவிருத்தல் வேண்டும். |
| வரைபடம் (diagram) | வரைபடம் (diagram) வழங்குதல் வேண்டும். |
| இணைத்தல் | 1/4” SAE male |

சகல போட்டி பண்டங்களுக்கும் பின்வரும் வகையில் பரிசுகள் வழங்கப்படும்.

1ஆம் பரிசு ரூபா 250,000.00
2ஆம் பரிசு ரூபா 150,000.00
3ஆம் பரிசு ரூபா 100,000.00
திறமைப் பரிசாக 10,000.00 வீதம் 10 பேருக்கு

**போட்டிக்கு தோற்றுதல்**

i. போட்டிக்கு தனிநபராக அல்லது குழுவொன்றாக அல்லது நிறுவனமாக முன்வரலாம்.

ii. தகைமை வாய்ந்த விண்ணப்பதாரர்கள் தம்மால் / தமது நிறுவனத்தினால் உற்பத்தி செய்யப்பட்ட குளிரூட்டி மீட்பு இயந்திரமொன்றின் 5 நிமிடத்திற்குக் குறைவாக தயாரிக்கப்பட்ட வீடியோ பதிவு அல்லது புகைப்படத்தை 2024.08.10ஆம் திகதிக்கு முன் techteam@nou.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சல் மூலம் அல்லது 070 2480169 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு WhatsApp செய்தல் வேண்டும்.

iii. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரரின் ஆளடையாளத்தை தொழில்நுட்பம் மற்றும் தொழிற் பயிற்சி நிறுவனமானால் நிறுவனத்தின் தலைவரினால் வழங்கப்பட்ட கடிதமொன்று / தனியார்துறை நிறுவனமானால் நிறுவனம் செயற்பாட்டில் உள்ளது என்பதாக கிராம சேவகரின் கடிதமொன்றை தேசிய அடையாள அட்டை / கடவுச் சீட்டின் பிரதியொன்றுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

iv. இந்த போட்டியின்போது தெரிவு செய்யப்படும் போட்டியாளர் குளிரூட்டி மீட்பு இயந்திரமொன்றின் உருவாக்கம் மற்றும் அது தொடர்பான குறுகிய விளக்கக்காட்சியொன்றை செய்தல் வேண்டும்.

v. நடுவர்களின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

### குளிரூட்டி மீட்பு இயந்திரமொன்றை கட்டமைக்கும் போட்டி

### சர்வதேச ஓசோன் தினம் 2024

**போட்டி விண்ணப்பப் படிவம்**

1. பெயர் / நிறுவனம்
2. போட்டி வகுதி
3. முகவரி:
4. தேசிய அடையாள அட்டை இலக்கம்:
5. மின்னஞ்சல் முகவரி:
6. தொலைபேசி இலக்கம்:

| மாகாணம் | மாவட்டம் | பிரதேச செயலாளர் அதிகாரப் பிரதேசம் | கிராம சேவையாளர் பிரிவு |
|---|---|---|---|
| | | | |

https://forms.office.com/Pages/ResponsePage.aspx?id=Xtvls0QpN0iZ9XSIrOVDGaqAKsuCUT1Nt31xlK1kOd1URVFQVTg0NFM3VVJ PMURNSFhRQVNNWU1SVi4u

**விண்ணப்பத்தை அனுப்புதல்:**

மேற்கூறிய QR Code / Link என்பவற்றை பயன்படுத்தி, 070 2480169 எனும் தொலைபேசி இலக்கத்திற்கு WhatsApp மூலம் அல்லது பணிப்பாளர் (வாயு வள முகாமைத்துவம் மற்றும் தேசிய ஓசோன் பிரிவு), ‘சொபாதம் பியச’, இல. 416/C/1, ரொபட் குணவர்தன மாவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

இந்த குளிரூட்டி மீட்பு இயந்திரம் என்னால் / எமது நிறுவனத்தினால் உருவாக்கப்பட்டது என உறுதி செய்கின்றேன் / செய்கிறோம். எந்தவொரு வேளையிலும் குறித்த தகவல்களை சுற்றாடல் அமைச்சின் தேசிய ஓசோன் பிரிவிற்கு வழங்குவதற்கு கட்டுப்பட்டுளோம்.

..........................
**கையொப்பம்**

**செயலாளர்,**
**சுற்றாடல் அமைச்சு**

தினகரன்
THINAKARAN
தினகரன்

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834
தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆனி மாதம் 24ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 முஹர்ரம் பிறை 01

**குறள் தரும் சிந்தனை**

அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையா துலகு

*அறிவுப் பஞ்சம்தான் மிகக் கொடுமையான பஞ்சமாகும். மற்ற பஞ்சங்களைக்கூட உலகம் அவ்வளவாகப் பொருட்படுத்தாது.*

# நாடு மீண்டெழுந்து வருகையில் சீர்குலைக்கும் செயற்பாடுகள்!

நாடு பொருளாதார வீழ்ச்சியில் இருந்து கட்டம் கட்டமாக மீட்சி பெற்று நம்பிக்கை தரும் வகையில் முன்னேற்றப்பாதையில் பிரவேசித்திருக்கிறது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு, வழிகாட்டல்களுடன் முன்னெடுக்கப்படும் பொருளாதார வேலைத்திட்டங்களின் பயனாக சர்வதேச நிதி நிறுவனங்களும், நிதியுதவி வழங்கும் நாடுகளும் இலங்கை்கு உதவி, ஒத்துழைப்புகளை வழங்கவும் முன்வந்துள்ளன. இந்தச் சூழலில் தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பது நாட்டுக்கோ, மக்களுக்கோ நன்மையாக அமையாது என்பதுதான் சமூக ஆர்வலர்களின் கருத்தாக உள்ளது.

ஏனெனில் 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நாட்டில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் காரணமாக நாடு கடும் நெருக்கடிகளுக்கும் பாதிப்புகளுக்கும் உள்ளானது. அத்தியாவசியப் பொருட்கள் உள்ளிட்ட அனைத்து பொருட்களது விலைகளும் பெரிதும் அதிகரித்திருந்தன.

அவ்வாறான சூழலில் அதே ஆண்டு ஏப்ரல் மாதப் பிற்பகுதியில் இலங்கை வங்குரோத்து நிலையை அடைந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது. அதனால் எந்தவொரு நாடும் இலங்கைக்கு கடனுதவி வழங்க முன்வராத நிலை உருவாகி இருந்தது. அத்தோடு இந்நாட்டின் கடன் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படாத நிலைமையும் ஏற்பட்டிருந்தது.

அவ்வாறான இக்கட்டான சூழலில் நாட்டின் தலைமையை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நாட்டை மீளக்கட்டியெழுப்புவதற்கான பொருளாதார வேலைத்திட்டங்களை விரிவான அடிப்படையில் ஆரம்பித்தார். அவ்வேலைத்திட்டங்கள் நாட்டுக்கும் மக்களுக்கும் பொருத்தமானவையாகவும் நடைமுறைச் சாத்தியமானவையாகவும் அமைந்திருந்தன. கட்சி, அரசியல் நலன்களுக்கு அப்பால் நாட்டின் நலன்களை முன்னிலைப்படுத்தியவையாக இவ்வேலைத்திட்டங்கள் விளங்கின.

இதன் பயனாக பொருளாதார நெருக்கடி காலத்தில் மக்கள் முகம்கொடுத்த பாதிப்புகளும் அசௌகரியங்களும் கட்டம் கட்டமாக நீங்கலாயின. அதனைத் தொடர்ந்து நாட்டை கட்டியெழுப்பும் பொருளாதார வேலைத்திட்டங்களுக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி, ஒத்துழைப்பும் பெற்றுக்கொள்ளப்பட்டன.

இவ்வாறான நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்போடு நாட்டை மீளக்கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படலாயின. அதன் விளைவாக நாட்டின் பொருளாதாரம் தொடர்ந்தும் நம்பிக்கை தரும் வகையில் முன்னேற்றப்பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. நாடு பொருளாதார ரீதியில் பெற்றுக்கொள்ளும் நன்மைகளை மக்களுக்கு பெற்றுக்கொடுக்கவும் அரசாங்கம் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. பொருட்களின் விலைக்குறைப்பாகவும், நிவாரண உதவிகளாகவும், சம்பள மற்றும் கொடுப்பனவு உயர்வாகவும் அவை நாட்டின் பிரஜைகளுக்கு அவ்வப்போது பெற்றுக் கொடுக்கப்படுகின்றன.

இவ்வாறு நாடு முன்னேற்றப்பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் நிலையில் உதவி வழங்கும் நாடுகளும் சர்வதேச நிதியுதவி நிறுவனங்களும் இலங்கையை சாதகமாக நோக்கும் நிலை உருவாகியுள்ளது.

எனினும் பொருளாதார நெருக்கடியின் தாக்கங்களும் அசௌகரியங்களும் இன்னும் முற்றுமுழுதாக நீங்கியதாக இல்லை. அனைத்து நெருக்கடி, தாக்கங்களில் இருந்து மீட்சி பெற்றிடவும் நிலைபேறான பொருளாதார அபிவிருத்தியை துரித கதியில் அடைந்திடுவதை இலக்காகக் கொண்டும் அனைத்து வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இவ்வாறான சூழலில் நாடு தேர்தலை எதிர்நோக்கியுள்ளது. இந்தச் சூழலில் சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்கங்கள் வேலைநிறுத்தங்களையும் தொழிற்சங்க நடவடிக்கைகளையும் முன்னெடுக்கத் தொடங்கியுள்ளன. கடந்த சில வாரங்களாக இந்நிலையை பரவலாக அவதானிக்க முடிகிறது. அந்த வகையில் இன்றும் நாளையும் கூட சில தொழிற்சங்கங்கள் பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுக்கப் போவதாகக் கூறியிருந்தன.

பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீட்சி பெற்று நம்பிக்கை தரும் வகையில் முன்னேற்றகரமான பாதையில் பயணித்துக் கொண்டிருக்கும் நாட்டிற்கு இத்தொழிற்சங்க நடவடிக்கைகள் ஆரோக்கியமாக அமையாது. அவை பொருளாதார முன்னேற்றத்திற்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு பாதிப்பதாக மாத்திரமல்லாமல் அத்திட்டங்களுக்கு இடையூறாகக்கூட அமைந்துவிடலாம். அதேநேரம் இத்தொழிற்சங்க நடவடிக்கைகள் பொருளாதார ரீதியில் இலங்கையைக் கட்டியெழுப்ப உதவும் நாடுகளுக்கும் சர்வதேச நிதியுதவி நிறுவனங்களுக்கும் கூட தவறானதும் பிழையானதுமான செய்தியைக்கூட வழங்கலாம். அவை நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களுக்கு பாதிப்பதாகக்கூட அமையலாம்.

மேலும் கடந்த காலங்களைப் போன்று தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுக்கக்கூடிய காலமும் இதுவல்ல. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்புடன் பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைவதற்கான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு கொண்டிருக்கும் சூழலில் முன்னெடுக்கப்படும் தொழிற்சங்க நடவடிக்கைகள் நாட்டுக்கோ, மக்களுக்கோ நன்மை பயப்பதாக அமையாது. இதனை ஒவ்வொரு குடிமகனும் உணர வேண்டும்.

ஆகவே நாட்டினதும் மக்களினதும் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து செயற்பட வேண்டிய பொறுப்பு ஒவ்வொரு தொழிற்சங்கத்திற்கும் உள்ளது. அது நாட்டுக்கும் மக்களுக்கும் அளிக்கும் பாரிய சேவையாக அமையும் எனலாம்.

editor.tkn@lakehouse.lk

# ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்துறையில் தனிமுத்திரை பதித்தவர் மு.சடாட்சரன்

## மூத்த இலக்கியவாதியின் மறைவு

இலங்கையின் தலைசிறந்த நவீன தமிழ் இலக்கியவாதியாகத் திகழ்ந்த கிழக்கிலங்கையின் புகழ்பூத்த மூத்த கவிஞர் கலாபூஷணம் மு.சடாட்சரன் நேற்றுமுன்தினம் சனிக்கிழமையன்று தனது 84 ஆவது அகவையில் காலமானார். அன்னாரின் நல்லடக்கம் நேற்று பெரியநீலாவணையில் இடம்பெற்றது.

இவர் கல்முனையை பிறப்பிடமாகவும், பெரியநீலாவணையை வசிப்பிடமாகவும் கொண்டவர். தனது ஆரம்பக்கல்வியை கல்முனை இராமகிருஷ்ண மிஷன் மகா வித்தியாலயத்தில் கற்றார். உயர்கல்வியை கல்முனை உவெஸ்லி உயர்தரப்பாடசாலையில் கற்றவர் பின்னர் மட்டக்களப்பு ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் இணைந்து பயிற்சிபெற்றார். கவிஞர், பாடலாசிரியர், சிறுகதை ஆசிரியர், சஞ்சிகை ஆசிரியர், நாடகக் கலைஞர், விமர்சகர், திறனாய்வாளர், எழுதுவினைஞர், ஆசிரியர், அதிபர், உதவிக்கல்விப் பணிப்பாளர் என பல்வேறு துறைகளில் கால்தடம் பதித்து சிறப்பாக தமது பணியினை செய்த பல்துறை வித்த



கராக மறைந்த மூத்த கவிஞர் மு.சடாட்சரன் திகழ்ந்தார்.

ஈழத்து கலை இலக்கியப் பரப்பில் தனக்கென தனி முத்திரை பதித்தவர் கலாபூஷணம் மு.சடாட்சரன். ' மேட்டு நிலம்' சிறுகதை தொகுதி, 'புதிய பாதை' கவிதை தொகுதி ஆகிய இரு நூல்களை வெளியிட்டு சாகித்திய விருது, கொடேகே தேசிய விருது, கிழக்கில் சிறந்த தேசிய நூல் விருது என பல விருதுகளையும் பலரதும் பாராட்டையும் பெற்றவர். அத்துடன் வித்தகர் விருது, கலாபூஷணம் விருது, கொழும்பு கம்பன் கழகத்தின் மகரந்தசிறகு விருது ஆகியவற்றையும் பெற்றுள்ளார்.

1940.05.06 இல் பிறந்த அவருக்கு ஒரு மகன், ஐந்து பெண் பிள்ளைகள் உள்ளனர். இவரது மனைவி அவரது கலைஇலக்கியப் பணிக்கு துணையாக இருந்து ஊக்கியாக செயற்பட்டுள்ளார். தனது இறுதி மூச்சுவரை எழுதுவதையே உயிர் மூச்சாக அவர் கொண்டிருந்தவர். கிழக்கின் கவிச்சக்கரவர்த்தியாக திகழ்ந்த கவிஞர் நீலாவணனின் அன்புக்குப் பாத்திரமானவர். அவரோடு 15 வருடங்கள் நெருங்கிப் பழகி இலக்கிய சேவைகள் செய்தவர். அறுபது ஆண்டுகளுக்கும் மேலான இலக்கிய அனுபவம், மரபுசார் இலக்கியப் புலமை, புதிய வடிவங்களின் நுட்பங்களைப் புரிந்து கொண்டு நன்கு கையாளத்தக்க ஆற்றல், ஆளுமை என்பன வாய்க்கப் பெற்றவர்.

தனது படைப்புகளில் வாழ்வியலை, சமூக மறுமலர்ச்சியை, மானுட நேயத்தை, ஒருமைப்பாட்டை, போரியல் சூழலை கலைநயத்தோடு தருபவர்.

கவிஞர் மு.சடாட்சரனின் இழப்பு கலை இலக்கியப் பரப்பில் ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும்.

**துஜியந்தன்...**
(பாண்டிருப்பு தினகரன் நிருபர்)

# பத்து வருட நிறைவை கொண்டாடும் பிரித்தானிய இலங்கைச் சங்கம்

பிரித்தானிய இலங்கைச் சங்கம் 2014 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அது ஓர் இலாப நோக்கற்ற, அரசியல் சார்பற்ற அமைப்பாகும். தற்போது இங்கிலாந்தில், அங்குள்ள இலங்கையர்களுக்கான முன்னணிக் குரலாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

உலகம், கடந்த 10 ஆண்டுகள் தொழில்நுட்பம், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற துறைகளில் முன்னேற்றகரமான, பல மாற்றங்களைக் கண்டுள்ளது. அது உருவாக்கப்பட்டதில் இருந்து பிரித்தானிய இலங்கைச் சங்கம் சமூக ஒருங்கிணைப்பு, நிலையான வளர்ச்சி, வர்த்தகம், சுகாதாரத் துறைகளில் கவனம் செலுத்தும் அமைப்பாகவும் கூட்டாண்மையில் ஓர் வெற்றியாளராகவும் இருந்து வருகின்றது.

இத்தருணத்தில் பிரித்தானிய இலங்கைச் சங்கம், சமூகங்களை ஒன்றிணைப்பதிலும் அனைவருக்கும் சிறந்ததை அடைவதற்காக உழைக்கும் ஓர் ஒருங்கிணைந்த, ஒருங்கிணைக்கப்பட்ட சமூகத்தை வளர்ப்பதிலும் தீவிரமாக கவனம் செலுத்தி வருகின்றது.

2024 ஆம் ஆண்டில் 'வேற்றுமையில் ஒற்றுமையை கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் 10 ஆண்டு நிறைவை கொண்டாடும் வகையில், ஜுன் 18 ஆம் திகதி மதிய உணவு விழா லண்டனில் உள்ள கலிடோனியன் கழகத்தில் நடைபெற்றது.

கோமான்களான நஸ்பி, ஹியூகோ ஸ்வைர், பிரித்தானியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் ரோஹித போகொல்லாகம மற்றும் FCDO ஓவைச் சேர்ந்த லெஸ்லி கிரயக் ஆகியோர் பிரித்தானியாவில் உள்ள இலங்கை சமூகம் பற்றி உரை நிகழ்த்தினர்.

அதிதிகளாக சேர்பியாவின் எச். ஆர். எச் இளவரசி கத்தரினா, மெய் சிம் லய் OBE DL, 2007 ஆம் ஆண்டு தொடக்கம் லண்டன் போரோவின் மாட்சிமை மிகுந்த மகாராணியின் பிரதிநிதியாக செயற்பட்டு வரும் லேடி டி சில்வா மற்றும் அவரது மாட்சிமையின் தி குயின்ஸ் பிரதிநிதி மற்றும் பௌத்த சங்கத்தின் தலைவர் கலாநிதி டெஸ்மன்ட் பிடுள்ப் சீபீஈ Desmond Biddulph CBE ஆகியோர் கலந்து கொண்டனர்.

10 ஆண்டு நிறைவு கொண்டாட்டம் குறித்து கருத்து தெரிவித்த பிரிஸ்லாவின் தலைவரும் நிறுவனருமான கலாநிதி சீமார் சிவார்தீன், அவர் கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக ஸ்பெக்சேவர்ஸ் நியூ மோல்டனிற்காக கண் மருத்துவ செயற்பட்டு வருவதாகக் கூறினார்.

பிரித்தானிய இலங்கை சமூகத்தை ஒன்றிணைத்து, அதன் வெற்றியை கொண்டாடுவதற்கும் அங்கீகரிப்பதற்கும் குரல் கொடுக்கும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ள முடிந்ததனையிட்டு நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம் எனவும் அவர் கூறினார்.

# மலிவான மின்சாரத்தை பெற்றுக் கொள்வதற்கான மாற்றுவழிகளை வலியுறுத்தும் அதானி நிறுவனம்

அண்மையில் அதானி குழுமத்தின் உலகளாவிய நிறுவனத் தலைமையகத்தில் இலங்கை ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போது, Adani Green Energy இன் ஸ்ரீ லங்கா திட்டத்திற்கு தலைமை தாங்கும் Adani Power Ltd மற்றும் Adani Energy Soluti ons Ltd முகாமைத்துவப் பணிப்பாளர் அனில் சர்தானா, இலங்கையின் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தொடர்பான முக்கியத்துவத்தை எடுத்துக் கூறினார்.

வருடம் முழுவதும் சூரிய ஒளி, காற்று, நீர் வலு ஆகியவற்றைப் பயன்படுத்தி தொடர்ச்சியாக பசுமை வலுசக்தியை பெறுவதற்காக இலங்கை கொண்டுள்ள திறனை சர்தானா இங்கு சுட்டிக்காட்டினார்.

சூரிய சக்தி, காற்று வலுசக்தி, நீர் சக்தி ஆகியவற்றின் மூலம் போட்டித் தன்மை மிக்க பசுமை வலுசக்தியை உற்பத்தி செய்வதற்கான வளங்களை இலங்கை பரந்த அளவில் கொண்டுள்ளது. அத்துடன் பசுமை ஐதரஜன் மற்றும் பசுமை அமோனியா போன்ற துணை உற்பத்தி மூலங்களை உருவாக்கி ஏற்றுமதி செய்வதிலும் நாடு கவனம் செலுத்த வேண்டும் என்று சர்தானா இங்கு தெரிவித்தார்.

இது மேலதிக வருமானத்தை உருவாக்குவதன் மூலமும் பகிரப்படும் வருமானத்தின் மூலமும் மக்களுக்கு பயனை வழங்க முடியும்.

இலங்கையில் மன்னார் மற்றும் பூநகரி பகுதியில் இரண்டு காற்றாலை மின் உற்பத்தி நிலையங்களை அமைக்க அதானி நிறுவனம் முன்வந்துள்ளது. இதன் மூலம், ஒரு பில்லியன் டொலர்களுக்கும் அதிக முதலீட்டைக் கொண்ட மொத்தமாக 484 MW திறன் கொண்ட மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியும். அத்துடன் இது நாட்டுக்குக் கிடைக்கும் மிகப்பெரிய நேரடி வெளிநாட்டு முதலீடாகவும் இருக்கும். இத்திட்டத்திற்கு, ஒரு அலகிற்கு 8.25 சத டொலர் கட்டணத்தில் அமைச்சரவை அனுமதியை நிறுவனம் பெற்றுள்ளது. அதானி இலங்கைக்கு வழங்கிய கட்டணமானது அதன் முழு ஒப்பந்தக் காலமான 20 வருடங்களுக்குமானது என, சர்தானா விளக்கினார். கட்டணங்களில் வெளிப்படைத்தன்மையின் அவசியத்தை வலியுறுத்திய சர்தானா, மின்சார நிறுவனங்கள் ஆரம்பத்தில் குறைந்த விலையை நிர்ணயித்த போதிலும், பின்னர் கட்டணங்களை அதிகரிக்கின்றன. இதனால் நுகர்வோர் மீது அதிக சுமை ஏற்படுகிறது என்றார்.



**இலங்கையின் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி தொடர்பான முக்கியத்துவத்தை விளக்குகிறார் Adani Power Ltd மற்றும் Adani Energy Solutions Ltd முகாமைத்துவப் பணிப்பாளர் அனில் சர்தானா**

"வெளிப்படைத்தன்மை முக்கிய விடயமாகும். அவர்கள் குறிப்பிட்ட தொகையை வசூலித்தால், அதுவே கட்டணப்பட்டியலாக இருக்க வேண்டும். இதில் மறைக்கப்பட்ட கட்டணங்கள் இருக்கக்கூடாது. எதிர்வரும் 20 வருடங்களில் எந்த மாற்றமும் இல்லாமல் நிலையான கட்டணத்தை வழங்க வேண்டுமா அல்லது எதிர்காலத்தில் அதிக கட்டணங்கள் மூலம் இரட்டிப்பாகும் சாத்தியமுள்ள குறைந்த கட்டணம் வழங்கப்பட வேண்டுமா? இந்த இக்கட்டான நிலையை இலங்கை புரிந்து கொள்ள வேண்டும். யாரால், எந்தளவிலான காலக்கெடுவிற்குள் இதனை வழங்க முடியும் என்பதை நன்கு அறிந்த நபர்கள் ஏற்கனவே அறிவார்கள்" என சர்தானா குறிப்பிட்டார்.

தமது நிறுவனம் இலங்கையின் மின்சாரத் துறைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருவதாகவும், திறமையாளர்கள் மற்றும் சூழல் மேம்பாட்டுக்கு பங்களிக்கும் வகையில் கட்டுமானம், செயற்பாடுகள் மற்றும் பராமரிப்பு ஆகிய இரண்டிற்கும் குறைந்தபட்சம் 95% உள்நாட்டு பணியாளர்களை பணிக்கு அமர்த்தவுள்ளதாக சர்தானா குறிப்பிட்டார். எதிர்காலத்தில் வரவுள்ள திட்டங்களுக்காக, வெளிநாடுகளில் இருந்து கொண்டு வருவதற்குப் பதிலாக இந்தத் திறமையாளர்களை உள்நாட்டிலேயே பெறக்கூடிய வகையிலும், திட்ட நடைமுறைப் படுத்தல் தொடர்பில் ஏனைய தொழில்துறைகளுக்கு உதவவும் இத்திட்டம் உதவுகின்றது.

அதானி திட்டம் தொடர்பில் எழுப்பப்படுகின்ற சூழல் பிரச்சினைகள் தொடர்பில் விளக்கிய சர்தானா, அதானியின் காற்றாலை தொகுதிகள் உள்வரும் பறவைக் கூட்டங்களைக் கண்டறிந்து விசிறிகளை இடைநிறுத்துவதற்கு AI அடிப்படையிலான ரேடார் கட்டமைப்புகளும், பறவைகள் அவற்றின் மீது மோதுவதை தடுக்க வண்ணத்தால் அடையாளப்படுத்தப்பட்ட விசிறிகளும் பொருத்தப்படும் என அவர் விளக்கினார்.

அதிக விலை கொண்ட எரிபொருள் அடிப்படையிலான மின் உற்பத்தியை நம்பியிருப்பதை இலங்கை மறுபரிசீலனை செய்ய வேண்டும் எனவும், மலிவான மின்சாரத்தை பெறுவதற்காக, இந்தியாவுடன் மின் பரிமாற்ற வழித்தடத்தை நிறுவுதல் போன்ற செலவு குறைந்த மாற்று வழிகளை இலங்கை ஆராய வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

# இன்சைட் ஸ்கூல் ஒப் பிஸினஸ் மெனேஜ்மென்ட் வழிகாட்டலால் உயர்ந்தவர் ரிப்திகார் ஜுனைத்

வெள்ளவத்தையில் அமைந்திருக்கும் மினி எவர் சுப்பர் (மினிமார்ட்) மற்றும் எவர் சுப்பர் எக்ஸ்பிரஸ் டெலிவரி சென்ரர் ஆகிய இரு வியாபார நிலையங்களும் சமயலைறைத் தேவையை நிறைவேற்றும் அனைத்து வகையான பொருட்களையும் (FMCG)வாடிக்கையாளர்களின் காலடிக்கே கொண்டு சேர்க்கின்றன. வாடிக்கையாளர்களின் நலனை இலக்காகக் கொண்டு இயங்கும் இவ்வியாபார நிறுவனம் மக்கள் மனங்களில் நீங்காத இடத்தை பிடித்து வருகின்றது. இந் நிறுவனத்தின் மகுட வாசகமாக அமைந்திருப்பது ஆரோக்கிய உணவை வழங்குவதால் மகிழ்ச்சியான வாழ்வை ஏற்படுத்துவதாகும் என்பதாகும்(Eversuper is creating to the customers 'nuutrition,health,and happiness needs withconvenience faster service and authenticity at a reasonable price)

ஐரோப்பிய நாடுகளிலிருந்து கிடைக்கும் ஓடர்கள் முதல் பல பிரபலங்களுடைய ஓடர்கள் மற்றும் பிரபல்யமான நிறுவனங்கள் வழங்கும் ஓடர்கள் என இலங்கை முழுதும் மளிகைப் பொருட்களை (FMCG)விநியோகம் செய்து மிக பரபப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறது அந்நிறுவனம்.

இந்நிறுவனத்தின் உரிமையாளரான ரிப்திகார் ஜுனைத் தொழிற் சந்தையில் வளர்ந்து வரும் இளம் வர்த்தகராவார்.

பொருட்களை ஓடர் செய்தவுடன் அதனை காலடியில் உடனடியாக டெலிவரி செய்துவிடுவார்கள். தனது நிறுவனம் வழங்கும் பொருட்கள் குறித்து ரிப்திகார் ஜுனைத் கருத்துக் கூறும்போது, தனக்கும் தனது வீட்டுக்கும் எது பிடிக்குமோ அவ்வாறான பொருட்களையே தனது வாடிக்கையாளர்களுக்கு விநியோகிப்பதாகத் தெரிவிக்கிறார். தனது வியாபாரத் துறையில் பல புதுமைகளை செய்துவரும் இவர் பரம்பரை பரம்பரையாக வர்த்தகம் செய்து வரும் ஒரு குடும்த்தைச் சேர்ந்தவரல்ல. தனது முயற்சி நேர்மை மற்றும் அயராத



உழைப்பு மூலமாக ஒரு சிறந்த வழிகாட்டலின் மூலம் வியாபாரத் துறையில் முன்னணி வகித்து வருகிறார்.

கண்டி தெல்தோட்ட பல்லேகம என்ற பின் தங்கிய கிராமத்தில் ஒரு விவசாயத் தந்தைக்கு பிறந்த இவர் தனது தந்தை விவசாயத்தில் தோல்விகளை சந்தித்த தருணங்களிலெல்லாம் தனது தந்தையின் முகம் வாடிப்போவதைக் காண்கின்றபோது, குடும்பத்தின் வறுமைச் சுமையை தீர்க்க எப்படி உதவலாமென தரம் ஒன்பதில் கல்வி கற்கும்போதே சிந்திக்க தொடங்கினார்.

க.பொ.த சாதரணதர பரீட்சையில் இறுதிப் பாடத்தை எழுதிய அன்றே தலைநகர் கொழும்புக்கு வெறும் நம்பிக்கைகளை மட்டும் மூலதனமாகக் கொண்டு புறப்பட்டுச் சென்றவர் ஒரு மளிகைக் கடையில் பணிபுரிந்தார். க.பொ.த. சாதரணதரப் பரீட்சைப் பெறுபேறுகள் கிடைத்து மூன்று மாதங்களின் பின்னர் தனது சொந்த ஊருக்குத் திரும்பி வந்து க.பொ.த உயர் தரத்தில் வர்த்தகத் துறையை தெரிவு செய்து கற்கத் தொடங்கினார்.

க.பொ.த உயர்தரத்தில் பரீட்சை எழுதிய கையோடு தனது தாய் மற்றும் சகோதரிகள் சேர்த்து வைதிருந்த மூவாயிரம் ரூபாவோடு மீண்டும் தலைநகர் கொழும்புக்கு சென்று தனது தாய் மாமாவிடம் ஆலோசனை பெற்று மாமாவின் பைசிக்களை உதவியாகப் பெற்று தொழில் ஒன்றைத் தொடங்கினார். அதன் மூலமாக ஓர் இனிப்புக் கடையில் மூவாயிரம் ரூபாவிற்கு இனிப்புகளை வாங்கி அதனை சிறு கடைகளுக்கு விநியோகித்தார். அதன் மூலம் அவரின் முதல் அன்றைய நாளே மூவாயிரத்து ஐநூறு ரூபாவாக மாறுகிறது.

மிக அர்ப்பணிப்போடு தனது வியாபாரத்தை முன்னெடுத்த ரிப்திகார் ஜுனைத் 80 000 ரூபாவோடு இன்னும் சில தொகைகளை தெரிந்தவர்களிடம் கடனாகப் பெற்று தனது தந்தையின் ஆலோசனையுடன் தனது மைத்துனரையும் இணைத்துக் கெபாண்டு கொழும்பு 10 இல் ஒரு மளிகைக் கடையை ஆரம்பித்தார். பதினாறு வருடங்கள் பல சவால்களுக்கு முகம் கொடுத்து தனது வியாபாரத்தை முன்கொண்டு சென்றார்.

"இன்சைட் ஸ்கூல் ஒப் பிஸினஸ் மெனேஜ்மென்ட் (ISBM) என்ற வியாபாரக் கல்வி நிலையம் எனக்குக் கிடைத்தது ஒரு பாக்கியமெனக் கருதுகிறேன். நான் தேடிக்கொண்டிருந்த விடயம் அங்கே எனக்குக் கிடைத்தது.எனது வியாபார அறிவுப் பசிக்கு அங்கே தீனி கிடைத்தது. அங்கு பயின்றது மட்டுமல்லாமல் பல முன்னணி வியாபார நிறுவனங்களின் வர்த்தகர்களின் தொடர்பு கிடைத்தமையால் முன்னேற்றம் ஏற்பட்டது. எனக்கு புதிய விடிவும் புதிய வாழ்க்கையும் அங்குதான் கிடைத்தது" என உளமுருக நன்றிப் பெருக்கோடு சொல்கிறார்.

"வியாபாரத் துறை தொடர்பான புதிய உலகையும் சிறந்த வழிகாட்டலையும் இன்சைட் ஸ்கூல் ஒப் பிஸினஸ் மெனேஜ்மென்ட் (ISBM) எனக்கு வழங்கியது. பழைய பாரம்பரிய சிந்தனையுடன் முன்னெடுத்த எனது வியாபாரத்தை புதி நவீன நுட்பங்களுடன் முன்னெடுக்க இன்சைட் எனக்கு வழிகாட்டியது" என்று சொல்கிறார் ரிப்திகார் ஜுனைத்.

தனது அடுத்த திட்டமாக தொற்றா நோயிலிருந்து மக்களை பாதுகாக்கும் வகையிலான பொருட்களை வழங்கும் ஒரு செயற்றிட்டத்தை முன்னெடுக்கப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

**இர்ஷாத் இமாமுதீன்...**
(BA,Dip in Journalism, MPCS)

# மானுடவியல்



171

இருக்குநாளிலே திருநீலநக்கநாயனாரும் சிறுத்தொண்ட நாயனாரும் அவ்விடத்திற்கு வந்து அவர்களோடு இருந்தார்கள்.

சில தினஞ்சென்ற பின், பிள்ளையாரும் அப்பமூர்த்தியும் பிறதலங்களை வணங்க விரும்பிப் புறப்பட்டு, முருக நாயனாரை அங்கே இருக்கவும். திருநீலநக்கநாயனாரையும் சிறுத்தொண்ட நாயனாரையும் தங்கள் தங்கள் ஊருக்குச் செல்லவும் ஏவினார்கள். பிள்ளையார் அப்பமூர்த்தியை விட்டுப் பிரியாமல் முத்துச் சிவிகை பின் வர, வழிக்கொள்ளும் பொழுது, அப்பமூர்த்தி பிள்ளையாரை நோக்கி, "சிவபெருமான் தேவரீருக்கு அருளிச் செய்த இம்முத்திச் சிவிகை யின்மேலே எழுந்தருளும்" என்று சொல்ல; பிள்ளையார் "நீர் அடியார்களோடும் எங்கே முன் போவீரோ அங்கே நான் பின் வருவேன்" என்றார். அப்பமூர்த்தி "தேவரீர் அருளிச்செய்தபடியே செய்வேன்" என்று சொல்லிக் கொண்டு, அன்றுமுதல் அவருடன் செல்லுநாள் எல்லாம் அப்படியே செய்வாராகி நடந்து முன்னே அடியாரோடும் திருவம்பருக்குச் சென்றார். பிள்ளையார் பரமசிவனுடைய திருவருள்வழியே நிற்பாராகி, முத்துச்சிவிகையில் ஏறி, திருப்புகலூரைக் கடந்து சென்று, "அப்பமூர்த்தி எங்கே சென்றார்" என்று வினாவிப் போய், திருவம்பரை அடைந்து, மாகாளத்தில் இருக்கின்ற சுவாமியை வணங்கித் திருப்பதிகம் பாடி, அப்பமூர்த்தியோடும் அந்தத் திருப்பதியில் எழுந்தருளியிருந்தார். அங்கே கோச்செங்கட்சோழநாயனார் செய்த பெருந்திருக் கோயிலை அடைந்து, சுவாமி தரிசனஞ் செய்து, அந்நாயனாரைச் சிறப்பித்து திருப்பதிகம் பாடினார். சிலநாட் சென்றபின், திருவம்பரை நீங்கி, அப்பமூர்த்தியோடு திருக்கடவூருக்குச் சமீபித்து, அங்குநின்று வந்து எதிர்கொண்டு வணங்கிய குங்குலியக் கலயநாயனார் முதலிய அடியார்களோடு, திருவீரட்டானத்திற் சென்று சுவாமிதரிசனஞ் செய்து, திருப்பதிகம் பாடி, அக்குங்குலியக் கலயநாயனார் வீட்டில் திருவமுது செய்து, திருக்கடவூர் மயானத்தையும் வணங்கிக் கொண்டிருந்தார்.

சிலநாளாயின பின் திருக்கடவூரை நீங்கி, திருவாக்கூர் திருமீயச்சூர், திருப்பாம்புரம் என்னுந்தலங்களை வணங்கிக் கொண்டு, திருவீழிமிழலையை அடைந்து, சுவாமி தரிசனஞ் செய்து திருப்பதிகம் பாடி, புறத்தணைந்து, அப்பமூர்த்தி ஒரு திருமடத்தை அடைய, தாம் வேறொரு திருமடத்திலே போயிருந்தார். அவ்விருவரும் பேணுபெருந்துறை, திலதைப்பதி என்னுந் தலங்களுக்கும் போய்த் தரிசனஞ் செய்துகொண்டு மீண்டும் திருவீழிமிழலையில் வந்திருந்தார்கள். **(தொடரும்)**



கலாநிதி சிவஸ்ரீ
**கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்**
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த ஆனி உத்தர மஹோற்சவம்

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள தொன்மை மிக்க ஆலயமாக நாகதம்பிரான் (நாககட்டு) ஆலயம் விளங்குகின்றது. இவ்வாலயம் மூன்றாம் நூற்றாண்டுக்குரியதாக கருதப்படுகின்றது. பண்டாரியாவெளி ஸ்ரீ நாகதம்பிரான் ஆலயம் பல வரலாற்றுப் பெருமையும் சிறப்பும் தன்னகதே கொண்டது. மண்முனையில் குடியேறிய ஏழு குடி மக்களுள் சிலர் முதலாவதாக குடி புகுந்த வரலாறும் பாரம்பரியமும் கொண்ட பூர்வீக பூமியே பண்டாரியாவெளி (பண்டையூர்) என்னும் தமிழ் சைவ கிராமமாகும். இத்தகைய சிறப்புமிக்க கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த 5ஆம் திகதி வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

ஆனி உத்தர நாளான 11 ஆம் திகதி வியாழக்கிழமை பால் பழம் வைக்கும் உன்னத நிகழ்வு இடம்பெறும். 12ஆம் திகதி வெள்ளிக்கிழமை தேசத்து பொங்கலுடன் உற்சவம் நிறைவு பெறும். கிரியைகள் நாகபூஷணம் சிவஸ்ரீ குருகுலநாத குருக்கள் தலைமையில் நடைபெற இருக்கின்றன.

மட்டக்களப்பு நகருக்கு தென்மேற்கே 9 கிலோ மீட்டர் தூரத்தில் எங்கள் தனக்குவமை இல்லாத அந்த தான் தோன்றி அப்பனின் சந்நிதி, வடக்கே இரண்டு கிலோ மீட்டர் தொலைவில் வில்குள அருவி பாய நெல்லினம் சூழ்ந்து ஆட வண்டினம் வாழ்த்து பாடி வந்தாரை வாழவைக்கும் எழில் மிகு பண்டரியாவெளி எனும் அழகிய கிராமத்தின் அருகே அமைந்துள்ளது.

1812 ஆம் ஆண்டு முதல் பண்டாரியாவெளி மக்கள் காடு வெட்டி வேர் பிடுங்கி ஆனந்தநாதரின் 10 அடிஉயரமும் 12 அடிசுற்றும் கொண்டஒரு உயர்ந்த பற்றை பராமரித்து வந்தனர். இப்புற்றின் நடுவே வேம்பும் மற்றும் அத்திமரங்கள் அமையப் பெற்று உள்ளன. அத்திமரம் சிவனையும் வேம்பு மரம் சக்தியையும் குறிப்பதாக அமைவது விசேட அம்சமாகும்.இந்த உயர்ந்த புற்றில்தான் நாகம்மையுடன் பிறந்த நாகம் புற்றுறைந்து படமாடி பால் பழம் வைத்து வழிபட ஆரம்பித்தனர். எமது முன்னோர் மண்முனையில் குடியேறிய ஒரு கலிங்க குலப் பெண்ணுக்கு 5 பிள்ளையும் ஐந்தாவது பெண் பிள்ளையுடன் (நாகம்மை) ஒரு சாஸ்திரிய வம்ச நாகமும் உடன் பிறந்து வாழ்ந்து வரும் போது தங்கள் தயாதி சொத்துக்களை பங்கிடும் போது நாகத்துக்கும் ஒரு பங்கிடாமையால் எழுந்த வாக்குவாதத்தால் நாகம் சினம் அடைந்து அம்மையுடன் வீட்டை விட்டு வெளியேறி இன்று சொல்லப்படும் மண்முனை இறால் வளர்ப்பு கட்டுக்குடாகக் (அன்றைய சேவக பற்று) இந்தப் பாரிய புற்றில் தான் நாகம் குடிபுகுந்து அன்று அரிய பல தெய்வீக அதிசயங்களை இந்த அண்ட சராசரங்களையும் ஆளும் நாகசக்தி வாழ்கின்ற நன்நாளில் வளமான சீதனத்தை குழந்தைக் கீர்த்து நகர்ந்து வெளி சென்றதனால்; தெய்வமாகி பண்டாரியார் சூள் திலங்கி ஆட்சி செய்தார். ஆண்டுகள் வருகின்ற உத்தரமாம் ஆனிதன்னில்; எடுக்கின்றோம் பொங்கல் உத்தனக்குபால் பழங்கள் வைத்து குறிப்பாக நாகத்திற்கு பால் பழம் மற்றும் முட்டை வைத்து வழிபாடுகள் மிக எளிமையான முறையில் இடம்பெறுகின்றது.



ஆனி உத்தர தரிசன நாட்களில் பால் பழம் வைக்கும் நிகழ்வு மிக பிரதானமான கைங்கரியமாக அடியார்களால் கொண்டாடப்படுகின்றது. ஆனி உத்திர தரிசனத்தில் பல பாகங்களிலும் இருந்து நாகங்கள் பால் பழம் உண்பதை அடியார்களால் காணமுடிகின்றது. பிரதான புற்றில் வாழும் நாகம் இவ்வாலயத்தில் பல நூறு ஆண்டுகள் பழமையான கஞ்சரிகை மரத்திலும் வாழ்ந்து வருகின்றன.

இக்கோயில் பல நுணுக்கமான சிற்ப வேலைபாடுகளுடன் கலையம்சம்; பொருந்திய சிலைகளும்; கட்சிதமான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. ஆலயம் கற்பகக் கிரகத்தில் நாகம்மையுடன் நாகம் எவ்வாறு ஆலயத்தை வந்தடைந்தது என்பன பற்றியும் அலங்கார மண்டபம் மற்றும் கிழக்கு வாசல் என்பவற்றில் விஷ்ணு சிவபிரான்; போன்றோரின் ஐதீக புராண காட்சிகள் சித்தரிக்கப்பட்டுள்ளன.

கலைச்சுடர்
**நாராயணபிள்ளை–நாகேந்திரன்**




# குரோதி வருட கதிர்காம ஆடி மகோற்சவத் திருவிழா

பண்டையக் காலம் முதல் இலங்கையில் காணப்பெறும் முருகன் ஆலயங்களுள் மிகப் பழைய வரலாறுயுடையது கதிர்காமமாகும். கதிர்காமம் என்பது தனித்தமிழ்ச் சொற்றொடர். கதிர் என்பது ஒளி, அதாவது முருகக் கடவுள் ஒளி வடிவில் காமமாகிய இருப்பிடத்திற் குடி கொண்டுள்ளார் எனப் பொருந்தும். இஃது இருமடியாகு பெயர். மேலும் கதிர் என்பது ஒளியெனவும் அதாவது சுடரிற் பிறந்த முருகக்கடவுள் எனவும், காமம் என்பது அன்பெனவுங் கொண்டு கதிர்காமம் எனப் பெயர் விளக்கங்கொடுப்பர் பலர்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகிய முச் சிறப்புகளுமுடையதாகப் புராண வரலாற்றுச் சிறப்புகள் கொண்டமைந்துள்ளது கதிர்காமம் ஆகும். வெளிநாட்டவரையும் திருவருளாற் தன்னகத்தே ஈர்ந்துவிளங்கும் திருத்தலம் கதிர்காமம். இத்தலம் இலங்கையின் தென்பாகத்தே ஊவா மாகாணம் தெற்கே முடிவடையும் எல்லையில் 'தீயனக' என்ற காட்டுப்பகுதியில் அமைந்துள்ளது. நமுனகுல கந்த மலையில் உற்பத்தியாகும் ' பரப்ப ஒயா' என்ற மாணிக்க கங்கை 55 மைல் நீளம் உடையதாய் இத்தலத்தினுகூடாகப் பாய்ந்து ஊவா மாகாணத்தை ஊடறுத்துச் சென்று தெற்கே இந்து மாகடலிற் சங்கமமாகின்றது.

சூரபத்மனை அழிக்க வந்த முருகன் கதிர்காமத்திலேயே பாசறை அமைந்துத் தங்கி இருந்தார் என்றும் அங்கேயே வள்ளியைத் திருமணம் செய்தார் என்றும் அப்பிரதேசத்து ஐதீகங்கள் கூறுகின்றன. முருகன் வள்ளிப் பெண்ணை கொண்டகுலம் வேடர்குலம். கதிர்காமத்திலே வேடர் பரம்பரையினர் பூசகராகவும், பராமரிப்பாளராகவும் உரிமை கொண்டாடிநிற்கின்றனர்.

கதிர்காமத்தின் எளிமையான அமைப்பும், வழிபாட்டு முறைகளும் அத்தலத்தின் தொன்மைக்கு சான்றுபகர்வன எனலாம். விக்கிரகமின்றிப் பிராமணர்ரின்றி, மந்திரமின்றி நூற்றாண்டுகளாகப் பக்தர்களை கவர்ந்திருக்கும் பழமை மிக்கது கதிர்காமம்;. வேட்டுவகுலத்தினைச் சேர்ந்த 'கப்புறாளை' எனப்படும் பூசகர் வாய்கட்டி நின்று மௌனபூசை செய்வது கதிர்காமத்து கிரியை முறையாகும். ஆக மச்சார்பு அற்ற பூசைமுறை அங்கு தொடர்ந்துவந்து கொண்டிருக்கின்றது. நைவேத்தியப் பொருள்களாக தேனையும், திணைமாவையும் தம் குலத்திற் பெயர் கொண்டவனுக்கு மனமுவந்து நைவேத்தியமாக அவர்கள் வழங்குவதும் குறிப்பிடத்தக்கது.

இக்கோயிலிற் பரம்பரை, பரம்பரையாகப் பூசை செய்யும் கப்புறாளைகளே பூசைசெய்கின்றனர். கப்புறாளைகள் பலர் சேர்ந்து 'சுவாமிக் கப்புறாளையை' தெரிவுசெய்வர். அவரே சுவாமிக்குப் பூசை செய்யும் கடப்பாடுடையவராவர். வாயைத் துணியால் கட்டிக் 'காவுதடியிலே பிரசாதத்தை' காவி வந்து திரைச்சீலைக்குப் பின்னே வைத்து, முருகக் கடவுளின் திருவுருவந் தீட்டப்பெற்ற திரைச்சீலையை இருகைகளாலும் தடவித் தலைமேற் கைகுவித்து வணங்குவர். இதன் பின் அடியார்களின் அர்ச்சனைத் தட்டுக்கள் படியருகில் வைத்தபின் பூஜையை முடித்து அர்ச்சனை தட்டுகளை அடியார்களிடம் திருப்பி கையளிப்பர். கப்புறாளை பிரசாதத்துடன் வரும்போது வள்ளியம்மையார் மரபில் வந்தவராகக் கருதப்படும் பெண்கள் ஆலாத்தி எடுக்கும் வழக்கம் இங்குண்டு.

மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திலும், தெய்வானையம்மன் ஆலயத்திலும் பிராமணர்வாய்க்கட்டி தூப தீபங்காட்டி, மந்திரமின்றிப் பூசை செய்கின்றனர். இங்ஙனமாக அதிகாலை4.30 காலை 10.00 முதல் மாலை 6.00 மணிக்குமாகத் தினசரி பூசைகள் நடைபெறுகின்றன. பிரதான கோயிலின் மூலஸ்தானம் திரைச்சீலையிலே எப்பொழுதும் மறைந்திருக்கும். கண்களுக்குத் தெரிவது திரைச் சீலையிலுள்ள வள்ளி, தெய்வானை சமேத முருகப்பெருமானின் அழகிய தோற்றமே. மூலஸ்தானத்திலே மூர்த்தியாக விக்கிரகம் இல்லையென்றும் அங்குபெட்டகமொன்றிலே யந்திரம் இருப்பதாகவும் அதுவே 'கதிர்காமஇரகசியம்' எனவும் நம்பப்படுகின்றது. மூலஸ்தானத்தில் விமானமெதுவும் இல்லை. இங்கு நடைபெறும் விசேடவிழாக்களுள் மிகப் பிரசித்தி பெற்று விளங்குவது ஆடித்திருவிழாவாகும். பதினான்கு நாட்கள் தொடர்ந்து நடைபெறும் திருவிழாவும், பதினைந்தாம் நாள் நடைபெறுவது நீர்வெட்டு தீர்த்தோற்சவமுமாகும். அமாவாசையிற் கொடியேற்றமும், ஆதித்திருவோண நாளன்று பௌர்ணமியில் நீர்வெட்டும் நடைபெறும்.



'கதிர்காமம்' என்ற நூலில் 'எட்டையபுர நாகலாபுரம் மணியாச்சி.......' எனவரும் பாடலில் எழுபத்திரண்டு ஊர்களிலிருந்தும், ஐம்பத்தாறு தேசங்களிலிருந்தும் மக்கள் வந்துவழிபட்டமை கூறப்படுகிறது.

கதிர்காமத்தில் எழுந்தருளியிருக்கும் முருகப்பெருமானை, கதிரைநாயகன், கதிரைவேலன், மாணிக்க சுவாமி, கந்தக் கடவுள் ஆறுமுகப்பெருமான், பரஞ்சோதி பெருமான், சிதாகாயநாதன், அவ்வியர்த்த மூர்த்தி, குகன், குமரன், முருகன், கதிர் காமநாதன், சுப்ரமணியம் எனும் பல பெயர்களால் அழைப்பர்.

கதிர்காமத்தை ஏமகூடம், பூலோக கந்தபுரி, காரிகாப்பு, வரபுரி, பஞ்சமூர்த்தி வாசம், வில்வகானனம், வன்னி மங்கலம், கதிரை, சகலசித்திகரம்,

அகத்தியப்பிரியம், பிரமசித்தி, சித்தகேந்திரம், அவ்வியர்த்த மூர்த்தம் ஆகிய பெயர்கள் கதிர்காமத் தலத்தைக் குறிக்க வழங்கப்பட்ட பெயர்களாகும்.

இத்தலத்தோடு தொடர்புடைய முனிவர்களும், அடியார்களும் பலர். பதின்மூன்றாம் நூற்றாண்டில் வாழ்ந்த புகழேந்திப் புலவர் யாழ்ப்பாண அரசனின் உதவியுடன் இக்கோயிலைத் தரித்துள்ளார். சிகண்டி முனிவர், முத்துலிங்கசுவாமி, ஜயசிங்ககிரி, கெசபுரிசுவாமி, பாலசுந்தரி, மங்களகிரி சுவாமி, பால்குடி பாபா, செய்யது ஜப்பார் அலிஷாபாவா ஆகியோர் ஆவார். இராமயண காலத்திலே இராமதூதனாக இலங்கை வந்த அனுமன் இத்தலத்தை வணங்கி அருள் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

புனித தலத்திலிருந்து மூன்று மைல்கள் தென்மேற்கே மாணிக்க கங்கை குதித்தோடும் சூழலிலே மருத மரங்களடர்ந்த பகுதியிற் 'செல்லக்கதிர்காமம்' அமைந்துள்ளது. இங்குமாணிக்கப்பிள்ளையாருக்கு கோயிலுண்டு. இதற்கன்மையில் வள்ளியம்மையார் காவலில் ஈடுபட்டதாக கூறப்படும் தினைப்புனம், தயிர் கடைந்த இடமும், வேங்கை மரமாகவேலவர் நின்ற இடம் என்பன காணப்பெறுகின்றது.

கதிர்காம முருகன் ஆலயத்தின்; வருடாந்த ஆடித் திரு விழாவிற்கான கொடியேற்ற உற்சவம் ஜுலை 06 ஆம் திகதி ஆரம்பமாகியது. ஜீலை 18ம் திகதி தீமிதிப்பு ஊர்வலமும், ஜுலை21ம் திகதி இறுதி ஊர்வலம் (பெரஹர) நடைபெற்று, ஜுலை 22ஆம் திகதி கதிர்காம உற்சவம் மாணிக்ககங்கையில் (நீர் வெட்டுதல்) தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவுபெறும்.

கலாபூஷணம்
**சியாமளாதேவி இராமநாதன்**

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 93



சுகபோக வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுத்தால், முக்திக்கான வாழ்க்கை எட்டாக் கனியாகி விடும். பசிக்கு உணவு, உடம்பை மறைப்பதற்குத் துணி, என்று வாழ்ந்து சுகபோகங்களை துறந்தால், முக்திக்கான வாழ்க்கை நம் எதிரில் நிற்கும். ஆண்டவன் உலகை படைத்த நாள் முதல், இன்றளவும் ஒவ்வொரு மேன்மையானவரின் சரித்திரம் இதுவே. சுகபோகங்களை துறந்து, தியாக வாழ்க்கையை மேற்கொள்வது மேன்மையை அடைவதற்கான வழியாகும். ஆத்ம முன்னேற்றத்திற்கு இது ஒன்றே சிறந்த வழியாகும்.

தீர்த்தயாத்திரை மூலமோ, விரதம் இருப்பதாலோ, யோகப் பயிற்சி, மூச்சு பயிற்சி செய்வதாலோ, மனம், உடல் ஆகியவை வலுப் பெறுமே தவிர, கடவுளை அடைய முடியாது. கடவுளை வயப்படுத்த, மன உறுதி, மனக்கட்டுப் பாடுடன் கூடிய, செயலில் வெற்றி கொள்ளத் தக்க, சாதனாவின் மூலம் மட்டுமே இயலும். தனிமனித வாழ்வில் பிறருக்கு முன் உதாரணமாக வாழ்ந்தவர்கள் போற்றத் தகுந்தவர்களாக இருந்திருக்கிறார்கள். அவர்கள் மூலமே உலகத்தில் மக்கள் நலம் உண்டாகியுள்ளது. எனவே நாம் மன பலம் படைத்தவர்களாகவும் ஆத்ம பலம் படைத்தவர்களாகவும் மாறுவோமாக.

இன்றைய உலகம் மூடத்தனம் மற்றும் மூட நம்பிக்கை என்னும் சங்கிலிகளால் இறுக்கப்பட்டுள்ளது. இச்சங்கிலியில் கட்டுப்பட்டு கிடக்கும் மாந்தரை நினைத்தால் என் மனம் துடிக்கிறது. ஒவ்வொரு மனிதனின் துன்பத்திற்கும், சமுதாயத்தின் இந்த அவல நிலைக்கும் மக்களின் மூட நம்பிக்கை தான் காரணமென, கிழக்கில் உதிக்கும் சூரியன் போல் தெள்ளத் தெளிவாக எனக்குத் தெரிகிறது.

உலகில் எங்கிருந்து ஒளி பிறக்கும்? தியாகத்தினால் மட்டுமே இது நிறைவேறும். தியாக உள்ளம் கொண்ட வீரன் மற்றவர்க்கு முன்னுதாரணமாய்த் திகழ்கிறான். பின்னர் பலரும் அவனின் அடிச்சுவட்டைப் பின் பற்றுகின்றனர். வெளிச்சத்தை உருவாக்கும் இந்த தியாக வீரர்களின் செயல், ஆதிகாலத்திலிருந்தே நடந்து வருகிறது. இப்பூவுலகில் பற்பல வீரர்கள், உத்தமர்கள், புனிதர்கள், மஹாத்மாக்கள் தோன்றியுள்ளனர்.

அவர்கள் யாவரும் தியாக வாழ்க்கை மேற்கொண்டு வாழ்ந்து காட்டினர். நாம் நம் சுகபோகங்களை துறந்தால் தான், மற்றவர்களுக்கு சுகங்களை நாம் வழங்க முடியும். அதற்கான வழியைக் காட்ட முடியும். உண்மையான அன்பு எல்லையில்லா கருணை கொண்ட இதயங்கள் துணிச்சலுடன் செயலாற்றுபவர்கள், எந்தளவிற்கு இன்றைய நாளில் தேவைப் படுகிறதோ, அந்தளவிற்கு வேறு எந்த காலத்திலும் தேவைப் பட்டதில்லை.

எனவே, உணர்வுடைய ஆத்மாக்களே விழித்தெழுங்கள். உலகம் துக்கம் என்னும் நெருப்பில் பொசுங்கி கருகிக் கொண்டிருக்கிறது. இப்படிப் பட்ட இக்கட்டான சூழ்நிலையில் நீங்கள் தூங்கிக் கொண்டிருப்பது அழகல்ல. வெளிச்சமூட்டக் கூடிய பொறுப்பு உங்களிடம் தான் உள்ளது.

# பரப்புக்கடந்தான் முத்துமாரி அம்மன் ஆலய கும்பாபிஷேகம்





பரப்புக்கடந்தான் கிராமம் திருக்கேதீஸ்வரத்தில் இருந்து 7கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. யாழ்ப்பாணம், மன்னார் பாதையில் இருந்து மிகவும் இலகுவாக இந்த கிராமத்திற்கு செல்லலாம்.

**அழகிய அமைதியான கிராமம்:**

திருக்கேதீஸ்வர சந்தியில் இருந்து ஆண்டாங்குளம் சென்று அந்தச் சந்தியில் இருந்து சில கிலோ மீற்றர் தொலைவில் இந்த அழகிய, அமைதியான கிராமம் அமைந்து இருக்கிறது. கிராமத்துக்குரிய அத்தனை அம்சங்களையும் இது தன்னகத்தே கொண்டிருக்கிறது. போகும் பாதையில் காணப்படும் மருதமரங்கள் இன்னும் இதன் அழகைக் கூட்டுகிறது. அழகான தாமரைக்குளம் ஒன்றும் அங்கே இருக்கிறது. இந்தக்குளம் கட்டுக்கரைக் குளத்தில் இருந்து நீரைப் பெறுகிறது. அங்கே வாழும் மக்களின் பிரதான தொழிலாக விவசாயம் இருந்து வருகிறது. இதனால் கிராமம் வயல்களால் பச்சை பசேலாக எப்போதும் காட்சியளிக்கிறது.

மன்னார் மாவட்ட பரப்புக் கடந்தான் இந்துக்களும் கத்தோலிக்கர்களும் மிகவும் ஒற்றுமையாக வாழ்ந்து வரும் கிராமமாகும். இந்த கிராமத்தில் உள்ள இந்துக்களின் இரண்டு வழிபாட்டுத் தளங்கள் போரால் முற்றிலும் அழிந்த நிலையில் காணப்பட்டது. இந்தக் கிராமத்தில் உள்ள அநேகமான மக்கள் யுத்த காலத்தின்போது இந்தியாவுக்கு இடம் பெயர்ந்திருக்கின்றனர். சிலர் அங்கேயே நிரந்தரமாக குடியேறிவிட வேறுசிலர் தற்போது திரும்பி வந்திருக்கின்றனர். யுத்த காலத்தில் மிகவும் கடுமையாக பாதிக்கப்பட்ட கிராமங்களில் இதுவும் ஒன்றாகும்.

**யுத்தம் அழித்த கிராமம்:**

யுத்தத்திற்கு முன்னர் இங்கே இரண்டு இந்து கோயில்கள் இருந்திருக்கின்றன. இந்து மக்களுக்கான இந்தக் கோயில்கள் யுத்தத்தின் பின்னர் கைவிடப்பட்டதன் காரணமாக நீண்டகாலமாக கவனிப்பாரின்றி இயங்காமல் பூசைகளின்றி இருந்திருக்கிறது. கிராமத்தில் உள்ள ஐம்பது இந்துக் குடும்பங்கள் வழிபட கோவில் இன்றி, கோவில் மணியோசை கேட்காமல் பலகாலம் மக்கள் அங்கே வாழ்ந்து வந்திருக்கின்றனர்.

**கோவில் புனர்நிர்மாணம்:**

இந்த நிலையை மாற்றுவதற்காக புலம்பெயர் வாழ் மக்களின் உதவியுடன் இந்த கோவில் புனர்நிர்மாணமும் மற்றும் மாணவர்கள் படிப்பதற்கு இரவு நேரத்தில் ஒளியூட்டப்பட்ட இடமாகவும் கணணி மற்றும் புத்தக வசதியுள்ள சிறிய வாசிகசாலையும் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

முத்துமாரி அம்மன் கோவில் தற்போது புனரமைக்கப்பட்டு எதிர்வரும் ஜுலை மாதம் பத்தாம் திகதி கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது. இந்த கிராமத்தில் மிகவும் வறுமை கோட்டிற்கு கீழ் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அத்துடன் உயர்கல்வி கற்றவர்கள் மிகவும் குறைவாக காணப்படுகின்றார்கள்.

தற்போது பரப்புக் கடந்தானில் உள்ள பாழடைந்த நிலையில் காணப்பட்ட கோவில் திருத்தப்பட்டு குழாய் கிணறு, மணிக்கூட்டு கோபுரம் அமைக்கப்பட்டு, மாணவர்கள் படிப்பதற்கு வாசிக சாலையும் அமைக்கப்பட்டு எதிர்வரும் ஜுலை மாதம் பத்தாம் திகதி கும்பாபிஷேகம் நடைபெறவுள்ளது.

**கலைச்செல்வி பாஸ்கரன்**

# வலம்புரி வைத்திருந்த இளைஞர் கைது

வலம்புரி வைத்திருந்த இளைஞர் ஒருவரை விமானப்படை புலனாய்வு அதிகாரிகள், பொலிஸ் விசேட அதிரடிப்படை அதிகாரிகள் மற்றும் வனவிலங்கு அதிகாரிகள் இணைந்து கைது செய்துள்ளனர்.



இவ்விளைஞர் மாரவிலவில் வைத்து அண்மையில் (06) கைது செய்யப்பட்டார். மீரிகம விமானப்படை முகாமின் புலனாய்வு அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரான இளைஞர், மாரவில பகுதியைச் சேர்ந்த 24 வயதுடையவராவார்.

இவர் தனது சகோதரர் வெளிநாட்டுக் கப்பலில் பணிபுரிவதாகவும் அவரிடமிருந்து இது கிடைத்ததாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். இது குறித்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



கவிஞர் பெரியமடு நிஹ்ரி எழுதிய "வெய்துயிர்த்தல்" என்ற கவிதை நூல் நேற்று புத்தளம் I.B.M மண்டபத்தில் வெளியிடப்பட்டது. இந்நிகழ்வுக்கு புரவலர் ஹாசிம் உமர் முன்னிலை வகித்ததுடன் நூலின் முதல் பிரதியையும் பெற்றுக் கொண்டார். இந்நிகழ்வில் சிறப்பதிதியாக தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் தே. செந்தில்வேலவர் கலந்து சிறப்பித்தார். நூலின் நயவுரையை கவிஞர், எழுத்தாளர் பிரேம் ராஜும் நூல் பற்றிய உரையை கண்ணகி கலாலய தலைவரும் பல்துறை கலைஞருமான ஏ.கே.இளங்கோவும் நிகழ்த்தினார்கள்.

# இன்றைய பலன்கள்
(08.07.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
பின்னர் செய்யலாமென்று தள்ளி வைத்த வேலையை உடனடியாக செய்ய வேண்டியது இருக்கும். காரியங்களில் சிறுசிறு தடைகள் இருந்தாலும் அவற்றை சமாளித்து முன்னேறுவீர்கள்.

**ரிஷபம் :**
உத்தியோகத்தர்கள் சிலருக்கு முயற்சியின் பெயரில் வெளியூர் மாற்றம் ஏற்படும். நண்பர்களால் பாராட்டு பெறுவீர்கள்.

**மிதுனம்:**
உங்கள் முயற்சிக்கு வெற்றியும் புகழும் கிடைக்கும். சிலருக்கு வீடு அல்லது மனை வாங்கும் யோகம் உண்டாகலாம். நீண்ட நாள் பார்க்காமல் இருந்த நண்பரை சந்திப்பதால் திடீர் திருப்பம் உண்டாகும்.

**கடகம்:**
வாழ்க்கையின் முன்னேற்றத்திற்கும் தொழில் வளர்ச்சிக்குமான செயல்களில் ஈடுபடுவீர்கள். நீண்ட எதிர்பார்ப்பிற்கு பின் முக்கியமான காரியம் ஒன்று நடந்தேறும்.

**சிம்மம்:**
எதிர்பார்க்கும் இடங்களில் இருந்து பணம் வந்து சேரும். சகோதரி வழியில் மன வருத்தம் ஏற்படக்கூடும். எனவே பேச்சில் கடுமையை குறைப்பது நல்லது.

**கன்னி:**
நீங்கள் எடுக்கும் முயற்சிகளில் சிறிது தடை ஏற்பட்டாலும் தெய்வ பலத்தினால் அந்த தடைகளில் இருந்து விடுபட்டு முன்னேறுவீர்கள்.

**துலாம்:**
இந்த வாரம் இடையில் ஏற்பட்ட சிறுசிறு தடங்கல்களை இன்முகத்தோடு எதிர்கொண்டு தொடர் முயற்சியால் வெற்றி பெறுவீர்கள். வீடு அல்லது மனை வாங்கும் யோகம் உண்டாகும்.

**விருச்சிகம்:**
முக்கிய ஆவணங்களில் கையெழுத்து இடுவதை தவிர்க்கவும். உறவினர் இல்லத்து நிகழ்ச்சியில் மனைவி மக்களுடன் கலந்து கொள்வீர்கள்.

**தனுசு:**
செய்யும் காரியங்கள் நீங்கள் எதிர்பார்த்தபடி நடைபெறாமல் போகலாம். சேமிப்புகளை செலவழிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உண்டாகும். என்றாலும் முக்கியமானவர்களின் துணை கொண்டு வெற்றியை நோக்கி முன்னேறுவீர்கள்.

**மகரம்:**
கவனத்தோடும் நிதானத்தோடும் பணிகளில் ஈடுபடுவது அவசியம். நிச்சயமாக நடைபெறும் என்று நம்பிய காரியம் முடிவடையாமல் இழுத்தடிக்க படலாம்.

**கும்பம்:**
வாழ்க்கையில் முன்னேறவும் வசதிகளை பெருக்கிக் கொள்ளவும் பாடுபடுவீர்கள். உத்தியோகத்தர்களில் சிலர் சக பணியாளர்களின் மூலமாக பிரச்சனையை சந்திக்க நேரிடும்.

**மீனம்:**
இந்த வாரம் செய்ய வேண்டிய பணிகளை சிறப்பாக செய்து வெற்றி பெறுவீர்கள். நீண்ட காலமாக சந்திக்காத நபர் ஒருவரை சந்தித்து மகிழ்வீர்கள்.

## IMF: ஒப்பந்தத்தை...

நம்மை கைவிட்டுவிடும். நீண்ட காலமாக நாட்டில் உள்ள இலட்சக்கணக்கான மக்களுக்கு பொருளாதாரம், வர்த்தகம், நிதி ஆகிய பாடங்களை நான் கற்பித்துள்ளேன். ஆனால், துரதிஷ்டவசமாக இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவருக்கும், அனுரகுமார உள்ளிட்ட எம்பிக்களுக்கோ கற்பிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை. திஸாநாயக்க கடந்த நான்கைந்து தசாப்தங்களாக கிராமம் கிராமமாகச் சென்று பல பொய்களை பிரகடனப்படுத்தியுள்ளார்.

முதலில் பட்ஜெட் பற்றாக்குறை மற்றும் நடப்பு கணக்கு பற்றாக்குறையை போக்க வேண்டும்.இவ்வாறு கடன் வாங்குவதால் ஏற்படும் பின்விளைவுகளை மக்கள் புரிந்து கொள்ளவில்லை.இதனால், வேலைநிறுத்தம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் முன்வைத்து போராட்டம் நடத்துகின்றனர்.நாடு என்ற ரீதியில் இலங்கையால் இவ்வாறானதொரு நெருக்கடிக்குத் தீர்வுகாண முடியாத நிலையில், அவ்வாறான நெருக்கடிகளுக்கு தீர்வுகளை வழங்கிய சர்வதேச அமைப்புகளின் ஆதரவையும் இலங்கை நாட வேண்டியிருந்தது. அமைச்சரவை உபகுழுவின் பரிந்துரைகளின்படி, கிளிப்பர்ட் ஹான்ஸ் நிறுவனமும், லசார்ட் நிறுவனமும் தெரிவு செய்யப்பட்டன. நாடு எதிர்நோக்கிய நிலையில் இருந்து காப்பாற்றுவதற்கு வழங்கிய ஆதரவிற்கு ஜனாதிபதி அண்மையில் அந்த நிறுவனங்களுக்கு விசேட நன்றிகளை தெரிவித்தார். பல சவால்களுக்கு முகம் கொடுத்து நாட்டைக் காப்பாற்ற எவரும் முன்வராத வேளையில் நாட்டைப் பொறுப்பேற்ற ரணில் விக்கிரமசிங்க அவர்கள் எடுத்த நடவடிக்கையால் தற்போது மீண்டும் மூச்சு விடக்கூடிய நாடாக உருவெடுத்துள்ளது. ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்துடன் விரிவான கடன் ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார். நாங்கள் இன்னும் கடனில் இருந்து வருகிறோம். 2028 வரை கடன் செலுத்தப்படாது. கடனை செலுத்த வேண்டிய நாடுகளுக்கு கடனை திருப்பி செலுத்துவதாக வாக்குறுதி அளிக்கப்பட்டுள்ளது. அதன்படி, 2042 ஆம் ஆண்டு வரை ஜப்பான் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளது, இந்தியா மற்றும் பிரான்ஸ் ஆகியவை அதிகாரப்பூர்வ கடன் நடுவர்களாக ஒரு குழுவாக செயல்படுகின்றன. இவ்வாறு அமைச்சர் குறிப்பிட்டார்.

## பிரிக்கப்படாத இலங்கைக்குள்...

ரணில் விக்ரமசிங்க இதனைக் குறிப்பிட்டார். அங்கு பேசிய ஜனாதிபதி:

ஆர். சம்பந்தனின் மறைவால் நீண்டகால நண்பரை இழந்துவிட்டேன். 50 ஆண்டுகளுக்கு முன்பு, புதிய சட்டத்தரணியாக நான்,செயற்பட்டபோதே ஒரு சட்டத்தரணியாக அவரை நான் சந்தித்தேன். 1977 இல், நானும் சம்பந்தனும் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களாக பாராளுமன்றத்திற்கு வந்தோம்.

அன்று பாராளுமன்றத் தேர்தலில் திருகோணமலையில் எமது கட்சியின் செயற்குழு உறுப்பினர் நவரத்தினம் ராஜாவைநான் ஆதரித்தேன். ஆனால், அத்தேர்தலில் ஆர். சம்பந்தன்வெற்றி பெற்றார். தமிழர்களுக்காக மாத்திரமன்றி முழு இலங்கையருக் காகவும் முன்னின்று உழைத்தவர் அமரர் இரா,சம்பந்தன். பிரிக்கப்படாத இலங்கைக்குள் தீர்வு காண்பதற்கு அன்னாருடன் சேர்ந்து நாமும் பணியாற்றினோம். ஆர். சம்பந்தன் எப்பொழுதும் தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டார்.தேசிய காணி ஆணைக்குழுவின் வரைவு தற்போது பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படவுள்ளது. சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களுக்கு வனவளத் திணைக்களத்துடன் உள்ள பிரச்சினைகளை சட்டரீதியாக தீர்க்க ஆணைக்குழுவுக்கு அதிகாரம் வழங்க எதிர்பார்க்கிறோம். எதிர்க்கட்சித் தலைவராக ஆர். சம்பந்தன் எடுத்துக் கொண்ட பங்களிப்புக்கள் பாராட்டத்தக்கவை. உண்மையான எதிர்க்கட்சித் தலைவரின் பண்புகளை அவர் வெளிப்படுத்தியிருந்தார். யார் நீதிமன்றத்திற்கு சென்றாலும், இந்த வருடம் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படும்.அதன் பின்னரே பாராளுமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படும். இந்த நாட்டைப் பிரிக்க முடியாது என்பதால், சமஷ்டி ஆட்சி முறையில் அல்லது மாவட்ட சபை முறையை விட அதிக அதிகாரங்களை வழங்குவது குறித்து தொடர்ந்து கலந்துரையாடி வந்தோம். எங்களுக்குள் பிரச்சினை ஏற்பட்டது. திருகோணமலையில் ஒரு காணியை நான் இளைஞர் சேவை மன்றத்திற்கு வழங்கிய போது பாராளுமன்றத்தில் கூட எமக்கிடையில் விவாதங்கள் இடம்பெற்றன. இதைக் கட்டுப்படுத்த அமரர் சம்பந்தன் எடுத்த முயற்சியும், நாங்கள்எடுத்த முயற்சியும் வெற்றி பெறவில்லை.சம்பந்தன் 1983 இல் இலங்கையை விட்டு வெளியேறினார். மறுபடியும்அவர் பாராளுமன்றத்துக்கு வந்த பிறகு, நாங்கள் மீண்டும் தொடர்புகளைப் பேணினோம்.2009 இல் யுத்தம் முடிவுக்கு வந்த பிறகு, தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக மீண்டும் அவருடன் இணைந்து செயல்படும் வாய்ப்புக் கிடைத்தது. அவர் ஒருபோதும் தனி நாடு கோரவில்லை. அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்று எப்போதும் கூறினார். தமிழ் மக்கள் துன்பப்படுவதாகவும் அவர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார். கடந்த கால நிகழ்வுகள் மற்றும் அரசியல் குறித்து அவரிடம் எப்போதும் நான் பேசுவேன். 1948 இல் இந்த நாடு சுதந்திரம் பெறும் வாய்ப்பைப் பார்த்த ஒரே எம்.பி.அவர்.

## லயனல் பெர்னாண்டோ...

யாழ்ப்பாண அரசாங்க அதிபராக பணியாற்றிய இவரது பணி பலராலும் பாராட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

நெதர்லாந்து, பிரான்ஸ், போத்துக்கல், ஸ்பெய்ன் ஆகிய நாடுகளில் இலங்கைக்கான தூதுவராகவும் மலேஷிய உயர்ஸ்தானிகராகவும் பணியாற்றியுள்ளார்.

வடக்குகிழக்கு மாகாண ஆளுநராக பணியாற்றிய இவர், வெளி நாட்டலுவல்கள் அமைச்சு, வெகுஜன ஊடக அமைச்சு உள்ளிட்ட பல அமைச்சுக்களின் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

இலங்கை கப்பல் கூட்டுத்தாபனம், லேக் ஹவுஸ். (அசோசியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒஃப் சிலோன்) இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் உள்ளிட்ட பல நிறுவனங்களின் தலைவராகவும், தேசிய காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் ஸ்தாபகத் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

லயனல் பெர்னாண்டோ, பேராதனைப் பல்கலைக்கழகத்தில் முதல் பட்டம் பெற்றவர். எதிரிவீர சரச்சந்திரவின் 'மனமே' நாடகத்தின் முதல் தயாரிப்பில் நடிகராக நடித்த இவர், உள்ளூர் சினிமா மற்றும் நாடகத்துறைக்கு பெரும் பங்களிப்பையும் வழங்கினார்.

லயோனல் பெர்னாண்டோ கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் பொருளாதார அபிவிருத்தியில் முதுகலைப் பட்டதாரி டிப்ளோமா பெற்றதுடன் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் சட்டம் படித்தார். இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தினால் சட்டத்தரணியாக அங்கீகரிக்கப்பட்டார். லயனல் பெர்னாண்டோ மறைந்த மூத்த கலைஞர் சோமலதா சுபசிங்கவின் கணவராவார். புதல்விகளான கௌசல்யா பெர்னாண்டோ மற்றும் ஷியாமலிகா நாணயக்கார ஆகியோரின் தந்தையுமாவார்.

இவரது பூதவுடல் பொது மக்களின் அஞ்சலிக்காக இன்று ( 08) திங்கட்கிழமை காலை 9.30 மணி முதல் ஜயரத்ன மலர்சாலையில் வைக்கப்பட்டுள்ளதுடன் மாலை 5.30 மணிக்கு பொரளை மயானத்தில் இறுதிக்கிரியைகள் இடம்பெறவுள்ளது.

## நெல் கொள்வனவுக்காக...

சலுகை வட்டியில் கடன் வழங்கப்படவுள்ளது. சிறு மற்றும் நடுத்தர நெல் ஆலை உரிமையாளர்கள் உள்ளிட்டவர்களுக்கு இக்கடனை சலுகை வட்டியில் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அந்த வகையில் நெல் ஆலை உரிமையாளர்களுக்கு 50 மில்லியன் ரூபாவையும், நெல் களஞ்சியசாலை உரிமையாளர்கள் மற்றும் மொத்த நெல் கொள்வனவாளர்களுக்கு 25 மில்லியன் ரூபாவையும் வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. வங்கிகள் மூலம் 13 வீத வருடாந்த வட்டிக்கு இந்த கடன்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அரசாங்கம் தெரிவிக்கின்றது.

இந்த வட்டியில் 9 வீதத்தை கடன் பெற்றுக் கொள்வோர் செலுத்த வேண்டியுள்ளதுடன் மீதமான 4 வீதத்தை வட்டி நிவாரணமாக வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இக்கடனை 180 தினங்களுக்குள் வழங்கி நிறைவு செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## இணைக்குற்றங்களில்...

பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன. இந்த விசாரணைகள் முடிவடைந்து குற்றம் நிரூபிக்கப்பட்டவர்களை நாடு கடத்தும் பணியில் ஐக்கிய அரபு இராச்சியம் ஈடுபட்டுள்ளது. இந்த வகையில் 37 இலங்கையர் கைதாகி விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன.விசாரணைகள் முடிவுற்ற 11 பேரே, தற்போது கடத்தப்பட்டுள்ளனர். ஏனையவர்கள் விசாரணை முடிவடைந்ததும் நாடு கடத்தப்படுவர். இதேவேளை, சுற்றுலா விசாவில் நாட்டில் தங்கியிருந்து பண மோசடி மற்றும் இணையமூடான ஆட்கடத்தல்களை முன்னெடுத்த குற்றச்சாட்டின் கீழ், இந்தியர்கள் மற்றும் சீனப் பிரஜைகள் உட்பட 209 வெளிநாட்டவர்களை அரசாங்கம் கைது செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மழையுடன் கூடிய...

இதே நிலையில், திருகோணமலை, ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 4050 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக் கூடிய சாத்தியம் காணப்படும் என்றும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

## போதைப்பொருள்...

என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையில் வெள்ளவாய பகுதியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும்போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி தேர்தலுக்கான...

2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலை உறுதிப்படுத்தும் நடவடிக்கைகள் இன்னும் சில தினங்களில் நிறைவடையவுள்ளது.

இந்த நடவடிக்கைகள் நிறைவு பெற்றதும் இம்மாதம் 17 க்குப் பின்னர் ஜனாதிபதித் தேர்தலுக்கான திகதி வெளியிடப்படும்.

இந்த வகையில், ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் 14ஆம் திகதிக்கும் அக்டோபர் 16ஆம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் நடத்தப்படும்.

## பிரிட்டிஷ் தேர்தலில்...

பெற்றோர் யாழ்ப்பாணத்திலிருந்து புலம்பெயர்ந்து பிரிட்டனுக்கு சென்றுள்ளனர். அங்கு கிழக்கு லண்டனிலேயே அவர் பிறந்துள்ளார். இவர் அங்கு கல்வி கற்று சட்டத்தரணியாக நியமனம் பெற்றதன் பின்னர் சமூக சேவை நிறுவனம் ஒன்றில் பணிபுரிந்துள்ளார்.

அத்துடன் அவர் அந்நாட்டில் தொழில் கட்சியில் இணைந்து அரசியல் நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளார். 2015 ஆம் ஆண்டு அவர் பிரிட்டன் பொதுத் தேர்தலில் ஹெரோ பிரதேசத்தை பிரதிநித்துவப்படுத்தி தேர்தலில் போட்டியிட்டு 19,911 வாக்குகளைப் பெற்றுள்ளார். எனினும் அவருக்கு உறுப்பினர் பதவி கிடைக்கவில்லை. அந்த வகையில் இம்முறை பிரிட்டன் பாராளுமன்ற தேர்தலில் தமிழர்கள் ஆறு பேர் போட்டியிட்டதுடன் உமா குமரனுக்கு நிகராக போட்டியிட்ட யாழ்ப்பாண வம்சாவளியைச் சேர்ந்த மற்றுமொரு பெண்ணான க்ருஷி ரிஷிகரன் பெற்றுக்கொண்ட வாக்குகள் அடிப்படையில் அவருக்கு உறுப்பினர் பதவி கிடைக்கவில்லை.

## கொழும்பில் போரா மாநாடு...

நாட்டுக்கு வரவுள்ளனர்.இந்த நிலையில் நாளை முதல் 16 ஆம் திகதி வரை காலி வீதி, கொழும்பு கோட்டை மற்றும் பம்பலப்பிட்டி மரைன் டிரைவிற்குள் பிரவேசிக்கும் பல வீதிகள் சில மணிநேரங்கள் மூடப்படவுள்ளன. அத்துடன் மாநாடு நடைபெறும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் போக்குவரத்துக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் எனவும் காவல்துறை ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

## 1,700 ரூபாய்...

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை ரூ. 1,700 ஆக அதிகரிப்பது தொடர்பில் தொழில் அமைச்சு வர்த்தமானி வெளியிட்டிருந்தது. இந்நிலையில்,இந்த வர்த்தமானி நடைமுறைப் படுத்துவதை தடுத்து, உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவையும் பிறப்பித்தது.

கம்பனிகளோடு எந்தவொரு பேச்சுவாரத்தையும் நடத்தப்படாமல் வர்த்தமானி வெளியிடப்பட்டமை தவறான செயற்பாடு. இது தோட்ட தொழிலாளர்களை ஏமாற்றும் செயற்பாடகவே உள்ளது.

இச்சம்பள அதிகரிப்பு விவகாரத்திற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். இதுவே, எங்களது ஆசையாக உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## அரசாங்க ஊழியர்களின்...

பிரச்சனைகளுக்கும் தனித்தனியே தீர்வு காணும்போது மேலும் பல பிரச்சினைகள் உருவாகும் எனக் குறிப்பிட்டுள்ள அவர், அனைத்துக்கும் நிரந்தர தீர்வு காண்பதற்காக முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர் அடங்கிய விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்தின் வருமான அதிகாரிப்பின்றி தற்போதைய சூழ்நிலையில் அரசாங்க ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க முடியாத நிலை காணப்படுவதாக தெரிவித்துள்ள அவர்,

அவ்வாறு அதிகரிக்கக்கூடிய முறைமை ஒன்று காணப்படுமாயின் அதனை தெரிவிக்குமாறு தொழிற்சங்கங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளுக்கு தாம் அழைப்பு விடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி நிதிய உதவி...

அலுவலகங்கள் மற்றும் அதிபர்களின் ஒருங்கிணைப்புடன் இந்த உதவித் தொகை வழங்கப்படும். இந்த புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ், தெரிவு செய்யப்பட்டோரின் பெயர்ப் பட்டியல்கள் அடுத்த சில நாட்களில் ஜனாதிபதி நிதியத்தின் உத்தியோகபூர்வ முகநூல் (Facebook) பக்கத்தில் வெளியிடப்படவுள்ளன. ஒரு கல்வி வலயத்திலிருந்து 60 மாணவர்கள் வீதம் 6000 மாணவர்கள் இதற்கென தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். அடுத்த மாதம் முதல் க.பொ.த (உ/த) பரீட்சைக்குத் தோற்றும் வரை மாதாந்தம் ரூ.6000/ புலமைப்பரிசில் வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## நூறு எம்பிக்களின் பட்டியலை...

இராஜாங்க அமைச்சர்கள் தமது சொத்துக்கள் தொடர்பான விபரங்களை ஜனாதிபதியின் செயலாளரிடமே கையளிப்பர். அந்த வகையில் இதுவரை சொத்துக்கள் தொடர்பான விபரங்களை சமர்ப்பிக்காத பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்ப்பட்டியல்கள், பாராளுமன்ற பிரதானிகளால் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## வீடமைப்பு கடன்...

2,33,578 வீடுகளுக்கு மட்டுமே தேவையான ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த நிலையில் 107,932 வீடுகளுக்கு தவணைத் தொகையை வழங்க முடியவில்லை.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சராக நியமிக்கப்பட்ட பின்னர், புதிய வீட்டுத் திட்டங்களை ஆரம்பிக்கும் பணிகளை இடைநிறுத்திவிட்டு, முன்னர் ஆரம்பிக்கப்பட்ட பழைய வீட்டுத் திட்டங்களை நிறைவு செய்யுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

அந்த வகையில் சஜித் பிரேமதாசவின் காலப்பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட வீட்டுக்கடன் திட்டத்தில் தகுதியற்ற 53,709 பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை...

ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஒத்துழைப்பு வழங்கியது கடனாகவோ அல்லது பயத்தினாலோ அல்ல என தெரிவித்துள்ள அவர், நாட்டை மீட்டெடுக்கும் திறமை ரணில் விக்கிரமசிங்கவுக்கு உள்ளதாக கட்சியில் அனைவரும் ஏகமனதாக தீர்மானித்ததாலேயே, இம்முடிவுக்கு வந்ததாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்தும் நாடு மற்றும் நாட்டு மக்களின் நலன் கருதி தற்போதைய ஜனாதிபதிக்கு தமது கட்சி பூரண ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## இஸ்லாமிய புது...(03ஆம் பக்க தொடர்ச்சி)

இதற்காக இஸ்லாமிய வரலாற்றின் மறுமலர்ச்சியாக அமைந்த ஹிஜ்ரத்தை அடிப்படையாக வைத்து இந்நாட்காட்டி முறை அறிமுகப்படுத்தப்பட்டது.

அந்தவகையில் புதிய ஹிஜ்ரி ஆண்டின் தொடக்கமானது, ஹிஜ்ரத் எனும் மதீனாவை நோக்கிய ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இடம்பெயர்வையும் உலகத்திற்கே முன்மாதிரியாக நிறுவப்பட்ட மதீனா சாசனத்தையும் எமக்கு நினைவுபடுத்துகிறது. ஒரு ஹிஜ்ரி ஆண்டில் முஹர்ரம் (ஆண்டின் முதல் மாதம்), ஸபர், ரபீஉனில் அவ்வல், ரபீஉனில் ஆகிர், ஜுமாதல் ஊலா, ஜுமாதல் ஆகிரா, ரஜப், ஷஃபான், ரமழான், ஷவ்வால், துல் கஃதா, துல்ஹிஜ்ஜஹ் ஆகிய பன்னிரண்டு சந்திர மாதங்கள் உள்ளன. இவற்றில் முஹர்ரம், ரஜப், துல் கஃதா, துல்ஹிஜ்ஜஹ் ஆகிய மாதங்களை இஸ்லாம் புனித மாதங்களாக அடையாளப்படுத்தி உள்ளது. ஒவ்வொரு மாதமும் பிறை பார்ப்பதன் மூலம் அந்தந்த மாதத்தின் ஆரம்பம் தீர்மானிக்கப்படுகிறது.

ஹிஜ்ரி நாட்காட்டி முஸ்லிம்களின் அன்றாட வாழ்வியலின் அடையாளமாகும். ஸகாத், நோன்பு, ஹஜ் போன்ற வருடாந்த வணக்க வழிபாடுகள் ஹிஜ்ரி பிறைக் கணக்கை அடிப்படையாகக் கொண்டே தீர்மானிக்கப்படுகிறது.

இஸ்லாமிய சந்திர நாட்காட்டியின் ஒரு மாதம் 29 அல்லது 30 நாட்களாகும். அந்தவகையில் ஓர் ஆண்டு 354 அல்லது 355 நாட்களைக் கொண்டிருக்கும். எனவே ஹிஜ்ரி நாட்காட்டியின் ஒரு வருடம், கிரிகோரியன் சூரிய நாட்காட்டியின் மொத்த நாட்களின் எண்ணிக்கையிலிருந்து பத்து அல்லது பதினொரு நாட்கள் குறைந்து காணப்படும்.

இவ்வாறு நாள், வாரம், மாதம், வருடம் என காலங்கள் மாற்றமடைவது மனிதர்கள் புத்துணர்ச்சி பெறுவதற்கும், எண்ணங்கள் புதுப்பிக்கப்படுவதற்கும் அதன் மூலம் அல்லாஹ்வின் பக்கம் மனிதர்கள் மீள வேண்டும் என்பதற்காகவுமே என்று அல்குர்ஆன் குறிப்பிடுகிறது.

'இன்னும் சிந்திக்க விரும்புபவருக்கு அல்லது நன்றி செலுத்த விரும்புபவருக்கு அவன்தான் இரவையும் பகலையும் அடுத்தடுத்து வருமாறு ஆக்கினான்.' (ஸூரா புர்கான்: 62)

ஆக நாம் அடைந்திருக்கும் இப்புதுவருடத்தில் புத்துணர்வு பெற்று, அல்லாஹ்வின் பக்கம் மீள்வதோடு நல்லெண்ணம், நியாயம், நீதி, சகவாழ்வு, தேசப்பற்று போன்ற பண்புகளை எமது வாழ்வில் கடைபிடிப்போம். தாய்நாடான இலங்கைக்கும் முழு உலகிற்கும் பிரயோசனமுள்ளவர்களாகவும் முன்மாதிரி பிரஜைகளாகவும் வாழ்ந்து மரணிக்க அல்லாஹு தஆலா எம்மனைவருக்கும் துணைநிற்பானாக.

## தொழிற்சங்கப் போராட்டத்தில்...(03ஆம் பக்க தொடர்ச்சி)

சுகாதாரத்துறையில் பல்வேறு சிக்கல்கள் காணப்பட்ட போதும் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கான காலம் இதுவல்ல.

இந்த உறுதியான நிலைப்பாட்டில் தமது தொழிற்சங்கம் உள்ளதாகவும் அதன் செயலாளர் தெரிவித்துள்ளார்.

## மாணிக்க கங்கையில்...(03ஆம் பக்க தொடர்ச்சி)

நேற்று முன்தினமிரவு (6) ஒன்பது மணியளவில் பெரஹர ஆரம்பமானது. இதையடுத்து இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. பெரஹராவை பார்த்துக் கொண்டிருந்த மக்கள் அச்சமடைந்து அங்குமிங்கும் ஓடியதால் பலர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். காயமடைந்தவர்களை கதிர்காமம் வைத்தியசாலையில் அனுமதித்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

## சுற்றுலாத்துறையால்...(03ஆம் பக்க தொடர்ச்சி)

2023 ஆம் ஆண்டில் வருகை தந்த 624,874 சுற்றுலாப் பயணிகளுடன் ஒப்பிடும்போது இது 61.7சதவீத அதிகரிப்பைக் குறிப்பதாகவும் மத்திய வங்கி மேலும் தெரிவித்துள்ளது.

## இளைஞர்களின் வாழ்க்கையை...

இராஜாங்க அமைச்சர்: பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்களின் இரண்டு மாத வேதனம் மற்றும் ஏப்ரல் மாதத்திற்கான மேலதிக நேரக் கொடுப்பனவுகள் வழங்கப்படும். கோரிக்கைகளுக்கு முன்னுரிமை அளித்து அவற்றை உதய செனவிரத்ன குழுவிற்கு சமர்ப்பித்து, 2025ஆம் ஆண்டுக்கான வரவுசெலவு திட்டத்தில் உள்ளடக்க நடவடிக்கை எடுக்கப்படும். நாட்டில் உள்ள 17 பல்கலைக்கழகங்கள் மற்றும் 19 ஒன்றிணைந்த பட்டப்படிப்பு நிறுவனங்களின் 14,600 கல்விசாரா ஊழியர்கள் 65 நாட்களாக பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர். இதனால் முழு உயர் கல்வித்துறையும் முடங்கியுள்ளது. கல்வியைக் கட்டியெழுப்பி, மாணவர்களின் எதிர்காலத்தை பாதுகாப்பதே அனைவரது நோக்கமாக இருக்க வேண்டும்.இவ்வாறு உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

இஸ்ரேலிய தூதுவர் - அமைச்சர் மனுஷ சந்திப்பு;

# இலங்கைத் தொழிலாளர்கள் தொடர்பிலும் கலந்துரையாடல்



தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்காரவிற்கும் இலங்கைக்கான இஸ்ரேலிய தூதுவர் நவோர் கிலோனுக்கும் இடையிலான சந்திப்பு தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது, இலங்கையர்களுக்கான இஸ்ரேலின் வேலை வாய்ப்புகள் மற்றும் தற்போது இஸ்ரேலில் பணிபுரியும் இலங்கையர்களின் நிலைமை குறித்து கலந்துரையாடப்பட்டன.

இரண்டு வருடங்களுக்கு முன்னர் இஸ்ரேலில் ஏற்பட்ட அசாதாரண நிலை காரணமாக இலங்கையில் இருந்து பயிற்சியற்ற தொழிலாளர்கள் கூட கோரப்பட்டதாக சுட்டிக்காட்டப்பட்டது. எனினும் இஸ்ரேலுக்குச் சென்ற சில இலங்கையர்களின் நடத்தை மற்றும் முறையற்ற செயற்பாடுகள் காரணமாக ஏற்பட்ட பிரச்சினைகளினால் இஸ்ரேலில் உள்ள விவசாய தொழில் முயற்சியாளர்கள் தற்போது இலங்கை தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவதில் தயக்கம் காட்டுகின்றனர்.

இஸ்ரேலில் உள்ள சில இலங்கைத் தொழிலாளர்கள் இலங்கை போராட்டங்களைப் போன்று போராட்டங்களில் ஈடுபடத் தொடங்கியதால் இந்த நிலை ஏற்பட்டதாக அமைச்சர் மனுஷ நாணயக்கார எடுத்து காட்டினார். இதற்கான தீர்வாக இஸ்ரேலிய விவசாய தொழில் முயற்சியாளர்களை இலங்கைக்கு வரவழைத்து பொருத்தமான நபர்களை அவர்களுடன் கலந்தாலோசிக்க ஒரு வேலைத்திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

அடிப்படை ஆவணங்களை கொண்டுள்ளவர்கள் இஸ்ரேலிய முதலீட்டாளர்களால் குழுக்கள் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலாளர்கள் பரிசீலிக்கப்படுவார்கள் என அமைச்சர் குறிப்பிட்டார். தேர்ந்தெடுக்கப்பட்ட எட்டாயிரம் பணியாளர்கள் அனுப்பப்பட்ட பிறகு புதிய தொழிலாளர்கள் இஸ்ரேலுக்குச் செல்ல வாய்ப்பு கிடைக்கும். விவசாயத் துறையை அன்றி கட்டுமானம், தாதியர் பராமரிப்பாளர், ஹோட்டல் போன்றவற்றில் பல வேலை வாய்ப்புகள் உள்ளன.

விவசாயத் துறைக்கு தகுதியற்ற தொழிலாளர்கள், ஆனால் தற்போது இஸ்ரேலுக்குச் செல்ல தகுதியுடையவர்கள் இந்த மற்ற வேலை வாய்ப்புகளுக்கு விண்ணப்பிக்க வாய்ப்புள்ளது.

இஸ்ரேலில் பாரிய அளவிலான கட்டுமானத் திட்டங்களுக்கு தொழிலாளர்கள் தேவைப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. தற்போது தெரிவு செய்யப்பட்ட தொழிலாளர்களுக்கு இத்திட்டங்களில் வாய்ப்பு வழங்குவதற்கு உடன்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதன்படி, இஸ்ரேலில் நெடுஞ்சாலைகள் மற்றும் புகையிரதப் பாதைகள் போன்ற பாரிய நிர்மாணங்களில் பணிபுரியும் வாய்ப்பு இலங்கையர்களுக்குக் கிடைக்கும்.

கடந்த காலங்களில் இஸ்ரேலுக்குச் சென்ற சில தொழிலாளர்களின் பொறுப்பற்ற நடத்தை காரணமாக இஸ்ரேலிய வேலைகள் தற்போது நெருக்கடிக்கு உள்ளாகியுள்ளதாக அமைச்சர் நாணயக்கார தெரிவித்தார். இஸ்ரேலில் பணிக்குச் சென்ற தொழிலாளர்களின் முறையற்ற நடத்தைக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும், தேவைப்பட்டால் அத் தொழிலாளர்களை மீண்டும் இலங்கைக்கு அழைக்கவும் தயங்கமாட்டேன் என அமைச்சர் இதன்போது, மேலும் தெரிவித்தார்.

## பிழைத்திருத்தம்

### கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை - ராகம

மேற்குறிப்பிட்டுள்ள தலையங்கத்தின் கீழ் 2024 ஜூலை 4 ஆம் திகதியன்று பிரசுரிக்கப்பட்ட பெறுகை அறிவித்தலின் ‘‘வாதநோய் மற்றும் புனர்வாழ்வு வைத்தியசாலைக்கு’’ என II ஆம் பக்கத்தில் பின்வருமாறு பிரசுரிக்கப்பட்டுள்ளது.

01. Standard Portable Ultrasound Machine - 1 23 (கேள்விப் பிணை ரூபா) என தவறுதலாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. இதனை 90,000 என திருத்தி வாசிக்கவும்.

ஏனையவற்றில் எவ்வித மாற்றங்களுமில்லை.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**கொழும்பு வடக்கு போதனா வைத்தியசாலை,**
**ராகமம.**

## புதிய நம்பிக்கைகளை அளிக்கும் இஸ்லாமிய புத்தாண்டு உதயம்



ஹிஜ்ரி 1446, இஸ்லாமிய புத்தாண்டு உதயமானது. சமாதானம், நல்லிணக்கம் மற்றும் செழிப்புக்கான புதிய நம்பிக்கைகளையும் அபிலாஷைகளையும் எமக்கு அளிக்கின்றது என்று இலங்கைக்கான சவூதி அரேபிய தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி தெரிவித்துள்ளார்.

இஸ்லாமிய புத்தாண்டு உதயத்தின் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேற் கண்டவாறு குறிப்பிட்டுள்ள அவர், இச் சந்தர்ப்பத்தில், இலங்கை மக்களுக்கு எனது அன்பான நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில்மகிழ்ச்சியடைகிறேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## எலுவில நபவிய்யாவில் இன்று முஹர்ரம் நிகழ்வு



புனித முஹர்ரம் 1446 புத்தாண்டை முன்னிட்டு பாணந்துறை, எலுவில நபவிய்யா ஹிப்ழ் குர்ஆன் மத்ரஸா ஒழுங்கு செய்துள்ள முஹர்ரம் விசேட நிகழ்வு இன்று (08) மஃரிப் தொழுகையைத் தொடர்ந்து புதிய மாணவர்களுக்கு அல் குர்ஆன் பாராயன நிகழ்வும் இஷாத் தொழுகையைத் தொடர்ந்து விசேட பயான் நிகழ்வும் மத்ரஸாவில் நடைபெறவுள்ளது.

இம்மஜ்லிஸில் உலமாக்களின் விசேட உரை இடம்பெறவுள்ளதால் அனைவரும் தவறாது கலந்து சிறப்பிக்குமாறு விழா ஏற்பாட்டு குழுவினர் கேட்டுக்கொள்கின்றனர். அல் குர்ஆன் ஓத ஆரம்பிக்கவிருக்கும் சிறார்களும் இதில் கலந்துகொள்ளுமாறும் ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## யோகசாந்தி குருகுலத்தின் நிறுவனர் இலங்கை வருகை; விமான நிலையத்தில் மகத்தான வரவேற்பு



தமிழ்நாடு சென்னை யோகசாந்தி குருகுலத்தின் நிறுவனர் பூஜ்ய சுவாமி ப்ரம்ம ஸ்ரீ யோகானந்தா அகண்ட ஐக்கிய பாரத யாத்திரையை மேற்கொண்டு நேற்று (07) கொழும்பு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார். இவரை தொழிலதிபர் தெ. அருணாச்சலம், திருமதி சீதாலட்சுமி அருணாச்சலம், நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் எச்.எச். விக்கிரமசிங்க ஆகியோர் வரவேற்றபோது எடுத்த படம்.

## பிரசித்த ஏல விற்பனை

4ம், 5ம் ஜூலை 2023, 29ம், 30ம் நவம்பர் 2023, 28ம், 29ம் டிசம்பர் 2023, 29ம், 30ம் ஜனவரி 2024, 26ம், 27ம் பிப்ரவரி 2024, 27ம், 28ம் மார்ச் 2024, 29ம், 30ம் ஏப்ரல் 2024, 30ம், 31ம் மே 2024, 27ம், 28ம் ஜூன் 2024 இல் "மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் டுடே" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. எல்.பி.பினான்ஸ் பிஎல்சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த தவறிய காரணங்களினால் ஏல விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தங்க நகைகள் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| எல்பிட்டிய, பிட்டிகல, ஹொரண, பண்டாரகம, மத்துகம, பதுரலிய, பலாங்கொடை, ரத்தினபுரி, அவிசாவளை, எஹலியகொட, ஹன்வெல்ல, வெள்ளவத்தை, வெள்ளவத்தை நகர கிளை, தெஹிவளை, மொறட்டுமுல்லை, மொறட்டுவ, கெசல்வத்த, வாட்டுவ, தெஹிவளை நகர கிளை, அத்திடிய, பொரலஸ்கமுவ, பிலியந்தலை, தர்கா நகர், பாணந்துறை, கல்கிச, ரத்மலான, நகர அலுவலகம், அளுத்கம, பேருவளை, களுத்துறை, டெல்கந்த, கிருலப்பனை, நுகேகொடை, கோட்டே, பத்தரமுல்லை, எம்பிலிப்பிட்டிய, திஸ்ஸமஹாராம, கொலன்னாவ, பதுளை நகர கிளை, பதுளை, அம்பலாந்தோட்டை, பண்டாரவளை | 25 ஜூலை 2024 |
| நுவரெலியா, மஹியங்கனை, மொனராகலை, வெலிமடை, தெஹியத்தகண்டி, குருநாகல் நகர கிளை, குருநாகல் பிறீமியர் நிலையம், குருநாகல், குளியாபிட்டிய, நாரம்மல, கலேவேல, பிலிமத்தலாவை, கண்டி, கண்டி நகர கிளை, கடுகஸ்தோட்டை, நாவலப்பிட்டிய, மாத்தளை, கெலிஓயா, ஆனமடுவ, புசல்லாவை, கம்பளை, கம்பளை நகர கிளை, ஹட்டன், மஸ்கெலிய, திகனா, தம்புள்ளை, புத்தளம், கொட்டாஞ்சேனை, அளுத்மாவத்தை கொழும்பு 15, மட்டக்குளிய, மோதறை, கிரான்ட்பாஸ் சுலைமான் கொழும்பு 14, கணேமுல்ல, சிலாபம், கொச்சிக்கடை-நீர்கொழும்பு, நீர்கொழும்பு, நீர்கொழும்பு நகர கிளை, வென்னப்புவ, மாரவில, கட்டுநாயக்க-அவிரிவத்த, வத்தளை, கந்தானை, ராகம, ஜா-எல, எலகந்த, கல்பிட்டிய, கெக்கிரவ, அனுராதபுர நகர கிளை, அனுராதபுரம், மதவாச்சிய, தம்புத்தேகம, நொச்சியகம, பொலன்னறுவை, மெதிரிகிரிய, கந்தலை, ஜம்பெட்டா, கிரான்ட்பாஸ் | 26 ஜூலை 2024 |
| கொத்தாடுவ புதிய நகரம், தெமட்டகொட, தொட்டலங்க, ராஜகிரிய, நாரஹேன்பிட்டி, ஹோமாகம, மஹரகம நகர கிளை, மஹரகம, கொட்டாவ, அதுருகிரிய, அம்பலாங்கொட, கராபிட்டிய, காலி, தங்காலை, சங்கராஜ மாவத்தை-கொழும்பு 10, மாளிகாவத்த, செட்டியார் தெரு, கொகுவல, டாம் வீதி, டீன்ஸ் வீதி கிளை, மருதானை, பொறளை, பொறளை நகர கிளை, மாத்தறை, மாத்தறை நகர கிளை, தெனியாய, நெலுவ, அக்குரஸ்ஸ, மாலபே, கிரிபத்கொடை, தெல்கொடை, கடவத்தை, களனி, கடுவெல, கிரிபத்கொடை-மாகொல, பிறீமியர் கொழும்பு 07, கொம்பனித் தெரு, கார்ப்பரேட் அலுவலகம், தலைமை அலுவலகம் கொழும்பு 07,மாவனல்ல, மினுவங்கொட, கேகாலை, திஹாரிய, வரக்காபொல, நிட்டம்புவ, கம்பஹா, திவுலபிட்டிய | 27 ஜூலை 2024 |
| யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் பிறீமியர், யாழ்ப்பாண நகரம், கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, திருநெல்வேலி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, மல்லாவி, வட்டுக்கோட்டை, கோப்பாய், கொடிகாமம், பருத்தித்துறை, சாவகச்சேரி, தெல்லிப்பளை, வவுனியா, பேசாலை, சங்கானை ,மன்னார், மருதங்கேணி, வல்வெட்டித்துறை, செங்கலடி, வாழைச்சேனை, கிண்ணியா, திருகோணமலை, கொக்கட்டிச்சோலை, ஆரையம்பதி, மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, கல்முனை, ஏறாவூர், வஹரை, சேருநுவர, கிரன், திருகோணமலை நகரம், வவுணதிவு, சாய்ந்தமருது, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, மத்திய முகாம், அம்பாறை, பொத்துவில், அக்கரைப்பற்று, திருக்கோவில் | 09 ஆகஸ்ட் 2024 |

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ எல்.பீ. ∴பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்திற்கு உரிமம்

LB FINANCE
உதவி பொது மேலாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**ரூ. 105,000 மில்லியனுக்கான திறைசேரி உண்டியல்கள் 2024 ஜூலை 10ஆம் திகதி ஏலவிற்பனை ஊடாக வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09124J115 | LKA18225A100 | LKA36425G119 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 30,000 | 40,000 | 35,000 | 105,000 |

ஏலவிற்பனைத் திகதி : 2024 ஜூலை 10
தீர்ப்பனவுத் திகதி : 2024 ஜூலை 12
வழங்கப்படும் திகதி : 2024 ஜூலை 12
விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் : 2024 ஜூலை 10 புதன்கிழமை மு.ப. 11.00
விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக்குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக்குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| கொமர்ஷல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி | 2332319 |
| பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடெட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடெட் | 2675096 |

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.
முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என்.டி.வை.சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

***வழங்கும் அலுவலகம்:***
**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

## Ministry of Education
## Vocational Training Authority of Sri Lanka

### Notice of Extension of Bid Closing and Opening Date

***Construction Works in Vocational Training Centers of Vocational Training Authority of Sri Lanka.***

(Reference to the advertisement which was published on 18/06/2024)

The Chairman, Department Procurement Committee on behalf of Vocational Training Authority of Sri Lanka has extended the final date of Bid Issuing and the Bid Closing / Bid Opening Date of the above advertisement for following construction works by further 14 days. The amended final date and time of Bid issuing will be 3.00 p.m on 22/07/2024 and the amended date and time of Bid Closing /Bid Opening will be 2.30 p.m on 23/07/2024.

1. Construction of Steel Roof on Concrete Column- Beam Structure on the First Floor Slab of Existing Building at District Vocational Training Center at Veyangoda, Gampaha
2. Construction of Steel Roof on Concrete Column- Beam Structure on the First Floor Slab of Existing Building at District Vocational Training Center at Nuwaraeliya
3. Construction of Steel Roof on Concrete Column- Beam Structure on the First Floor Slab of Existing Building at District Vocational Training Center at Ballapana, Kegalle
4. Construction of Steel Roof on Concrete Column- Beam Structure on the First Floor Slab of Existing Building at Vocational Training Center at Bulnewa, Anuradhapura

**Chairman,**
**Department Procurement Committee,**
**Vocational Training Authority of Sri Lanka,**
**4th floor, “Nipunatha Piyasa”, 354/2, Elvitigala Mawatha,**
**Narahenpita, Colombo 05.**
**Tel. 011-2596516, 0719476753**

## தேசிய லொத்தர் சபை – National Lotteries Board
சனி 2024.07.06 – உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத – சீட்டிழுப்பு இலக்கம் 5526 – அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 37,868,328.00
ஆங்கில எழுத்து Q – வெற்றி இலக்கங்கள் 7 9 3 6 7 4

அத சம்பத – சீட்டிழுப்பு இலக்கம் 101 – ஆங்கில எழுத்து Q – வெற்றி இலக்கங்கள் 3 6 7 4

கொவிசெத – சீட்டிழுப்பு இலக்கம் 3768 – சீட்டிழுப்பு திகதி 2024.07.06 – அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,385,447.56
ஆங்கில எழுத்து G – வெற்றி இலக்கங்கள் 13 37 54 57 – விசேட எழுத்து G – இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 53127

Mega POWER – சீட்டிழுப்பு இலக்கம் 1874 – 2024.07.06 – 78419 – அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 437,971,210.00
ஆங்கில எழுத்து P – சுப்பர் இலக்கம் 01 – வெற்றி இலக்கங்கள் 12 36 63 65
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 – அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP – திகதி 2024.07.06 – சீட்டிழுப்பு இலக்கம் 352
ஆங்கில எழுத்து E – வெற்றி இலக்கங்கள் 4 4 9 1 2 2 – L7 எழுத்து E
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 32,410,060.88

ராசி சுப பலன் – திகதி 2024.07.06 – சீட்டிழுப்பு இலக்கம் 835 – அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,270,454.80
வெற்றி இலக்கினம் மிதுனம் – வெற்றி இலக்கங்கள் 17 25 29 53 – தனயோக இலக்கம் 58672 – நாளுக்கான விதி எண் 18

தன நிதானய – சீட்டிழுப்பு இலக்கம் 1556 – 2024.07.06 – அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 99,897,251.60
ஆங்கில எழுத்து M – வெற்றி இலக்கங்கள் 15 43 59 71 – விசேட எழுத்து M – இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 13894

## தேசிய லொத்தர் சபை – National Lotteries Board
வெள்ளி 2024.07.05 – உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத – சீட்டிழுப்பு இலக்கம் 5525 – அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 37,273,632.00
ஆங்கில எழுத்து R – வெற்றி இலக்கங்கள் 2 2 8 3 0 3

அத சம்பத – சீட்டிழுப்பு இலக்கம் 100 – ஆங்கில எழுத்து R – வெற்றி இலக்கங்கள் 8 3 0 3

கொவிசெத – சீட்டிழுப்பு இலக்கம் 3767 – சீட்டிழுப்பு திகதி 2024.07.05 – அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 64,241,381.16
ஆங்கில எழுத்து N – வெற்றி இலக்கங்கள் 41 43 47 62 – விசேட எழுத்து N – இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 67292

Mega POWER – சீட்டிழுப்பு இலக்கம் 1873 – 2024.07.05 – 28413 – அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 437,971,210.00
ஆங்கில எழுத்து K – சுப்பர் இலக்கம் 24 – வெற்றி இலக்கங்கள் 02 08 09 34
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 – அடுத்த கிரான்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP – திகதி 2024.07.05 – சீட்டிழுப்பு இலக்கம் 351
ஆங்கில எழுத்து V – வெற்றி இலக்கங்கள் 7 8 2 4 3 8 – L7 எழுத்து V
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 32,346,798.08

ராசி சுப பலன் – திகதி 2024.07.05 – சீட்டிழுப்பு இலக்கம் 834 – அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,259,270.00
வெற்றி இலக்கினம் ரிஷபம் – வெற்றி இலக்கங்கள் 29 36 46 59 – தனயோக இலக்கம் 28407 – நாளுக்கான விதி எண் 11

தன நிதானய – சீட்டிழுப்பு இலக்கம் 1555 – 2024.07.05 – அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 99,786,401.20
ஆங்கில எழுத்து S – வெற்றி இலக்கங்கள் 11 18 35 79 – விசேட எழுத்து S – இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 18584

# முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மீன்பிடித்தலை கட்டுப்படுத்துதல் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம்

ஓமந்தை விஷேட நிருபர்



முல்லைத்தீவு மாவட்டத்தில் சட்டவிரோத மீன்பிடித்தலை கட்டுப்படுத்துதல் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களின் தலைமையில் கடந்த (06) சனிக்கிழமை காலை முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்ட கடற்பரப்பில் சட்டவிரோதமான முறையில் பல படகுகள் மின் விளக்கினை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபடுவதனால் பல ஆயிரம் கிலோ மீன்களை பிடிக்கின்றார்கள். இதனால் சாதாரண மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதாகவும் மீன்வளம் அழிக்கப்படுவதாகவும் இதனை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள் மற்றும் கடற்றொழில் திணைக்களத்தின் மாவட்ட பணிப்பாளர் ஆகியோரால் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்களிடம் கோரப்பட்டதற்கு அமைவாக 2024.04.17 ஆம் திகதி இடம்பெற்ற கலந்துரையாடலில் மேற்கொண்ட தீர்மானங்களின் முன்னேற்றம் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது. கடற்றொழில் திணைக்களத்தினர், கடற்படை இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து சட்டவிரோத மீன்பிடித்தலை கட்டுப்பாட்டுக்கு கொண்டுவருவதற்கான தொடர்ச்சியான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் வலியுறுத்தினார்.

குறித்த கலந்துரையாடலில் மாவட்ட அரசாங்க அதிபர் அ. உமாமகேஸ்வரன், மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்களத்தின் பணிப்பாளர், முல்லைத்தீவு மாவட்ட கடற்படைத் தளபதி, மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி, மாவட்ட இராணுவ அதிகாரி, கடற்படை அதிகாரிகள், மீனவ சங்கங்களின் பிரதிநிதிகள், மீனவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

## சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்த நிகழ்வு

(கரவெட்டி தினகரன் நிருபர்)

யாழ்ப்பாணம், வடமராட்சி, தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலை பண்பாட்டு பேரவையின் வாராந்த நிகழ்வு கடந்த (05) வெள்ளிக்கிழமை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் முன்னிலையில் சந்நிதியான் சைவ கலை பண்பாட்டு பேரவையின் உறுப்பினர் சொல்லின் செல்வர் செல்வவடிவேல் தலைமையில் பஞ்ச புராண ஓதுதலுடன் ஆரம்பமானது. இதில் அயில் வேலன் கவி எனும் தலைப்பில் உள வளத்துணையாளர் நா.நவராஜ் ஆன்மீக உரை நிகழ்த்தினார். இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், அடியவர்கள் என பலரும் கலந்து கொண்டனர். இதேவேளை, சந்நிதியான் ஆச்சிரமத்தால் கதிர்காமம் செல்லும் யாத்திரிகர்களுக்கு அம்பாறை உகந்தை முருகன் ஆலயத்தில் பல லட்சம் பெறுமதியான சமையலுக்கு தேவையான உணவுப் பெருள்கள் வழங்கிவைக்கப்பட்டன. குடி தண்ணீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்து கொடுக்கப்பட்டன. இதேவேளை, சிலாபம் முன்னேஸ்வரம் சிவாலயத்தில் கடந்த 03 ஆம் திகதி புதன்கிழமை திருவாசகம் முற்றோதல் இடம்பெற்றது. இதில் சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள், சைவகலை பண்பாட்டுப் பேரவை உறுப்பினர்கள், இந்தியாவில் இருந்து வருகை தந்த ஆன்மீகப் பெரியார்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

# வடக்கின் உதயம்

## ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய மஹோற்சவ திருவிழா

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைந்துள்ள வரலாற்று சிறப்பு மிக்க ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வர பெருமான் ஆலயத்தின் 2024 ஆம் ஆண்டுக்கான மஹோற்சவ திருவிழா கடந்த 06 ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

இதற்கமைய, பூஜை மற்றும் அபிஷேகங்கள் ஆகியன ஆலய உற்சவ பிரதம குரு சிவஸ்ரீ. கீர்த்திவாசக் குருக்கள் மற்றும் ஆலய அர்ச்சகர் கீ. காருண்யசர்மா ஆகியோரின் தலைமையில் நடைபெற்று வருகின்றது.

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் கோவிலில் கொடியேற்றம் நடைபெறும் அதே சமயம் அருகில் உள்ள ஆலடி பிள்ளையார் கோவிலிலிருந்து சுமார் 30 அடி நீளமான கொடி கம்பம் கொண்டுவரப்பட்டு கோபுர வாசலில் நடப்பட்டு அதில் நந்திக்கொடி பறக்க விடப்பட்டுள்ள அதே சமயம் காதலியார் சம்மளங்குளதில் இருக்கின்ற சிவன் கோயிலிலும் கொடியேற்றப்படும்.

இம்மூன்று நிகழ்வுகளும் ஒரே நேரத்தில் நடைபெறும் புதுமை ஒட்டுசுட்டான் பிரதேசத்தில் நிகழ்ந்து வருவது பாரம்பரியம்.

ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தின் திருவிழாக்களில் முக்கியமாக 18 ஆம் திகதி திருவேட்டை திருவிழாவும் 20 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் 21 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவும் சிறப்பாக நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி வைத்தியசாலைக்கு

# தற்காலிக மின்பிறப்பாக்கியை பெற்றுத்தர தயார் – அங்கஜன்

(யாழ். விசேட, சாவகச்சேரி விசேட நிருபர்கள்)

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு தற்காலிக மின்பிறப்பாக்கியை பெற்றுத்தர தயார் என நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வைத்தியசாலையின் விபத்து மற்றும் சத்திர சிகிச்சைகள் பிரிவு உள்ளிட்ட பிரிவுகள் மின்சார மாற்றீடுகள் (Power Backup) இல்லாததாலும், அதற்கான மின்பிறப்பாக்கிகள் வழங்கப்படாத நிலையாலும் மருத்துவ பயன்பாடுகள் அற்ற நிலையில் காணப்படுவதாக அறிய முடிந்தது.

இத்தகைய சூழலில் குறித்த பிரிவுகளை ஆரம்பிப்பதற்கு ஆட்சேபணை தெரிவித்து வைத்தியர்களினால் முன்னெடுக்கப்படும் பணிப்புறக்கணிப்பை முடிவுக்கு கொண்டுவருவதன் அவசியத்தையும் உணர்ந்து, இவ்விடயம் தொடர்பில் ஆர்வலர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தேன்.

அதன்படி, சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அரசாங்கத்தால் போதிய மின்பிறப்பாக்கி வசதிகள் வழங்கப்படும் வரை, தற்காலிக ஏற்பாட்டில் பெற்றுக் கொடுக்க அன்பர்கள் சிலர் முன்வந்துள்ளனர்.

இதனூடாக வைத்தியசாலையின் சத்திரசிகிச்சை பிரிவுகள் உள்ளிட்டவற்றை இயங்குநிலைக்கு கொண்டுவந்து மக்களுக்கான வைத்திய சேவையை வினைத்திறனுடன் வழங்கமுடியும் என கருதுகிறேன் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மருத்துவபீடங்களிற்கு இடையிலான வினாடிவினாப் போட்டியில் யாழ். மருத்துவ பீடம் இரண்டாம் இடம்

(யாழ்.விசேட நிருபர்



இலங்கை மருத்துவபீடங்களிற்கு இடையிலான உடற்கூற்றியல் வினாடிவினாப் போட்டியில் யாழ் மருத்துவபீட அணி இரண்டாம் இடத்தை பெற்றுள்ளது.

இலங்கை உடற்கூற்றியல் சமூகத்தின் வருடாந்த அமர்வின் ஒரு பகுதியாக இவ் உடற்கூற்றியல் வினாடிவினாப் போட்டியானது இரண்டாவது முறையாக இவ்வருடமும் நடைபெற்றது.

இருபகுதிகளாக நடைபெற்ற இப்போட்டியில் பத்து அணிகள் பங்குபற்றி இருந்ததுடன் முதல் பகுதி முடிவில் மூன்று சிறந்த அணிகளாக யாழ்ப்பாணம், கொழும்பு மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்களை சேர்ந்த மருத்துவ பீட அணிகள் தெரிவுசெய்யப்பட்டன.

மேற்படி மூன்று அணிகளிற்கும் இடையிலான இறுதி சுற்றுப் போட்டியானது கடந்த ஆனி மாதம் 30ம் திகதி இலங்கை மருத்துவ சங்க கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இதன்முடிவில் கொழும்பு மருத்துவ பீட அணி முதலாம் இடத்தையும் யாழ். மருத்துவ பீட அணி இரண்டாம் இடத்தையும் பேராதனை மருத்துவ பீட அணி மூன்றாம் இடத்தையும் முறையே பெற்றுக்கொண்டன.

யாழ் மருத்துவ பீட அணியை பிரதிநிதித்துவப்படுத்தி விநாயகமூர்த்தி திவாகரன், சிறிஸ்கந்தராஜா லக்சன், அஸ்லாம் பாத்திமா ஹம்தா மற்றும் யுதாரா ரண்லினி ரணசிங்க ஆகியோர் போட்டியிட்டனர்.

மேற்படி மாணவர்களுக்கான தகுந்த ஆலோசனைகளையும் பயிற்சிகளையும் சிரேஷ்ட விரிவுரையாளர்களான சிவநந்தினி உதயகுமார், துரைரட்ணம் செந்தூரன் ஆகியோரின் வழிகாட்டலின் கீழ் யாழ் மருத்துவ பீட உடற்கூற்றியல் துறை வளவாளர்கள் வழங்கினர்.

## சேனைக் குடியிருப்பு மக்களுக்கு மூக்குக் கண்ணாடிகள்

(கரவெட்டி தினகரன் நிருபர்)

சந்நிதியான் ஆச்சிரம நிதிப் பங்களிப்பில் புத்தளம், சேனைக் குடியிருப்பு பல்லின கிராம மக்களுக்கு மூக்கு கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த 3 ஆம் திகதி சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகளின் ஏற்பாட்டில் புத்தளம் சேனைக் குடியிருப்பு, மணற்குன்று கிராமத்தைச் சேர்ந்த மக்களுக்கு கண் மருத்துவ பரிசோதனைகள் இடம்பெற்றன.

இதில் 86 பயனாளிகள் கலந்து கொண்டு கண்ணாடிகளைப் பெற்றுக் கொண்டனர்.

இவர்களுக்கு 70 ஆயிரம் ரூபா நிதிப் பங்களிப்பில் மூக்கு கண்ணாடி புத்தளம் சேனைக்குடிருப்பில் வைத்து வழங்கப்பட்டது.

சந்நிதியான் ஆச்சிரம சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.

# மலைச்சாரல்

## நுவரெலியா சீதா எலிய சீதை அம்மன் ஆலய மண்டலாபிஷேக விழா

ஆ.ரமேஸ்.



மத்திய மாகாணம் நுவரெலியா மாவட்டத்தில் இராமாயணத்துடன் தொடர்புபட்ட வரலாற்று சிறப்புமிக்க சீதாஎலிய பிரதேசத்தில் சீதை அம்மன் ஆலயத்தின் மஹா கும்பாபிஷேகத்தினை தொடர்ந்து இடம்பெற்று வந்த மண்டலாபிஷேகத்தின் பூர்த்தி விழா சனிக்கிழமை (06) வெகு விமர்சையாக இடம்பெற்றது.

இதனையொட்டி சனிக்கிழமை (06) மற்றும் ஞாயிற்றுக்கிழமை (07) ஆகிய இரு தினங்களில் விசேஷ பூசைகள் பக்திபூர்வமாக இடம் பெற்றது.

அதேநேரத்தில் இந்த மண்டலாபிஷேக பூர்த்தி விழாவினை சிறப்பிக்கும் வகையில் முதல் நாள் நிகழ்வாக நுவரெலியா ஆவா எளிய அருள் மிகு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் இருந்து அலங்கரிக்கப்பட்ட சப்பரம் ஏந்திய ஊர்தியில் உற்சவ மூர்த்திகள் ஊர் வலம் வந்தமை சிறப்பு மிக்க நிகழ்வாக இருந்தது.

இதன்போது மேளதாளத்துடன் கலாச்சார பாரம்பரிய நடனங்களுடன் ஸ்ரீ இராமன், ஸ்ரீ சீதை அம்மன், ஸ்ரீ இலட்சுமணன், ஸ்ரீ ஆஞ்சநேயர் ஆகியோர் ஊர்வலமாக நுவரெலியா நகரில் வலம் வந்து நகரில் கற்பக விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற சிறப்பு பூசையுடன், பால்குட பவனி சகிதம் சீத்தா எலிய அம்மன் ஆலயத்தை வந்தடைந்தது. இதை தொடர்ந்து ஆலயத்தில் 1008 சங்காபிஷேகம், வசந்த மண்டப பூசை, சுவாமிகள் உள்வீதி வலம் வந்து இடம்பெற்ற மகேஷ்வர பூஜையுடன் பக்தகோடிகளுக்கு அன்னதானம் வழங்கப்பட்டதுடன் முதல் நாள் நிகழ்வு நிறைவுபெற்றது. பின் இரண்டாம் நாள் நிகழ்வாக ஞாயிற்று கிழமை காலை விநாயகர் வழிபாடுடன் இடம்பெற்ற பட்டாபிஷேகம் அதை தொடர்ந்து இடம்பெற்ற திருக்கல்யாணம், சுவாமிகளின் உள் வீதி வலம் ஆகியவற்றுடன் பக்தகோடிகளுக்கு அன்னதான பிரசாதம் வழங்கி இனிதே மண்டலாபிஷேக சிறப்பு விழா நிறைவுப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

ரூ 1700 சம்பள விடயம் தொடர்பான மனோ கணேசனின் ஊடக அறிக்கையை கண்டித்து

# மலையகத்தின் பல பகுதிகளிலும் எதிர்ப்பு போராட்டம் முன்னெடுப்பு





தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோகணேசன் எம்.பிக்கு எதிராக ஞாயிற்றுக்கிழமை மலையகத்தின் பல பகுதிகளிலும் போராட்டங்கள் நடத்தப்பட்டது.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனுக்கு எதிராக வாசகங்கள் பதித்த பதாகைகளை ஏந்தியும், கோஷங்களை எழுப்பியும் மக்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

தோட்ட தொழிலாளர்களுக்கு 1700 ரூபாய் சம்பள உயர்வு விடயத்தில் அரசாங்கம் வெளியிட்ட வர்த்தமானிக்கு எதிராக பெருந்தோட்ட கம்பனிகள் இந்த வ ர்த்தமானி அறிவித்தலுக்கு இடைக்கால தடை விதிக்கக்கோரி உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தது.

இதற்கமைய உயர் நீதி மன்றம் வழக்கை பரிசீலித்து இடைக்கால தடை விதித்துள்ளது. இது குறித்து இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொது செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நீதிமன்ற வளாகத்தில் கடந்த (04) ஆம் திகதி ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தார்.

அவர் வழங்கிய கருத்தில் எதிர்க்கட்சிகள் இந்த சம்பள விடயத்தில் நீதி மன்றம் வழங்கிய இடைக்கால தடை தீர்ப்புக்கு பட்டாசு கொழுத்தி, பால் சோறு பொங்கி கொண்டாட வேண்டாம் என அமைச்சர் ஜீவன் குறிப்பிட்டிருந்ததாகவும், இதற்கு எதிராகவும், அமைச்சர் ஜீவன் தொண்டமானையும்,அரசாங்கத்தையும் பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேஷன் 1700 ரூபாய் சம்பள விடயத்தை விமர்சித்து ஊடகங்களுக்கு அறிக்கை விடுத்தமையை கண்டித்து இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் இ.தொ.கா களம் இறங்கியது.

இதனடிப்படையில் மூன்று மாவட்டங்களில் ஐந்து பிரதான நகரங்களில் இந்த எதிர்ப்பு போராட்டம் அந்தந்த பிரதேசத்திற்கு பொறுப்பான இ.தொ.கா முக்கியஸ்தர்களின் தலையில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இடம்பெற்றது.அந்த வகையில் நுவரெலியா மாவட்டத்தில் கொட்டக்கலை நகரில் தபால் நிலயத்திற்கு முன் இடம்பெற்ற போராட்டத்தை முன்னால் பிரதேச சபை தலைவர் இராஜாஜ பிரசாத் தலைமை தாங்கி நடத்தினார்.அதேபோல் பொகவந்தலாவை நகர் சப்ரகமுவ மாகாணத்தில் இரத்தினபுரி காவத்தை நகர், கேகாலை தெஹியோவிட்ட நகர் மற்றும் ஊவா மாகாணத்தில் பதுளை நகரத்திலும், மனோகணேசன் எம்.பிக்கு எதிரான இந்த எதிர்ப்பு போராட்டம் இடம்பெற்றுள்ளதாக அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஊடக பிரிவு தெரிவித்துள்ளது.

ஆ.ரமேஸ்.

# ஆசிய யோகா போட்டிகளில் பண்டாரவளை மாணவர்கள் சாதனை !

(லுணுகல நிருபர்)



இலங்கை யோகா கூட்டமைப்பு ஏற்பாடு செய்து நடாத்திய கொழும்பு முதலாவது ஆசிய யோகா சாம்பியன்ஷிப் போட்டி அண்மையில் கொழும்பு புதுசெட்டித்தெரு ஸ்ரீராம் கல்யாண மண்டபத்தில் நடைபெற்றது.

இப்போட்டிகளில் கலந்துகொண்ட பண்டாரவளை ஸ்ரீ சிவசுப்ரமணிய சுவாமி ஆலய அறநெறி பாடசாலை மாணவர்கள் ராஜன் முகேஷ்கர், சஞ்சீவ குமார் பிரதீஷ், யோகச்சந்திரன் ரித்திகா, கணேசன் வகீசன், ஆனந்தகுமார் மதன் குமார் ஆகியோர் முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கம் வென்றார்கள்.

அத்தோடு கிருஸ்ணகுமார் லதுர்ஷன், திலகேஷ்வரன் தயதீக்ஷன், பத்மநாதன் சேஷோன் ஆகியோர் இரண்டாமிடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தையும் வென்றுள்ளனர்.

முதற்தடவையாக சர்வதேச யோகா சாம்பியன்ஷிப் போட்டியொன்றில் வெற்றிபெற்ற அறநெறி பாடசாலை மாணவர்களையும் இவர்களை வழிப்படுத்தி பயிற்சியளித்த சிவ விஷ்ணு பீட யோகா ஆசிரியர் வி.யோகசந்திரன், அறநெறி பாடசாலை ஆசிரியர்கள் யசோபிரசாத், செல்வி.ரக்ஷனா ஆகியோரையும் பண்டாரவளை ஸ்ரீ சிவசுப்ரமணிய ஆலய அறங்காவலர் சபையினர், இந்து இளைஞர் மன்ற நிர்வாக சபையினர் மற்றும் யோகா பயிற்சியாசிரியர்கள், பெற்றோர்கள், சக மாணவர்கள் என பலரும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றனர்.

# கம்பளையில் மாமியாரை கொலைசெய்த மருமகள் கைது

கம்பளை நிருபர்



கம்பளை எத்கால்ல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உலப்பனை தோட்டத்தில் நேற்று இரவு 11.30 மணியளவில் மருமகள் தனது மாமியாரை அடித்து பல பகுதிகளில் வெட்டியும் கொலை செய்துள்ளார்.

உலப்பனை தோட்டத்தில் மருமகளும் மாமியாரும் மற்றும் மருமகளின் இரண்டு பிள்ளைகளும் ஒரே வீட்டில் வசித்து வந்த நிலையில், நேற்றுமுன்தினம் ,இரவு அறையொன்றினுள் கட்டிலில் படுத்திருந்த மாமியாரை இவ்வாறு மருமகள் அருவாளால் வெட்டிக் கொலைசெய்துள்ளார். எஸ்.சாம்பாஜோதி எனும் 78 வயதுடைய மூதாட்டி ஒருவரையே இந்தப் பெண் வெட்டி கொலைசெய்துள்ளார். வீட்டிற்கு அருகில் வசித்து வந்தவர்கள் கத்தும் சத்தம் கேட்டு வந்து பார்த்த போது, இந்த பெண் வெட்டு காயங்களுடன் இருந்த நிலையில் உடனடியாக எத்கால்ல பொலிஸாருக்கு தகவலை வழங்கினர். சம்பவ இடத்திற்கு பொலிஸார் வந்ததோடு 1990 அம்புலன்ஸ் வண்டியும் வந்தது. உடனடியாக காயங்களுக்கு உள்ளான பெண்ணை கம்பளை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்று சிகிச்சையளித்தபோதும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்,

எத்கால்ல பொலிஸார் சந்தேக நபரான பெண்ணை இரவு கைது செய்வதற்கு முயற்சி செய்த போது இந்த பெண் தனது இரு பிள்ளைகளின் கழுத்தில் அருவாளை வைத்துக் கொண்டு மிரட்டியுள்ளார். எனினும் பொலிஸார் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் 32 வயதான பெண்ணை கைது செய்தனர், இதனை தொடர்ந்து எத்கால்ல பொலிஸார் மற்றும் கம்பளை SOCO பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

# கண்டி மாவட்டத்தில் 2219 டெங்கு நோயாளர்கள்

(அக்குறணை குறூப் நிருபர்)

கண்டி மாவட்டத்தில் டெங்கு நோய் பரவும் வீதம் அண்மைகாலமாக அதிகரித்து வருவதாகவும், அண்மித்த நாட்களில் இடம் பெறவுள்ள கண்டி எசல பெரஹராவின் போது பாதிப்புக்களை ஏற்படுத்தாதவாறு முன் ஏற்பாடுகளைச் செய்துகொள்ள வேண்டும் என கண்டி மாவட்ட பொதுமக்கள் சுகாதாரத் துறைக்குப் பொறுப்பான தொற்று நோய் விசேட வைத்திய நிபுணர் கிருசாந்த மாசாரச்சி தெரிவித்தார்.

கண்டி செயலகத்தில் இடம் பெற்ற கூட்டம் ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கயைில்

கடந்த ஆறு மாதகாலத்தில் மட்டும் கண்டி மாவட்டத்தில் 2219 பேர் டெங்கு நோயாளர்கள் என அறியப்பட்டுள்ளதாகவும், கடந்த இரண்டு வாரங்களில் மழை காரணமாக இத்தொகையில் திடீர் அதிகரிப்பு காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். கடந்த வாரத்தில் அவ்வாறு கண்டியில் 95 பேர் இனம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

20 பிரதேச செயலாளர் பிரிவுகளில் சந்தேகத்தின் பேரில் இனம் காணப்பட்டவர்களது தொகை அதிகரித்துள்ளதாகவும் கண்டி மாவட்டத்தில் 9 பேர் டெங்கு நோய் காரணமாக மரணித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கடந்த வாரத்தில் மட்டும் கண்டி மா நகர சபை எல்லைக்குள் 25 பேர் இனம் காணப்பட்டதாகவும் அவர் மேலும் கூறினார்.

# டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு ஜனாதிபதி முன்னுரிமை

## 1305 துரித உதவி தொலைபேசி சேவையை தொடக்கி வைத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உரை

**மர்லின் மரிக்கார்**

உலகளாவிய நவீன முன்னேற்றங்களுக்கு அமைய டிஜிட்டல் பொருளாதாரத்திற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முக்கியத்துவம் அளித்துள்ளார் என்று துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து, விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

அந்த வகையில், இலங்கையில் இருந்தபடி இந்தியாவின் அப்பலோ மருத்துவமனையின் முன்னணி வைத்திய நிபுணர்களுடன் தொடர்பு கொள்ளவும் மருத்துவ ஆலோசனை பெற உதவும் '1305' என்ற அப்பலோ துரித தொலைபேசி சேவையும் (Hotline) டிஜிட்டல் பொருளாதாரத்தின் ஒரு பகுதியாக அமையும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

செரண்டீப் வைத்தியசாலைகள் குழுமத்தின் ஏற்பாட்டிலான இந்த 1305 இலக்க துரித தொலைபேசி உதவி சேவையை அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேம ஜயந்த ஆகியோர் தலைமையில் கொழும்பு கிங்ஸ்பேரி ஹோட்டலில் கடந்த வெள்ளியன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.




இவ்வைபவத்தில் உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

செரண்டீப் வைத்தியசாலைகள் குழுமத்தின் பணிப்பாளர் டொக்டர் நிலூக்கா வெலிக்கல, அப்பலோ வைத்தியசாலையின் மருத்துவசேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஆர்.கே. வெங்கடாசலம், கதிர் வீச்சு புற்றுநோயியல் சிரேஷ்ட நிபுணர் டொக்டர் ஆர். ரத்னாதேவி, என்பு அறுவை சிகிச்சைகளுக்கான சிரேஷ்ட நிபுணர் டொக்டர் கார்னாட் கோசிகன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்ட இவ்வைபவத்தில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தொடர்ந்தும் உரையாற்றுகையில், கடந்த காலத்தில் நாடு முகம் கொடுத்திருந்த பொருளாதார நெருக்கடியின் பின்புலத்தில் பல மருத்துவ நிபுணர்கள் நாட்டில் இருந்து வெளியேறியுள்ளனர். ஆனாலும் நாட்டு மக்களுக்கு சிறந்தும் தரமானதுமான மருத்துவ சேவை பெற்றுக்கொடுக்கப்படுவது அவசியம்.

இவ்வாறான சூழலில் இந்தியாவின் அப்பலோ வைத்தியசாலையின் முன்னணி மருத்துவ நிபுணர்களின் மருத்துவ ஆலோசனைகளையும் சேவைகளையும் பெற்றுக்கொள்வதற்கு இந்த துரித தொலைபேசி சேவை பெரிதும் பயன்மிக்கதாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

# நகர்வலம்

### முஸ்லிம் சமய கலாசார திணைக்கள ஏற்பாட்டில்

## 'முஹர்ரம் புதுவருட நிகழ்வு 2024' இன்று கொழும்பில்

முஹர்ரம் புதுவருடத்தை சிறப்பிக்குமுகமாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கொழும்பு, கிருலப்பனை ஜும்ஆ மஸ்ஜிதுடன் இணைந்து நடாத்தும் 'முஹர்ரம் புதுவருட நிகழ்வு 2024' இன்று (08) திங்கட்கிழமை மாலை 6.45 மணி முதல் இரவு 08.30 மணி வரை கொழும்பு 06 இல் அமைந்துள்ள கிருலப்பனை ஜும்ஆ மஸ்ஜிதில் இடம்பெறும்.

இந்நிகழ்வுக்கு புத்தசாசன மற்றும் மத விவகார அமைச்சர் விதுர விக்ரமநாயக்க பிரதம அதிதியாகக் கலந்து சிறப்பிப்பார்.

முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் எம்.எச்.ஏ.எம். றிப்லான் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில், திணைக்கள அதிகாரிகள் உட்பட உலமாக்கள், அரச உயர் அதிகாரிகள், கொழும்பு பள்ளிவாசல் தர்மகர்த்தாக்கள், பள்ளிவாசல் குழு உறுப்பினர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், மற்றும் ஜமாஅத்தார்கள் எனப்பலரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஹிஜ்ரி 1446 ஆவது முஹர்ரம் புதுவருட நிகழ்வாக இந்நிகழ்வு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**எம்.எஸ்.எம்.ஸாகிர்**

## அலிசப்ரி ரஹீம் எம்.பி சிபாரிசினால் முஸல்பிட்டி கிராமம் தெரிவு

**புத்தளம் தினகரன் நிருபர்**



இளம் விவசாய தொழில் முனைவோர் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் கல்பிட்டி பிரதேச செயலாளர் பிரிவில் முஸல்பிட்டி கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த வேலைத்திட்டம் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் கருத்திட்டத்தின் அடிப்படையில் கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சினால் புத்தளம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் சிபாரிசினால் இக்கிராமம் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த திட்டத்திற்கு சுமார் ஒரு கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த செயற்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வும், மக்கள் பங்கேற்புடனான மதிப்பீடும் அண்மையில் (05) முஸல்பிட்டி கிராம சேவையாளர் காரியாலயத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் கலந்து சிறப்பித்தார். கல்பிட்டி பிரதேச செயலாளர், திட்டமிடல் அதிகாரிகள், விவசாய திணைக்கள அதிகாரிகள், கிராம சேவை அதிகாரிகள் உட்பட பல அரச திணைக்கள உத்தியோகத்தர்களும் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்ததுடன் பாராளுமன்ற உறுப்பினரின் முஸல்பிட்டி இணைப்பாளர் அன்வர் சதாத் மௌலவி, பாராளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் எச். அமீர் அலி ஆசிரியர், ஊடக செயலாளர் எம்.எம்.நௌபர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

## புத்தளம் பதில் நீதவான் இக்பால் காலமானார்

**கற்பிட்டி தினகரன், புத்தளம் தினகரன் நிருபர்கள்**

புத்தளம் நகரின் சிரேஷ்ட சட்டத்தரணியும், பதில் நீதவானுமான எம். எம். இக்பால் வெள்ளிக்கிழமை (05) நள்ளிரவில் காலமானார்.

புத்தளம் உப்பு உற்பத்தியாளர் நலன்புரி சங்க பொதுக்குழு தலைவரான சட்டத்தரணி இக்பால், புத்தளத்தில் புகழ்பூத்த குடும்பம் ஒன்றில் பிறந்தவர். புத்தளம் நகர மூத்த கல்விமான்களுள் ஒருவர். சமூக விவகாரங்களில் ஆர்வத்துடன் பங்கேற்பவர்.

குறிப்பாக கல்வி நிகழ்ச்சிகளுக்கு அழைப்புக்கள் விடுக்கப்படும்போது அவற்றை மதித்து கலந்து கொள்வார். கருத்துரைகளின்போது பெறுமதிமிக்க ஆலோசனைகளை தனது அனுபவ வாயிலாக வழங்குவார்.

புத்தளம் கல்வி மேம்பாட்டுக்கும் சீர்திருத்தத்துக்குமான புத்தளம் கல்வியியலாளர்களின் மன்றம் (PILLARS) ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் அதற்கு ஆலோசனைகள் வழங்கி கல்வியியலாளர்களுடன் ஒத்துழைத்தார். முரண்பாட்டு முகாமைத்துவத்தைப் பிரயோக ரீதியில் செயற்படுத்தி முன்னுதாரணமாகத் திகழ்ந்தவர்.

PILLARS இன் பெரும்பாலான நிகழ்வுகளில் அவர் கலந்துகொண்டுள்ளார். அடிக்கடி ஊடகவியலாளர்களை தனது வீட்டுக்கு அழைத்து செய்திகளை பகிர்ந்து கொள்வதில் ஆர்வத்தோடு செயல்பட்டவர்.

புத்தளம் பிரதேசத்தில் காணப்படும் ஸியாரங்களை இனங்கண்டு, அவை சமூகத்தின் தொன்மை, இருப்பு என்பதற்கான மிகப் பெரும் ஆதாரங்கள் என்பதை நிலைப்படுத்த புத்தளம் கல்வி பணிமனையின் ஓய்வு நிலை கல்வி பணிப்பாளரும், வரலாற்று ஆய்வாளருமான இஸட்.ஏ. சன்ஹீருடன் கைகோர்த்து பயணித்தவர்.

சட்டத்தரணி இக்பாலின் ஜனாஸா சனிக்கிழமை (06) மாலை 05 மணிக்கு புத்தளம் பகா பள்ளி மைய வாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. அன்னாரின் மறைவு குறித்து பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுத்தீன் உட்பட அரசியல் பிரமுகர்களும் அனுதாப செய்திகளை வெளியிட்டுள்ளனர்.

## மறைந்த சம்பந்தனுக்கு இறுதி அஞ்சலி



**காரைதீவு குறூப் நிருபர்**

மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தனுக்கு அம்பாறை மாவட்டத்தில் இருந்தும் இறுதி மரியாதை செலுத்தப்பட்டது. நேற்று (07) ஞாயிற்றுக்கிழமை திருகோணமலை சென்று இவ் இறுதி மரியாதை மக்கள் செலுத்தினர்.

அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன், காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில், உறுப்பினர் திருமதி எஸ்.ஜெயராணி மற்றும் திருமதி கீதா ஜெயசிறில் ஆகியோரும் இறுதி அஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டனர்.



முள்ளிப்பொத்தானை Bright Future பாலர் பாடசாலையின் சிறுவர் சந்தை நிகழ்வு நேற்று ஞாயிற்றுக்கிழமை (07) இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் கலந்துகொண்டு சிறார்களிடம் பொருள் கொள்வனவு சம்பந்தமாக வினவுவதை படத்தில் காணலாம்.

**படம்:கந்தளாய் தினகரன் நிருபர்**

## வெற்றிலை, பாக்கு விலைகள் அதிகரிப்பு

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

கல்முனைப் பிரதேசத்தில் என்றுமில்லாதவாறு வெற்றிலை, பாக்குகளின் விலை அதிகரித்து வருவது குறித்து வெற்றிலைப் பிரியர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

பச்சைப்பாக்கொன்றின் விலை 40 ரூபாயாக விற்கப்படுவதோடு கொட்டைப்பாக்கு 250 கிராம் 350 ரூபாயாக அதிகரித்துள்ளதாகவும் தெரிவித்தனர். கடையில் விற்கப்படும் வெற்றிலைக் கூறு ஒன்றின் விலை 60 ரூபாவாக அதிகரித்துள்ளது. வெற்றிலைக் கூறில் கழிபட்ட கறுத்தப்பாக்குகள் வெட்டி வைக்கப்படுவதாகவும் இது நோயை உண்டாக்கக்கூடியதெனவும் குறிப்பிடும் பொதுமக்கள், சுகாதார அதிகாரிகள் இது விடயத்தில். கூடிய கவனம் செலுத்த வேண்டுமெனவும் குறிப்பிடுகின்றனர்.

# கிழக்கின் குரல்

## ஜனாதிபதி ரணிலை ஆதரிப்பதற்கு பெரும்பாலான மக்கள் தீர்மானம்

### மட்டக்களப்பில் முன்னாள் அமைச்சர் கருணா அம்மான்

**பெரியபோரதீவு தினகரன் நிருபர்**

ஜனாதிபதியின் பதவி நீடிக்கப்படாவிட்டாலும் இந்த நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்கள் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க தீர்மானித்துள்ளனர் என தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் பிரதியமைச்சருமான விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் நேற்று (07) தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் ஏற்பாட்டில் முன்னாள் போராளிகளுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. இதன் போது மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு இந்த வாழ்வாதார உதவி வழங்கி வைக்கப்பட்டன. கிழக்கு மாகாணத்திற்கான பிரதான நிகழ்வு நேற்றைய தினம் மட்டக்களப்பு கல்லடியில் உள்ள தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் தலைமைக் காரியாலயத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணியின் உபதலைவர் ஜெயா.சரவணன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், முன்னாள் போராளிகள் 100பேருக்கு தமது வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் வகையில் 10 இலட்சம் ரூபா நிதி பகிர்ந்தளிக்கப்பட்டது.

இதன்போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்; ஜனாதிபதியின் தனிப்பட்ட திறமையினை பாராட்ட வேண்டும். ஜனாதிபதியின் பதவிக் காலத்தினை நீடிப்பதற்கு அரசியல் யாப்பில் உள்ள விடயத்தினை ஜனாதிபதி கோரியிருப்பதானது சிறந்த விடயமாக பார்க்கின்றேன். இந்த நாட்டில் வரிசை யுகம் இருந்தபோது அதனை குறுகிய காலத்தில் வழமைக்கு கொண்டுவந்த ஒரு திறமையானவர்தான் இன்றைய ஜனாதிபதி.

அவ்வாறு ஒரு தேர்தல் நடைபெற்றாலும் வட, கிழக்கில் உள்ள தமிழ் முஸ்லிம் மக்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே வாக்களிப்பார்கள். அவரினால்தான் இன்று சர்வதேச சமூகம் பல உதவிகளை வழங்கியுள்ளன. ஜனாதிபதியின் பதவி நீடிக்கப்படாவிட்டாலும் இந்த நாட்டில் உள்ள பெரும்பான்மையான மக்கள் ஜனாதிபதி ரணிலையே ஆதரிக்க தீர்மானித்துள்ளனர்.



சம்பந்தன் ஐயாவை நாம் என்றும் மறக்க முடியாது. தமிழர்களின் உரிமையை வென்றெடுப்பதற்காக தள்ளாடும் வயதிலும் நின்று குரல் கொடுத்த ஓர் மாமனிதன் அவர். அவருக்கு எமது கட்சி சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அவருடைய இறப்பு மாபெரும் இழப்பாகும். பாராளுமன்றத்திலே நான் இருக்கும்போது என்னுடன் மிகவும் அன்பாக கதைப்பார்.

தற்போது தமிழர்களின் எதிர்கால உரிமையை காப்பாற்றுவதற்காக உருவாகிய கட்சிதான் தமிழர் ஐக்கிய சுதந்திர முன்னணி எனவும் தெரிவித்தார்.

## இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரி தேசிய மட்டத்திற்கு தெரிவு

**இறக்காமம் தினகரன் நிருபர்**

கல்வி அமைச்சினால் ஏற்பாடு செய்யப்பட்ட அகில இலங்கை ரீதியிலான முஸ்லிம் கலாசார போட்டி நிகழ்ச்சியின் ஓர் அங்கமாக கிழக்கு மாகாண மட்டத்திலான முஸ்லிம் பாடசாலைகளுக்கிடையிலான போட்டி தேர்வு காத்தான்குடி முஸ்லிம் மத்திய கல்லூரியில் கடந்த சனிக்கிழமை (06) இடம்பெற்றது.



இதன் போது இறக்காமம் பிரதேச பாரம்பரிய முஸ்லிம் கலாசார திருமண நிகழ்வில் மணமகனை மணமகள் வீட்டுக்கு அழைத்து செல்லும் (மறஹபா) எனும் நிகழ்வை இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரி மாணவர்களால் நிகழ்த்தி காண்பிக்கப்பட்டதை அடுத்து அந்நிகழ்வு மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தை பெற்று தேசிய மட்டத்திற்கு தெரிவாகி உள்ளது.

இந்நிகழ்வை முழு மூச்சாக நின்று உருவமைத்த இறக்காமம் அஷ்ரப் மத்திய கல்லூரியின் இணைப்பாடவிதான செயற்பாடுகளுக்கு பொறுப்பாக உள்ள உதவி அதிபர் எம்.எஸ். இர்பானா வஹாப்புக்கு பாடசாலை அதிபர் உள்ளிட்ட பாடசாலை சமூகம் நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளன.

இந்நிகழ்வில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.

தினகரன்
THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## விலைக்கோரல்களுக்கான அழைத்தல்

### 2024-2025 ஆம் ஆண்டுகளுக்கான மூக்கு கண்ணாடிகளுக்கான மூலப்பொருட்களை வழங்கல்

### தேசிய கண் வைத்தியசாலை கண் பாதுகாப்பு திட்டம்

**Supply of frames (Adults frames only)/boxes/cleaning /Edging stickers and lenses for Optical Lab**

1. மேலேயுள்ள ஒவ்வொரு அம்சத்திற்கும் தனித்தனியாக, பேரளவு கொள்வனவிற்காக விலைமனுக்கோரல்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
2. சட்டக வடிவமைத்தலானது சந்தையிலுள்ள நவீன வடிவமைத்தலுக்கு பொருந்தும் வகையில் இருத்தல் வேண்டும்.
3. வில்லைகளின் விலையானது பின்வருமாறு வகுதியாக்கப்படல் வேண்டும்.

| Single Vision | | | Bifocal | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Plano to +3.00sph, Plano to -3.00sph, Plano - 0.50cyl to Plano -2.00cyl **Stock Lenses** | +3.25sp to +6.00sp, -3.25sp to -6.00sp And plano - 2.25cyl to Plano - 4.00 cyl & moderate to **Power - Grinding** | - 0.50 sph -0.50 cyl to - 2.00 sph -2.00 cyl +0.50sph - 0.50cyl to 2.00sph -2.00 cyl & **Moderate Power** | Plano to +2.00sph Add +1.00 to Add +3.00 **Stock Lenses & Moderate Power** | +2.25sp to +6.00sp Add +1.00 to Add +3.00 - **Grinding & Moderate Power** | Plano to +8.00sp, -0.25cy1 to -5.00cyl with Add +1.00 to +3.00 & **Grinding Moderate Power** | +8.25sp to +15.00sp, -0.25cyl to - 3.00cyl with Add +1.00 to+3.00 **Grinding Moderate Power** | +15.25sp Above Grinding **Moderate Power** | -0.25sp to -5.00sp, 0.25cyl to -3.00cyl with Add +1.00 to +3.00 **Moderate Power** | -5.25sp to -10.00sp, -0.25cyl to 3.00cyl with Add +1.00 to +3.00 **Moderate Power** | -10.00sp above Grinding **Moderate Power** |

4. தெரிவு செய்யப்பட்டவுடன் வழங்குநர் ஒரு வருடத்திற்கு உடன்பட்ட விலைகளுக்கு தொடர்ச்சியாக வழங்கல் வேண்டும்.
5. கண்ணாடி வில்லைகள் மற்றும் மூலப்பொருட்களுக்கும் கட்டளை வழங்கப்பட்ட பின்னர் 5 வேலை செய்யும் நாட்களில் பொருட்கள் வழங்கப்படல் வேண்டும்.

விலைக்கோரலுடன் மாதிரிகளையும் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் தயவு செய்து வழங்கவும்.

2024 ஜூலை 29 ஆம் திகதியன்று மு.ப. 9.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக விலைக்கோரல்கள் பின்வரும் முகவரிக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். வழங்குநர்கள் பெறுகைக் குழுவொன்றினால் தெரிவு செய்யப்படுவார்கள்.

**பணிப்பாளர்,**
**தேசிய கண் வைத்தியசாலை,**
**கொழும்பு-10.**

**விசாரணைகளுக்கு – தொலைபேசி இல.: 011-2693911 நீடிப்பு 333.**
**தொலைநகல்: 0112698285, 0710-556565**
**மின்னஞ்சல்: healtheye@gmail.com**

## பெறுகை அறிவித்தல்

### பேலியகொட நகர சபை

பேலியகொட நகர சபையில் 2024ம் ஆண்டுடன் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் கைத்தொழில்களுக்காக CIDA (ICTAD) செல்லுபடியாகும் பதிவுடனான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இல. | செயற்றிட்டப் பெயர் | CIDA தரம் (வகை) | செயற்றிட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை | கேள்விப் படிவக் கட்டணம் (மீளளிக் கப்படாதது) | கேள்விப் பிணை (மீளளிக்கப் படும் காசாக வைப்பு) | ஒப்பந்த காலம் (மாதங்கள்) |
|---|---|---|---|---|---|---|
| 01 | களனி பிரதேச செயலகத்தின் பட்டிய மேற்கு பகுதிக்குச் சொந்தமான குருகுல கல்லூரிக்கு அருகில் இருந்து கறுப்பு பாலம் வரை கெமுனு மாவத்தை காபட் செய்தல் | C8 - C7-C6 | 8,755,000.00 | ரூ. 3,500.00 | ரூ. 87,550.00 | 01 |
| 02 | களனி பிரதேச செயலகப் பிரிவில் பேலியகொட கங்கபட பிரதேசத்திற்கு சொந்தமான பராக்கிரம மாவத்த நகர சபையின் முன்னால் இருந்து வாசிப்பு மண்டபம் வரையுள்ள வீதியை கொங்கிறீட் செய்தல் | C9-C8-C7 | ரூ. 3,399,000.00 | ரூ. 1500.00 | ரூ. 33,990.00 | 01 |
| 03 | களனி பிரதேச செயலகப் பிரிவில் பேலியகொட கங்கபட பிரிவிற்கு சொந்தமான பேலியகொட 9ம் தோட்ட வீதியை கொங்கிறீட் செய்தல் | C9 - C8 | ரூ. 1,648,000.00 | ரூ. 1,000.00 | ரூ. 16,480.00 | 01 |
| 04 | களனி பிரதேச செயலகப் பிரிவில் பேலியகொட கங்கபட பிரிவிற்கு சொந்தமான 185 தோட்ட வீதியை கொங்கிறீட் செய்தல் | C9 - C8 | ரூ. 1,648,000.00 | ரூ. 1000.00 | ரூ. 16,480.00 | 01 |

2. கேள்விதாரர்கள் மேற்படி செயற்றிட்டத்திற்காக கேள்விகளை சமர்ப்பிக்கும் போது பேலியகொட நகர சபையின் காசாளரிடம் மீளளிக்கப்படாத கேள்வி படிவக் கட்டணத்தை செலுத்தி 2024.07.08 முதல் 2024.07.22 வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை குறித்த கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

3. சகல கேள்விதாரர்களும் தமது கேள்விப் பிணை முறியை அங்கீகரிக்கப்பட்ட வங்கிப் பிணையாக (2024.07.22 முதல் 2024.09.22) இவ் அலுவலகத்தின் காசாளரிடம் செலுத்தப்படும் நிதி வைப்பு மூலம் கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த செயற்திட்டத்தின் பெயரைக் குறிப்பிடுதல் வேண்டும். பொறியிடப்பட்ட கேள்வி பிரதிகள் நகல் பிரதிகள் வேறு வேறாக உறைகளில் இட்டு அவ் உறைகள் 02ஐயும் ஒரே உறையில் இட்டு 2024.07.23 பி.ப. 3.00 இற்கு அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு 'செயலாளர் மற்றும் அதிகாரி, நகர சபை, பேலியகொட என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கையோடு கொண்டு வந்து பேலியகொட நகர சபையின் தலைமையகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் ஏற்கப்படமாட்டாது.

05. கேள்வி திறத்தல் 2024.07.23 பி.ப. 3.00 இற்கு இடம் பெறுவதுடன் அவ்வேளையில் கேள்விதாரருக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிரகரிக்கும் உரிமை நகர சபைக்கு உரியது. இது பற்றி தேவையான மேலதிக தகவல்களை அலுவலக நேரங்களில் வேலை அதிகாரியைவிசாரித்துப் பெற்றுக் கொள்ளலாம்.

**கே. தரங்கா கம்லத்,**
**நகர சபையின் செயலாளர் மற்றும்**
**பேலியகொட நகர சபையின்**
**அதிகாரம், செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி**
**மற்று பெறுகைக் குழுத் தலைவர்,**
**பேலியகொட நகர சபை.**

**தெ.பே. இல. 077-6397112**
**பெக்ஸ் இல. 011-2913380**

**மின்னஞ்சல் முகவரி: ucpellyagoda@gmail.com**

**Repeat Your Ad For Better Offers**

### இரத்மலானை விசேட பொருளாதார நிலையம்

## பெறுகை அறிவித்தல்

### 2024/2025ம் ஆண்டிற்காக பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக் கொள்ளல்

1. இரத்மலானை விசேட பொருளாதார நிலையத்தில் 2024/2025ம் ஆண்டிற்கு பாதுகாப்புச் சேவை வழங்குவதற்காக கேள்விகளை சமர்ப்பிப்பதற்கு இரத்மலானை விசேட பொருளாதார நிலையம் சார்பாக இரத்மலானை பிரதேச செயலகத்தின் பெறுகைக் குழுவின் தலைவரால் அழைப்பு விடுக்கப்படுகிறது.
2. பாதுகாப்பு சேவை கேள்வி விண்ணப்பங்கள் 2024 ஜூலை 08 முதல் 2024 ஜூலை 22 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 2.00 வரை வாரத்தின் வேலை நாட்களில் இரத்மலானை விசேட பொருளாதார நிலைய அலுவலகத்தில் மீளளிக்கப்படாத ரூ. 3000.00 தொகையை செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.
3. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் 'பிரதேச செயலாளர், பிரதேச செயலகம், இரத்மலானை' என்ற முகவரிக்கு அனுப்புவதுடன், விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் பாதுகாப்புச் சேவை வழங்குநர்களால் '2024/2025ம் ஆண்டிற்கான பாதுகாப்புச் சேவையை வழங்குதல்' என்றும் குறிப்பிடுதல் வேண்டும். பாதுகாப்புச் சேவை கேள்வி விண்ணப்பங்களை 2024 ஜூலை 23 பி.ப. 2.00 இற்கு முன்பு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது இரத்மலானை பிரதேச செயலகத்தின் தரைமாடியில் கணக்குப் பிரிவில் உள்ள கேள்விப் பெட்டியில் குறித்த நேரத்தில் உள்ளிடலாம்.
4. சகல விலைமனு சமர்ப்பித்தலுடனும் மீளளிக்கப்படும் ரூ. 10,000/- பெறுகை பிணை வைப்பை இரத்மலானை விசேட பொருளாதார நிலைய முகாமைத்துவ பொறுப்பின் பெயரில் இரத்மலானை மக்கள் வங்கியில் உள்ள கணக்கு இலக்கம் 080-1-001-6-0001501 எனும் கணக்கிற்கு வரவு வைத்து அதன் மூல பற்றுச்சீட்டை கேள்வி விண்ணப்பத்துடன் இணைத்தல் வேண்டும்.
5. கேள்வி ஆவணங்கள் 02 பிரதிகளுடன் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியென குறிப்பிட்டு வேறுவேறாக உறைகளில் இட்டு அவ்உறைகளை தனி உறையில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
6. பாதுகாப்பு கேள்விகள் திறத்தல் 2024 ஜூலை 23 பி.ப. 2.05 இற்கு இரத்மலானை பிரதேச செயலகத்தில் இடம் பெறுவதுடன் விண்ணப்பதாரிக்கு அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிக்கலாம்.
7. குறித்த கேள்விகளை முழுமையாக அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக் குழுவிற்கு உரித்தானது.
8. தாமதமாகக் கிடைக்கும் கேள்வி விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**இரத்மலானை பிரதேச செயலகம்.**

## விலைமனுக்கோரல்

### மாவட்ட செயலகம் - புத்தளம்

புத்தளம் மாவட்ட செயலகத்தினால் பின்வரும் செயற்றிட்டம் மற்றும் கொள்வனவு தொடர்பாக திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | விலைமனு இல. | செயற்றிட்டத்தின் பெயர் | மதிப்பீடு செய்யப்பட்ட பணிகளின் பெறுமதி (ரூபா) | சீடா பதிவு இல. | மீள் செலுத்தப்படாத விலைமனு வைப்புத் தொகை (ரூபா). | விலைமனு பிணைப் பணம் (ரூபா) மற்றும் செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01. | PU/PR/CO/24/42 | நுரைச்சோலை பொருளாதார மத்திய நிலையம் நவீனமயமாக்குதல் | 51.2 மில்லியன்கள் | C4 அல்லது அதற்கு மேல் (கட்டடம்) | ரூபா.12,500.00 | ரூபா.600,000.00 2024.08.30 வரை |
| 02. | PU/PR/PUR/24/50 | மாவட்ட செயலகத்திற்கு 35 மேசைக் கணினிகளை கொள்வனவு செய்தல் | - | - | ரூபா.1,000.00 | ரூபா.75,000.00 2024.08.25 வரை |
| 03. | PU/PR/PUR/24/51 | மாவட்ட செயலகத்திற்கு 12 மடிக்கணினிகளை கொள்வனவு செய்தல் | - | - | ரூபா.1,000.00 | ரூபா.40,000.00 2024.08.25 வரை |
| 04. | PU/PR/PUR/24/52 | மாவட்ட செயலகத்திற்கு 05 டொட் மெட்ரிக்ஸ் அச்சியந்திரங்களை கொள்வனவு செய்தல் | - | - | ரூபா.1,000.00 | ரூபா.20,000.00 2024.08.25 வரை |

02. மேற்கூறப்பட்ட விலைமனு ஆவணங்கள் 2024.07.08 ஆந் திகதி திங்கட்கிழமை தொடக்கம் 2024.08.05ஆந் திகதி திங்கட்கிழமை வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணிவரை மேற்குறிப்பிட்ட கட்டணத்தை புத்தளம் மாவட்ட செயலக வளாகத்தில் அமைந்துள்ள இலங்கை வங்கிக் கிளையில் அல்லது புத்தளம் இலங்கை வங்கிக் கிளையில் செலுத்திய பின்னர் மாவட்ட செயலகக் கொள்வனவு அலகில் பெற்றுக்கொள்ளலாம்.

03. விலைமனுவினை "மூலப்பிரதி மற்றும் நகல்பிரதி" என தொகுதி இரண்டாக பூர்த்திசெய்து முத்திரையிடப்பட்ட கடித உறைகளில் வெவ்வேறாக இட்டு அவற்றின் இடப் பக்கமேல் மூலையில் உரிய விலைமனு இலக்கம் மற்றும் வேலை விடயத்தினை குறிப்பிட்டு 2024.08.06 ஆம் திகதியான செவ்வாய்க்கிழமை பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு மாவட்ட செயலாளர்/ தவிசாளர், திணைக்கள கொள்வனவு சபை, மாவட்ட செயலகம் புத்தளம் என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புமாறு அல்லது மாவட்ட செயலக கொள்வனவு அலகில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியினுள் இடுமாறோ வேண்டப்படுகின்றனர். பி.ப. 2.00 மணி நிறைவடைந்ததும் விலைமனுப்பத்திரம் மாவட்ட செயலகக் கொள்வனவு அலகினால் திறக்கப்படும்.

04. தகைமையான நிறுவனத்தினை தெரிவு செய்வதில் நிறுவனத்தின் பதிவு மற்றும் அனுபவங்கள் உட்பட்ட அனைத்து விடயங்களும் கவனத்திற் கொள்ளப்படும் என்பதால் உங்கள் அனுபவங்களை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான ஆவணங்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளை சமர்ப்பிப்பது கட்டாயமாகும்

05. மனுதாரர் ஒருவர் ஒரு மனுவினையே சமர்ப்பித்தல் வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட மனுக்கள் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அனைத்து மனுக்களும் நிராகரிக்கப்படும்.

06. தொடர் இலக்கம் 02, 03 மற்றும் 04 இல் உள்ள மேற்படி உபகரணங்கள் அனைத்தும் மாவட்டச் செயலகத்திற்கு இலவசமாகக் கொண்டுவந்து தரப்படல் வேண்டும்.

07. தொடர் இலக்கம் 01க்கான முன்-மனுக் கூட்டம் 2024.07.22 திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கும், தொடர் இல. 02, 03 மற்றும் 04 ஆகியவற்றிற்காக பிற்பகல் 1.00 மணிக்கும் மாவட்டச் செயலகத்தில் நடைபெறும்.

08. விலைமனு திறக்கப்படும்போது விலை மனுதாரர் அல்லது அவரினால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்வதற்கு அனுமதியுண்டு.

09. மேலதிக விபரங்களுக்கு மாவட்ட செயலகத்தின் 032-2265233 அல்லது 032-2265335 என்ற தொலைபேசி வழியினூடாக பெற்றுக் கொள்ளலாம்.

**2024.07.08**

**எச்.எம்.எஸ்.பி.ஹேரத்**
**மாவட்ட செயலாளர்/ அரசாங்க அதிபர்**
**தவிசாளர் - திணைக்கள கொள்வனவு சபை**
**மாவட்ட செயலகம், புத்தளம்**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# கேள்விக்கோரலுக்கான அழைத்தல்

| பொதி இலக்கம் | வேலைகளின் விளக்கம் |
|---|---|
| RDA/PMR/TP/2024/NP/VVN | வவுனியா, நிறைவேற்று பொறியியலாளர், வீஅஅ, வட மாகாணம், தேசிய நெடுஞ்சாலையின் இருமருங்கிலும் ''துரு மான் பெத்'' செயற்றிட்ட நிழல்தரும் மரங்களை நாட்டல் - 2024 |
| RDA/PMR/TP/2024/NP/PP | பருத்தித்துறை, நிறைவேற்று பொறியியலாளர், வீஅஅ, வட மாகாணம், தேசிய நெடுஞ்சாலையின் இருமருங்கிலும் ''துரு மான் பெத்'' செயற்றிட்ட நிழல்தரும் மரங்களை நாட்டல் - 2024 |
| RDA/PMR/TP/2024/NP/JFN | யாழ்ப்பாணம், நிறைவேற்று பொறியியலாளர், வீஅஅ, வட மாகாணம், தேசிய நெடுஞ்சாலையின் இருமருங்கிலும் ''துரு மான் பெத்'' செயற்றிட்ட நிழல்தரும் மரங்களை நாட்டல் - 2024 |

மேலேயுள்ள வேலைகளுக்காக தேசிய போட்டிரீதியிலான கேள்விமனுக்கோரல் நடைமுறையின் கீழ் கேள்விமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. **2024 ஜூலை 08 ஆம் திகதியிலிருந்து 2024 ஜூலை 26 ஆம் திகதியன்று** வரையும் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணைய பக்கங்களை பார்வையிடுமாறு ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.


சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

128

டயர்கள், டியூப்புகள் விற்பனைக்கு

டயர் டியூப் ஒரே கூரையின் கீழ் சகல டயர் போக்லிப்ட், கல், காற்று, டயர் இருக்கும் இடத்திற்கு போ க்குவர த்து ரிச்சட் பீரிஸ், ஆர்பிடெக் டயர் நிரப்புவதற்கு வழங்கப்படாத 700x167 50716700x20-1000x20.155 கிரவுன் டயர், கொழும்பு 14. 07731 34060 044411

டயர் டியூப் வெளிநாட்டிலிருந்து டயர் தருவிப்போர் JCB, மோட்டர் கிரேடர், பெ கோ, போக்லி ப்ட், செலினிட்டர் 600 x 9 - 700 x 12 ஆர்பிடெக் டயர் நிரப்பும் போது தேவைப்படும். 700 x 1670 - 16 x 100 x 20 பஸ் உரிமையாளர்களுக்கு விசேட விலை 135, கிரவுன் டயர், கொழும்பு 14. 077 3134060 044401

www.adz.lk

it's what you want


## இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
## போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

# விலைமனுக்கோரல்

**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட வீதிகள் மற்றும் மேம்பாலங்களுக்காக GANTRY, CANTILEVER பலகைகள் மற்றும் பேருந்து தரிப்பிடங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கொள்முதல்**

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | மனுப் பாதுகாப்பு (ரூ.) |
|---|---|---|
| RDA/DPR/PRO/ WK/NCB/ PMRD/ 2024/087 | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் மேல் மற்றும் மத்திய மாகாணங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட வீதிகள் மற்றும் மேம்பாலங்களுக்காக GANTRY, CANTILEVER பலகைகள் மற்றும் பேருந்து தரிப்பிடங்களை குத்தகைக்கு வழங்குவதற்கான கொள்முதல் | 300,000.00 |

தேசிய மனுக்கோரல் போட்டி முறைக்கமைய மேல்குறிப்பிடப்பட்டுள்ள சேவையினை வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2024.07.05 ஆம் திகதி முதல் 2024.07.25 ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

SELACINE

## இலங்கை துறைமுக அதிகாரசபை

# விலைமனுக் கோரல்

இலங்கை துறைமுக அதிகாரசபைக்குரிய கொழும்பு துறைமுகத்தில் அமைந்துள்ள மத்திய சமையலறையிலிருந்து 2024.08.01 ஆம் திகதி முதல் 2025.07.31 ஆம் திகதி வரையான காலத்திற்குள் அகற்றப்படும் கழிவு உணவுப் பொருட்களை கொள்வனவு செய்து அகற்றிச் செல்வதற்காக இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இது தொடர்பான நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பங்களை, மீளச்செலுத்தப்படாத 1000/= ரூபா தொகையை அதிகாரசபையில் செலுத்தி, கொழும்பு 13, கொச்சிக்கடை, மத்திய சமயலறைப் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளரின் (உணவு மற்றும் பானம்) அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

விலைகளைக் கொண்ட முத்திரையிடப்பட்ட விலைமனு விண்ணப்பங்களை குறித்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள டென்டர் (விலைமனு) பெட்டியில் இடவேண்டியதோடு, டென்டர் பத்திரங்களை பொறுப்பேற்றல் 2024.07.17 ஆம் திகதி 10.00 மணிக்கு முடிவடைகின்றது. டென்டர் பெட்டியை திறத்தல், அதன் பின் உடனடியாக நடைபெறும். இந்த டென்டர் திறக்கும் சந்தர்ப்பத்திற்கு குறித்த டென்டர் விண்ணப்பதாரர்களுக்கு பங்கேற்க முடியும்.

தெரிவு செய்யப்படும் (டென்டர்) விலைமனுதாரருக்கு அது தொடர்பாக பின்னர் பதிவுத் தபாலில் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலதிக விபரங்கள் 2434557, 2482831 2482797, 2483409 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**பிரதான முகாமையாளர் (நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள்)**
**நலன்புரி மற்றும் கைத்தொழில் உறவுகள் பகுதி**


OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www. observerjobs. lk


# விலைமனுக் கோரல்

## தள வைத்தியசாலை - கந்தளாய்

கந்தளாய் தள வைத்திய சாலைக்கு பின்வரும் உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக விலைமனுக்களை கோருவதற்கு வைத்தியசாலையின் பெறுகைக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ் உபரகணங்களை முழுமையான ஒப்பந்தப்பத்திரம் (விலைமனுக்கள்) 2 பிரதிகளுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

| ஏல இல. | பணியின் பெயர் | மீள வழங்கப்படாத அனுமதிப் பத்திரக் கட்டணம் | 'லங்கா' பிணைக்காரரின் பெறுமதி | மதிப்பிடப்பட்ட மூலச் செலவு மில்லியன் |
|---|---|---|---|---|
| BHK/AB/04/ARKM/ EYE/2024 | Supply of 01 No Auto Refractometer | 2,000.00 | 40,000.00 | 4,00 |
| BHK/AB/04/PEP/ ICU/2024 | Supply of 03 Nosof portable Feeding Pump | 1,000.00 | 10,000.00 | 1,00 |

1. இதற்காக காரியாலயத்தினால் வெளியிடப்பட்ட பத்திரங்களில் மாத்திரம் கேள்விப்பத்திரம் முன் வைக்கப்படல் வேண்டும்.
2. ஒப்பந்த (விலைமனுக்கள்) பத்திரம் மீள்வழங்கப்படாத அனுமதிப்பத்திரக் கட்டணத்தை செலுத்தி வார நாட்களில் 2024.07.08 இருந்து 2024.07.28 வரை மு.ப. 9.00 இல் இருந்து பி.ப. 2.00 வரை வைத்தியசாலை காரியாலயத்தில் பெற்றுக் கொள்ள முடியும்.
3. 2024.07.29 பி.ப. 2.00க்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதோடு அதற்கு முதல் பெறும் வகையில் விலைமனுக்கள் 'தலைவர், மீள்நிர்மான பணிக்குழு, தள வைத்தியசாலை, கந்தளாய்' என்ற விலாசத்திற்கு பதிவுத் தபாலில் அனுப்ப முடியும். இல்லையெனில் கந்தளாய் தள வைத்தியசாலையின் காரியாலயத்திற்கு கொண்டு வந்து தரமுடியும். குறித்த நேரத்திற்கு பின் கிடைக்கும் (டென்டர்) ஒப்பந்தம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ஒப்பந்த பத்திரம் திறக்கப்படும் சந்தர்ப்பத்தில் ஒப்பந்தக்காரர் அல்லது அவரால் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி சமுகமளிக்க முடியம்.
4. கேள்விமனுக்களை கொண்ட கடித உறையின் மேல் இடது மூலையில் விலைமனு இலக்கம் மற்றும் குறித்த பணி தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.
5. கேள்வி விலைமனு 2024.07.29ஆம் திகதி பி. ப. 2.00 மணிக்கு திறக்கப்படும்.
6. ஏலத்திற்கு முந்திய கூட்டம் 2024.07.19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு நடைபெறும்.

**எந்தவொரு கேள்விமனுவையும் ஏற்றுக்கொள்ளும் மற்றும் ஏற்றுக் கொள்ளாதிருக்கும் உரிமை வைத்தியசாலையின் பெறுகைக் குழுவிற்கு உண்டு.**
**மேலதிக விபரம் - 026 2234945, 076 8178300.**

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**ஆதார வைத்திய சாலை,**
**கந்தளாய்.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பொறியியல் செயலணி
## மேல் மாகாணம்

### செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் பொறியியல் செயலணிக்கான (மே.மா) வாகனங்களின் பெறுகை

1) செயற்பாட்டு குத்தகை முறையின் கீழ் இரண்டு (02) வருட காலத்திற்கு கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வாகனங்களை வழங்குவதற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பொறியியல் செயலணி (மேமா), பிரதிப் பிரதான செயலாளரின் (பொறியியல்) பெறுகைக் குழுத் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| விபரம் | வாகன எண்ணிக்கை | மீளளிக்கப்படும் விலைக்கோரல் பிணை முறித் தொகை (ரூபா) | மீளளிக்கப்படாத கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|
| டபள் கெப்கள் | 04 | 250,000.00 | 4,000.00 |

2) இந்த வாகனங்கள் 2016ஆம் வருடத்திற்கு பின்னர் உற்பத்தி செய்யப்பட்டவையாகவிருத்தல் வேண்டும்.
3) சகல வாகனங்களும் சாரதி மற்றும் எரிபொருள் சகிதம் வழங்குதல் வேண்டும். சாரதி மற்றும் எரிபொருள் சகிதம் செயற்பாட்டு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்கான விபரக்குறிப்புகளின் பிரகாரம் 04 எண்ணிக்கையான டபள் கெப்புகளை வழங்குவதற்கான தமது கட்டணங்களை வழங்குநர் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
4) வழங்குநரின் (குத்தகைதாரர்) தகுதி: உலகப் புகழ்பெற்ற வர்த்தக நாம வாகனங்களின் அங்கீகரிக்கப்பட்ட உள்நாட்டு முகவர்கள், இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட நிதி நிறுவனங்கள் மற்றும் குறைந்தபட்சம் 05 வாகனத் தொகுதிகளைக் கொண்ட அங்கீகரிக்கப்பட்ட வாடகைக் கார் சேவை வழங்குநர்கள் மேற்கூறிய விலைக்கோரலுக்காக விலைமனுக்களைச் சமர்ப்பிக்க தகுதி பெறுவர்.
5) காலம் முழுவதும் தமது வாகனங்கள் நல்ல ஒழுங்கிலும் நிலையிலும் பராமரிக்கப்படுவதை வழங்குநர் உறுதிப்படுத்துதல் வேண்டும். வாகனத்தின் சகல தவணை சேவைகள், சகலவிதமான பராமரிப்புகள் மற்றும் திருத்தவேலைகள் என்பவை வாகன வழங்குநரினாலேயே மேற்கொள்ளப்படல் வேண்டும்.
6) வழங்குநர் காலம் முழுவதும் தமது செலவில் வாகனத்தை முழுமையான காப்புறுதி செய்து கொண்டிருத்தல் வேண்டும்.
7) சாதாரண வேலை நாட்களுக்குப் புறம்பாக, தேவையின் பிரகாரம் வார இறுதி நாட்கள் மற்றும் பொது விடுமுறை நாட்களில் வாகனத்தை செலுத்த நேரலாம். இதற்காக மேலதிக கட்டணம் செலுத்தப்பட மாட்டாது.
8) விபத்து திருத்தவேலைகள், காப்புறுதி மற்றும் ஏனைய பராமரிப்பு விஷயங்களில் ஏற்படும் அனைத்து செலவுகளின் செலவையும் வழங்குநர் (குத்தகைதாரர்) ஏற்க வேண்டும். வாகனத்தை பழுதுபார்ப்பதற்கு 24 மணிநேரத்திற்கு மேல் அல்லது குத்தகைதாரரின் தேவைக்கேற்ப குறுகிய கால அவகாசம் எடுக்கும் பட்சத்தில், வழங்குநர் இதே வகையான மற்றும் நிபந்தனையின் பிரகாரம் மாற்று வாகனத்தை பொறியியல் நிறுவனத்திற்கு (மேமா) வழங்க வேண்டும்.
9) ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை பத்தரமுல்ல, இல. 204, டென்சில் கொப்பேடுவ மாவத்தை, 5ஆம் தளம், பொறியியல் செயலணி, பணிப்பாளர் (பொறியியல்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் 2024-07-10ஆம் திகதி முதல் 2024-07-31ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் மேற்கூறிய முகவரியில் விலைமனுக்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
10) ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பத்தரமுல்ல, இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, 5ஆம் தளம், பொறியியல் செயலணி (மேமா) கணக்காளருக்கு 4,000.00 ரூபா மீளளிக்கப்படாத கட்டணம் மற்றும் நிறுவனப் பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றுடன் பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல்) அவர்களுக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2024-07-10ஆம் திகதி முதல் 2024-07-31ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். பணம் செலுத்தும் முறை ரொக்கப்பணமாகவிருத்தல் வேண்டும்.
11) நகல் பிரதிகளுடனான முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024-08-01ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் தலைவர், பிரதிப் பிரதான செயலாளரின் (பொறியியல்) பெறுகைக் குழு, பொறியியல் செயலணி (மேமா), 5ஆம் மாடி, இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''செயற்பாட்டு குத்தகை முறையின் கீழான வாகனங்களின் பெறுகை'' எனத் தெளிவாகக் குறிப்பிட்டிருத்தல் வேண்டும். முடிவுறுத்தல் நேரத்தின் பின் உடனடியாக விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் சாட்சிகளாக அனுமதிக்கப்படுவர். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். இலத்திரனியல் மூலம் அனுப்பப்படும் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. சகல விலைமனுக்களுடனும் மேற்கூறிய அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கான வங்கி உத்தரவாதமாக விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
12) விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படும் இறுதி நாள் முதல் 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாகும்.
13) தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்கள் அந்த வாகனங்களை கட்டளை வழங்கப்பட்ட 14 நாட்களுக்குள் விநியோகிக்க வேண்டும்.
14) இந்த பெறுகை அறிவித்தலின் சகல விதிகள் மற்றும் நிபந்தனைகளும் தேசிய வரவுசெலவுத்திட்ட திணைக்களத்தினால் வழங்கப்பட்ட 01/2024 மற்றும் 2022/07ஆம் இலக்க தேசிய வரவு - செலவுத்திட்ட சுற்றுநிருபத்தினால் நிர்வகிக்கப்படும்.
15) எந்தவொரு விலைமனுவையும் அல்லது சகல விலைமனுக்களையும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
16) பெறுகை தொடர்பாக விலைமனுதாரர்களுக்கு ஏற்படும் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகளுக்கு பெறுகைக் குழு பொறுப்பு கூறாது.

**தலைவர்,**
**பிரதிப் பிரதான செயலாளர் பொறியியலாளரின் (மேமா) பெறுகைக் குழு,**
**பொறியியல் செயலணி (மே.மா),**
**இல. 204, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி** : 011 2092504
**தொலைநகல்** : 011 2092505
**மின்னஞ்சல்** : procumentuniteng@gmail.com
**திகதி** : 2024-07-08.


To Buy Your Dream Vehicle within your Budget

If it is a vehicle you want,

YOU NAME IT, WE HAVE IT

Sunday Observer adz Auto Focus



THE ONLY PLACE TO BUY YOUR DREAM CAR!

Sunday Observer adz it's what you want



- Auto Focus

adz Magazine Issued with Sunday Observer

Hot Line 011 2 429 369 011 2 429 368

E-mail adzsuo@gmail.com

JCT

## ஜயா கொண்டெயினர் டெர்மினல்ஸ் எல்டிட

### துறைமுகங்கள், கப்பற்சேவை மற்றும் விமானசேவைகள் அமைச்சு

### விலைமனுக்களுக்கான அழைப்பு

### 2024/25 ஆம் ஆண்டுகளுக்காக புல் வெட்டல், காணி சீரமைத்தல் மற்றும் நானாவித தொழிலாளர்கள் சேவைகளுக்கான வழங்கல்

இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபைக்கு முழுவதுமாக உரித்தான ஜயா கொண்டெயினர் டெர்மினல்ஸ் எல்டிட ஆனது இலங்கையிலுள்ள தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கொழும்பு-15, வோல்ஸ் ஒழுங்கை, 69 ஆம் இலக்கத்திலுள்ள Colombo Oil Bank இல் அமைந்துள்ள இடப்பரப்பில் புல் வெட்டல், காணி சீரமைத்தல் மற்றும் நானாவித தொழிலாளர்கள் சேவைகளுக்காக முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றது.

2024.07.09 ஆம் திகதியிலிருந்து 2024.07.29 ஆம் திகதி வரையும் அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் வரிகள் அடங்கலாக மீளளிக்கப்படாத வைப்புத் தொகையாக 5,000 ரூபாவை செலுத்திய பின்னர், கொழும்பு-15, வோல்ஸ் ஒழுங்கை, 69 ஆம் இலக்கத்திலுள்ள ஜயா கொண்டெயினர் டெர்மினல்ஸ் எல்டிட இன் நிதிப் பிரிவில் விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும். விலைமனுக்களை திறக்கும் திகதியிலிருந்து 90 நாட்கள் கால எல்லைக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் ஒரு இலட்சம் ரூபா (100,000 ரூபா) பெறுமதியுள்ள விலைமனுப்பிணையொன்றுடனும் விலைமனுவானது இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் 2024.07.30 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் ''தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, ஜயா கொண்டெயினர் டெர்மினல்ஸ் லிமிட்டட், இல. 69, வோல்ஸ் ஒழுங்கை, கொழும்பு-15 என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது JCT லிமிட்டட்டின் நிதிப்பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படுவதுடன் விலைமனுக்கள் அவைகளை 2024.07.30 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு முடியவுடன் விரைவாகவே திறக்கப்படும். 2024.07.22 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமும் தளவிஜயமும் நடைபெறும். விலைமனுவை அடக்கியுள்ள உரித்தான தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் "Provision of Grass Cutting, Landscaping & Miscellaneous Workers – 2024/25" என குறிப்பிடப்படல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஜயா கொண்டெயினர் டெர்மினல்ஸ் லிமிட்டட்,**
**இல.: 69, வோல்ஸ் ஒழுங்கை,**
**கொழும்பு-15.**

**தொடர்பிலக்கம்: 2540045/6-0701327648.**

## தெவிநுவர பிரதேச சபை

### தெவிநுவர ஸ்ரீ விஷ்ணு தேவாலயத்தின் எசல உற்சவம் - 2024

### எசல பொருட் சந்தையில் தற்காலிக விற்பனைக் கூடங்கள் மற்றும் நிலத்துண்டுகளை விற்பனை செய்வதற்கான கேள்வி அழைப்பு

தெவிநுவர உத்பலவன்ன ஸ்ரீ விஷ்ணு தேவாலயத்தின் எசல பெரஹரா உற்சவத்திற்கு சமமாக நடத்தப்படும் எசல பொருட்சந்தைக்கு தற்காலிக விற்பனைக் கூடம் மற்றும் நிலத்துண்டுகளை விற்பனை செய்வதற்காக கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

01. இத்தற்காலிக விற்பனைக் கூடங்கள் மற்றும் நிலத்துண்டுகளில் விற்பனை செய்யும் விடயங்கள் பொருட்சந்தை நடத்தப்படும் தினமான 2024.07.21 முதல் 2024.07.27 வரையான காலத்திற்கு அமுலில் இருக்கும்.

02. ஆர்வமுள்ள கேள்விதாரர்களுக்கு தெவிநுவர பிரதேச சபையின் வழங்கல்கள் பிரிவில் 2024.07.08 முதல் 2024.07.14 வரை அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 4.00 வரை கேள்வி ஆவணத் தொகுதியை மீளளிக்கப்படாத ரூ. 300.00 கட்டணத்தை செலுத்திய பின்னர் பெற்றுக்கொள்ள வாய்ப்பு உண்டு.

03. 2024ஆம் ஆண்டுடன் சம்பந்தப்பட்ட கேள்விகளை சமர்ப்பிக்க வேண்டிய தற்காலிக வர்த்தக கூடங்கள் மற்றும் நிலத்துண்டுகள் பற்றிய வரைபடம் தெவிநுவர பிரதேச சபை அலுவலகத்தில் காட்சிப்படுத்தப்படுவதுடன், அதனடிப்படையில் உங்களால் தற்காலிக விற்பனைக் கூடங்கள் மற்றும் நிலத்துண்டுகளுக்காக கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும். தற்காலிக விற்பனைக் கூடம் மற்றும் நிலத்துண்டுகள் பற்றிய வரைபடம், குறைந்த பட்சம் கேள்வித் தொகை பற்றிய விபரம் அடங்கிய கேள்வி ஆவணத் தொகுதியை **071-1190755** தொ.பே. இலக்கத்தின் மூலம் **whatsapp** வழியாக அல்லது **devinuwara.ps@gmail.com** என்ற முகவரிக்கு ஈமெயில் செய்தியை அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

04. கேள்வி ஆவணங்களுக்காக வைப்பு செய்ய வேண்டிய விலைமனுக்கள் கீழ்க்காணுமாறு

| | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் பிணை வைப்புக் கட்டணம் |
|---|---|---|
| தற்காலிக விற்பனைக் கூடங்கள் | ரூ. 300.00 | குறைந்த பட்ச கேள்வித் தொகையில் 10% ஆகும். |
| நிலத்துண்டுகள் | ரூ. 300.00 | குறைந்த பட்ச கேள்வித் தொகையில் 10% ஆகும். |

05. சமர்ப்பிக்கப்படும் கேள்வியுடன் மீளளிக்கப்படும் பாதுகாப்புப் பிணை வைப்புக் கட்டணத்தை தெவிநுவர பிரதேச சபையின் காசாளர் பிரிவிற்கு காசாக வைப்புச் செய்து குறித்த பற்றுச்சீட்டை சமர்ப்பித்தல் வேண்டும்.

06. பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.07.15 மு.ப. 9.30 இற்கு அல்லது அதற்கு முன்பு "செயலாளர், பிரதேச சபை, தெவிநுவர" இற்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டு வந்து பிரதேச சபை செயலாளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள 2024ஆம் ஆண்டிற்கான தற்காலிக விற்பனைக் கூடங்கள் மற்றும் நிலத்துண்டுகளை விற்பனை செய்தல்" என்று குறிப்பிட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதன் மூலம் சமர்ப்பிக்கலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படுவதுடன், கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த பின்னர் 2024.07.15 மு.ப. 10.00 இற்கு பிரதேச சபை கூட்ட மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படுவதுடன், சமுகமளிப்பதற்கு விரும்பும் கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களது பிரதிநிதிகளுக்கு அதற்காக சமுகமளிக்கலாம்.

07. கேள்விகள் வழங்குதல் பற்றிய இறுதித் தீர்மானம் தெவிநுவர பிரதேச சபையின் பெறுகைக்குழுவிற்கு உரியது.

**செயலாளர்,**
**தெவிநுவர பிரதேச சபை.**
**தொலைபேசி இலக்கம் 041-2222571**

**தெவிநுவர பிரதேச சபை**
**தலைமையகத்தில்.**
2024.07.08ம் திகதி

OBSERVER aDZ TRUSTED CLASSIFIED GUIDE it's what you want
தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements
(Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

Kurunegala District

Kurunegala - 077 0 325 625
6217 - Sampath Advertising - No. 15/6, Convent Lane, Kurunegala.

Kurunegala - 077 3 512 600
6163 - Athugala Media Center - No. 21A, Uthuru Wewa Road, Kurunegala.

Kuliyapitiya - 037 22 832 88
6101 - Sasthrodaya Book Shop - No. 11, Mihindu Mawatha, Kuliyapitiya.

Nikaweratiya - 077 6 064 640
6154 - Kumuditha Book Shop - No. 101/C, Puththalam Road, Nikaweratiya.

Wariyapola - 037 22 672 58
6188 - Kalugamuwa Road, Wariyapola.

Giriulla - 077 9 542 492
6233 - Chathura Book Shop - No. 49, Giriulla.

Pannala - 076 7 861 313
6118 - Miyumi Book Shop - No. 7, Negombo Road, Pannala.

Alawwa - 037 22 78 189
6145 - Gunasiri Welandasela - No.52, Main Street, Alawwa.

Narammala - 037 22 49 211
6155 - Sisira Stores & Pharmacy - Negombo Road, Narammala.

ADZ HOTLINE - 011 2 429 369
CALL - 011 2 429 342/ 343

### விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

## தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB)

### கனிஷ்ட கிரிக்கெட் பொருட்களின் வழங்கல் மற்றும் விநியோகம்

### ஒப்பந்த இல.: MOYS/PCM/05/14

பாடசாலை மாணவர்களுக்கான கிரிக்கெட் அணுகலை மேம்படுத்துவதன் மூலம் பிராந்திய மட்டத்தில் கிரிக்கெட்டில் திறமையான வீரர்களை அடையாளம் காண்பதில் விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் வெளிப் பாடசாலை கிரிக்கெட் மேம்பாட்டுத் திட்டம் அவதானம் செலுத்துகிறது. இந்தத் திட்டத்தின் கீழ், 2024 ஆம் ஆண்டில் கிரிக்கெட்டை ஆரம்பிப்பதற்கு விரும்பும் பாடசாலைகளுக்கு 325 எண்ணிக்கையான கனிஷ்ட கிரிக்கெட் பொருட்கள் அடங்கிய பைகள் வழங்கப்படவுள்ளன.

325 பைகளுக்கான கீழ் விபரிக்கப்பட்ட கிரிக்கெட் பொருட்களான, "கனிஷ்ட கிரிக்கெட் பொருட்களின் வழங்கல் மற்றும் விநியோகத்திற்காக" பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின், அமைச்சு பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன. விநியோகம் மேற்கொள்ளும் காலமானது அங்கீகாரக் கடிதம் வழங்கப்பட்டதில் இருந்து 42 நாட்காட்டி தினங்களாகும். ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட கூறுகளுக்கான கூறுவிலை இடுவதற்கு விலைமனுதாரர்கள் அனுமதிக்கப்படுவர். கூறு ஒன்றுக்கான ஒவ்வொரு வழங்குநர்/ உற்பத்தியாளரிடம் இருந்து (ஒரு வர்த்தகக் குறி) இரு தேர்வுகளில் கூறுவிலையிடுவதற்கு விலைமனுதாரர்கள் அனுமதிக்கப்படுவர்.

| கூறு | கிரிக்கெட் பொருட்கள் | வகைப்படுத்தப்பட்ட கூறு/ கூறுகளுக்கான விலைமனு பிணை |
|---|---|---|
| கூறு A | இரு பக்கங்களிலும் அரச முத்திரைகளுடன் 325 அணி பைகள் | 20,000 இ. ரூபா |
| கூறு B | 650 Nos of English Willow Bats (Harrow) | 90,000 இ. ரூபா |
| கூறு C | 325 Nos of English Willow Bats (No. 06) | |
| கூறு D | 650 Pairs of Right Hand Batting Gloves | |
| கூறு E | 650 Pairs of Left Hand Batting Gloves | |
| கூறு F | 975 Pairs of Batting Pads (Ambi) | |
| கூறு G | 1300 Nos of Thigh Guards (Ambi) | |
| கூறு H | 325 Pairs of Wicket Keeping Pads | |
| கூறு I | 325 Pairs of Wicket Keeping Gloves | |
| கூறு J | 650 Nos of Helmets | |
| கூறு K | 6500 Nos of Junior Balls | |

அரசின் பெறுகை வழிகாட்டல்களில் நிர்ணயிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறைகளுக்கு அமைய வழங்குநர் ஒருவர் தேர்வு செய்யப்படும். அனைத்து ஆவணங்களும் ஆங்கில மொழிலில் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் என அனைத்து ஆர்வமுடைய தரப்புகளும் அறிவுத்தப்படுகின்றனர்.

1. 2024 ஜுலை 08 ஆம் திகதி தொடக்கம் 2024 ஜுலை 29 ஆம் திகதி வரை சாதாரண வேலை நாட்களில் உதவிச் செயலாளர் (பெறுகை), 3ஆவது மாடி, பெறுகைப் பிரிவு, விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரியில் உங்களால் மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும் (தொ: 011-2680172/ 011-2670028 தொலைநகல்: 011-2680277 மின்னஞ்சல் - procurementmoys@gmail.com). விலைமனு ஆவணங்களை சாதாரண வேலை நேரங்களில் மேலுள்ள முகவரியில் கட்டணம் இன்றி பரீட்சிக்கலாம்.
2. மிளளிக்கப்படாத கட்டணமாக பதினைந்து ஆயிரம் இலங்கை ரூபாவை (ரூபா 15,000) (விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, 3ஆவது மாடியில்) சிறாப்பருக்கு செலுத்தி 2024 ஜுலை 08 ஆம் திகதி தொடக்கம் 2024 ஜுலை 29 ஆம் திகதி வரை 0900 மணி தொடக்கம் 1500 மணி வரை கொழும்பு 07, பிலிப் குணவர்தன மாவத்தை, இல. 09, விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, மேலதிகச் செயலாளருக்கு (நிர்வாகம் மற்றும் பெறுகை) எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
3. விலைமனுக்களை மூடும் திகதியில் இருந்து 91 நாட்கள் வரை விலைமனுக்கள் செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
4. அனைத்து விலைமனு ஆவணங்களும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் புகழ்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்டு பெறப்பட்ட கூறு யு இற்காக 20,000 மற்றும் கூறு B தொடக்கம் கூறு K வரை 900,000 இலங்கை ரூபாவின் நிபந்தனையற்ற கோரும்போது பெறத்தக்க விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும். விலைமனு பிணையானது விலைமனுக்களை மூடும் திகதியில் இருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.
5. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு மினி கேட்போர்கூடுத்தில் 2024 ஜுலை 18ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு இடம்பெறும். ஒவ்வொரு விலைமனுதாரர் சார்பிலும் அதிகபட்சம் 2 பிரதிநிதிகள் அனுமதிக்கப்படுவர்.
6. முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024 ஜுலை 30ஆம் திகதி 15.00 மணி அல்லது அதற்கு முன்னர் நிலையான அமைச்சரவை நியமித்த பெறுகைக் குழு, தலைவருக்கு கிடைக்கும் வகையில் மேலதிகச் செயலாளர் (நிர்வாகம் மற்றும் பெறுகை), 3ஆவது மாடி, பெறுகைப் பிரிவு, விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு, இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரியில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டியில் அசல் மற்றும் பிரதியில் இடுதல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களுடன் சேர்த்து உதவிச் செயலாளருக்கு (பெறுகை) மாதிரிகளை சமர்ப்பித்தல் வேண்டும். பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் அவை உடன் திறக்கப்படும்.
7. ஆரம்ப ஒப்பந்த விலையின் 10% செயல்திறன் பிணை இருத்தல் வேண்டும் என்பதோடு செயல்திறன் பிணையின் செல்லுபடிக்காலம் விநியோகம் பூர்த்தி செய்யப்பட்ட திகதிக்கு அப்பால் 28 நாட்கள் இருத்தல் வேண்டும். செயல்திறன் பிணை இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் வர்த்தக வங்கி ஒன்றினால் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**அமைச்சு பெறுகைக் குழு,**
**விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு**
**இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை,**
**கொழும்பு 07.**

## இலங்கை சனநாயக சோஷசலிசக் குடியரசு

### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

### வீதி அபிவிருத்தி அதிகாரசபை (RDA)

### துரு மங் பெத் தேசிய நெடுஞ்சாலையின் இரு புறமும் நிழல் மரங்களை நடும் செயற்றிட்டம் – 2024

**(IFB இல. PD(UP)/THURUSEVANA/BDL/2024/01)**

வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிராந்திய பெறுகைக் குழுத் (ஊவா) தலைவரினால் துரு மங் பெத் தேசிய நெடுஞ்சாலையின் இரு புறமும் நிழல் மரங்களை நடும் செயற்றிட்டத்திற்காக மேற்கூறிய IFB இலக்கத்தின் கீழ் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

இதில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 2024 ஜூலை 09ஆம் திகதி முதல் 2024 ஜூலை 29ஆம் திகதி வரையில் அபிவிருத்தி அதிகார சபையின் www.rda.gov.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்து அல்லது 057-2222170/ 011-2862445 எனும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மாகாணப் பொறுப்பு பணிப்பாளர் (ஊவா)**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்

### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

### வீதி அபிவிருத்தி அதிகார சபை

### 1500 கி.மீ. வீதி புனர்நிர்மாணத்திற்கான செயற்றிட்டத்திற்கான

## விலைக்கோரல்களுக்கான அழைத்தல்

| தொ. இல. | ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|---|
| 1. | RDA/WP(W)/TEN/KAL/2024/01 | அளுத்கம நகரம் (CGHW வீதியில்) பக்க வடிகால்கள் மற்றும் நடைபாதை நிர்மாணம் (A2)/59/+950-61+000) முதலாம் கட்ட வீதி |

மேலேயுள்ள வேலைக்காக தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. 2024 ஜுலை 05 ஆம் திகதியிலிருந்து 2024 ஜுலை 25 ஆம் திகதியன்று வரையும் **www.rda.gov.lk & mohsl.gov.lk** என்ற வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணைய பக்கங்களை பார்வையிடுமாறு ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாகாண பணிப்பாளரின் அலுவலகம் (மேல் மாகாணம்),**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**

## பாணந்துறை உயர் நீதிமன்ற HC (SPL)04/2023 என்ற வழக்கின் 2011 இல. 40 சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்

செல்லதொரே சாரிகா ராஜினி என்பவரின் பெயரில் ஆரம்பிக்கப்பட்டுள்ள

1. சம்பத் வங்கி இல. 103152252955 கணக்கு
2. கொமர்சல் வங்கி இல. 8207041353 கணக்கு
3. Nations Trust Bank இல. 200140073944 கணக்கு
4. செலான் வங்கி இல. 0090-13276265 - 120 கணக்கு

குற்றவியல் புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவின் பிரதிப் பணிப்பாளரால் 2011 இல. 40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல. 5 நிதி மோசடியைத் தவிர்த்தல் சட்டத்தின் 7(1) பிரிவின் கீழ் ஒப்படைக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் விநியோகிக்கப்பட்ட செயற்பாடற்றதாக்கும் கட்டளை 8(2) பிரிவின் பிரகாரம் பாணந்துறை உயர் நீதிமன்றத்தினால் இல. HC(SPL)04/2023 என்ற வழக்கின் கீழ் 2023.07.06 முதல் எதிர்காலத்தில் கட்டளை உறுதி செய்யப்பட்டுள்ளது.

மேற்படி வங்கிக் கணக்குகள் சம்பந்தமாக உரிமை கோரல்களை நீதிமன்றத்தில் உறுதி செய்வதற்கு உண்மையான மூன்றாம் தரப்பினருக்கு வசதிகள் வழங்கும் முகமாக அறிவூட்டுவதற்காக பிரசுரிக்கிறேன்.

அறிவித்தலை பிரசுரிப்பதற்காக மேற்படி வரைபை உறுதி செய்து சமர்ப்பிக்கிறேன்.

**பதிவாளர்,**
**உயர் நீதிமன்றம்,**
**பாணந்துறை.**

### 2023ஆம் ஆண்டின் 09ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய மேல் நீதிமன்றத்தினால் எழுத்து மூலம் வழங்கப்பட்ட ஆதனங்களை தடை செய்வதற்கான கட்டளையொன்றின் கீழ் 2024.07.05ஆம் திகதி முதல் 03 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது. என இத்தால் அறியத் தருகிறோம்

1. ஹட்டன் நசனல் வங்கி திம்பிரிகஸ்யாய - நிலையான வைப்புக்கள}

   a. 092300039897
   b. 092300039903
   c. 092300039910
   d. 092300039750
   e. 092300039767
   f. 092300039774
   g. 092300039781
   h. 092300039842
   i. 092300039866
   j. 092300039873
   k. 092300039880
   l. 092300039743
   m. 092300039798
   n. 092300039804
   o. 092300039811
   p. 092300039835

2. HNB ASSURANCE நுகேகொட - ஆயுள் காப்புறுதி கொள்கை இலக்கம்

   a. 030448309
   b. 030464885
   c. 030448308
   d. 030448305
   e. 03046717

**மேல் நீதிமன்ற நீதிபதியின் ஆணைப் படி**
**பதிவாளர்.**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### மாவட்ட செயலகம், கம்பஹா

### கம்பஹாவின் மாவட்ட செயலகம் மற்றும் 12 பிரதேச செயலகங்களுக்கான சுத்தம் செய்தல் மற்றும் ஜெனிட்டோரியல் சேவைகளுக்கான பெறுகை

**ஒப்பந்த இல.: GAM/DIST/4/18/13**

01. மாவட்ட செயலகம் மற்றும் 12 பிரதேச செயலகங்களுக்காக சுத்திகரிப்பு மற்றும் ஜெனிட்டோரியல் சேவைகளை வழங்குவதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மாவட்ட செயலக அலுவலகத்தின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
02. இந்த விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடத்தப்படும்.
03. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கம்பஹா, லக்சியனே மந்திரய, மாவட்ட செயலகம், 3 ஆம் மாடி, கணக்கிடல் பிரிவின் கணக்காளரிடமிருந்து பெற்று 2024.07.08 ஆம் திகதியிலிருந்து 2024.07.29 ஆம் திகதி வரையும் எந்தவொரு வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
    தொடர்பிலக்கம்: தொலைபேசி/தொலைநகல்: 033-2222979.
04. 2024.07.08 ஆம் திகதியிலிருந்து 2024.07.29 ஆம் திகதியன்று வரையும் மு.ப 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் ஒவ்வொரு ஆவணத்திற்கும் மீளளிக்கப்படாத கட்டணமாக ஐந்தாயிரம்(5000 ரூபா) ரூபாவை செலுத்திய பின்னர், கம்பஹா, லக்சியனே மந்திரய, மாவட்ட செயலகம், 3 ஆம் மாடி, கணக்கிடல் பிரிவின் கணக்காளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், விலைமனுக்கோரல் ஆவணத்தின் முழுமையான தொகுதியொன்று கொள்வனவு செய்யப்படலாம்.
05. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதி'' என தயாரிக்கப்பட்டு 2024.07.30 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் தன்மையில் நேரடியாக ஒப்படைக்கப்படலாம் அல்லது பதிவுத் தபாலில் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, 3 ஆம் மாடி, (கணக்கிடல் பிரிவு), மாவட்ட செயலகம், லக்சியனே மந்திரய, கம்பஹா என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் உடனடியாகவே மேலேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
06. விலைமனுதாரரினால் சமர்ப்பிக்கப்படவுள்ள விலைமனுக்கள் 91 நாட்களுக்கு (2024 ஒக்ரோபர் 28 ஆம் திகதியன்று வரையும்) அல்லது விலைமனுக்களை பெற்றுக் கொள்வதற்காக நிர்ணயிக்கப்பட்ட திகதியிலிருந்து எந்தவொரு நீடிக்கப்பட்ட காலத்திற்கும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
07. அனைத்து விலைமனுதாரர்களும் இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் அங்கீகரிக்கப்பட்ட வங்கியிலிருந்து பெறப்பட்ட மீளளிக்கப்படும் பிணைத்தொகையாக 100,000 ரூபாவை விலைமனுவின் மூலப்பிரதியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
08. கம்பஹா, லக்சியனே மந்திரய, மாவட்ட செயலகம், 3 ஆம் மாடியிலுள்ள மாவட்ட செயலாளரின் மாநாட்டு மண்டபத்தில் 2024.07.23 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு விலைமனு முன்னோடிக்கூட்டமொன்று நடைபெறும்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**மாவட்ட செயலாளர்,**
**மாவட்ட செயலக அலுவலகம்,**
**லக்சியனே மந்திரய,**
**கம்பஹா.**
08.07.2024.

Daily News Classifieds, the Housewives' companion

## தென் மாகாண கல்வி அமைச்சு

### தென் மாகாண சபை பாடசாலைகளில் காணப்படும் சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல சித்திர ஆசிரியர் வெற்றிடங்களுக்காக பட்டதாரிகளைச் சேர்த்துக் கொள்ளல் – 2024

தென் மாகாண கல்வி அமைச்சின் கீழ் உள்ள பாடசாலைகளில் சிங்கள மற்றும் தமிழ் மொழிமூல சித்திர ஆசிரியர் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்காக ஆசிரியர் சேவை யாப்பின் பிரகாரம் இலங்கை ஆசிரியர் சேவைக்குச் சேர்த்துக் கொள்ளும் முகமாக பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேலதிக விபரங்கள் 222.edumin.sp.gov.lk இணையதளத்திற்கு பிரவேசித்து பெற்றுக் கொள்ளலாம்.

**ரஞ்சித் யாப்பா**
**செயலாளர்,**
**தென் மாகாண கல்வி அமைச்சு,**
**தக்ஷினபாய, லபுதுவ.**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## தேருநர் இடாப்பு மீளாய்வு

**தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்திற்கமைய 2024 (1) குறைநிரப்பு தேருநர் இடாப்பு அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவித்தல்.**

இந்த QR குறியீட்டைScan செய்து பதிவு விபரங்களைப் பார்வையிட முடியும். அல்லது ec.lk/vrd எமது இணையத்தளத்திற்கு பிரவேசிக்கவும்.

2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கதேருநர்களைப் பதிவுசெய்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப்பதிவு செய்தல் சட்டத்திற்கமைய 2024 பெப்ருவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2024 மே மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியினுள் ஒரு தினத்தில் 18 வயதை பூர்த்திசெய்யும் பதிவு செய்யப்பட்ட தேருநர்களின் பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன 2024(1) குறைநிரப்பு தேருநர் இடாப்பு 2024 ஜுலை மாதம் 08 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் இங்கே கீழுள்ள அட்டவணையின் Iஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் மாவட்டத்திற்காக அதன் IIஆம் நிரலின் நேரொத்தகுறிப்பில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள உதவிப் பதிவு அலுவலரால் அத்தாட்சிப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அதன் IIIஆம் நிரலின் நேரொத்தகுறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டத் தேர்தல்கள் அலுவலகத்தில் / அலுவலகங்களில் வழமையான அலுவலக நேரங்களில் பரீட்சித்துப் பார்க்கமுடியுமெனவும் தேருநர்களைப் பதிவுசெய்தல் சட்டத்தின் 20 அ (10) உப பிரிவின் கீழ் ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்தினதும் பதிவு அலுவலர் சார்பாக அறியத்தரப்படுகின்றது.

2024 ஜுலை மாதம் 08 ஆம் திகதி
**ராஜகிரிய தேர்தல்கள் செயலகத்தில்.**

**சமன் ஸ்ரீ ரத்னாயக்க**
**தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்**
**தேர்தல் ஆணைக்குழு**

**அட்டவணை**

| I ஆம் நிரல் தேர்தல் மாவட்டம் | II ஆம் நிரல் 2024(1) குறை நிரப்பு தேருநர் இடாப்பை அத்தாட்சிப்படுத்திய அலுவலர் | IIIஆம் நிரல் மாவட்டத் தேர்தல்கள் அலுவலகம் |
|---|---|---|
| 01. கொழும்பு | எம்.எம்.எஸ்.கே. பண்டாரமாபா | கொழும்பு |
| 02. கம்பஹா | டப்ளியூ.ஏ.ஆர். விக்கிரமசிங்க | கம்பஹா |
| 03. களுத்துறை | காலிந்திர ஜயவீர பெர்னாந்து | களுத்துறை |
| 04. கண்டி | எச்.டீ.என். சம்பத் பெர்னாந்து | கண்டி |
| 05. மாத்தளை | எச்.ஏ.ஈ.புஷ்பகுமார | மாத்தளை |
| 06. நுவரெலியா | கே.ஏ.எல்.எஸ்.கலுகம்பிட்டிய | நுவரெலியா |
| 07. காலி | டப்ளியூ.எச்.ஆர். விஜய குமார | காலி |
| 08. மாத்தறை | ரீ.டப்ளியூ. போஷிதாகௌமதி | மாத்தறை |
| 09. ஹம்பாந்தோட்டை | என். ரேகன் | ஹம்பாந்தோட்டை |
| 10. யாழ்ப்பாணம் | ஆர்.சீ. அமல்ராஜ் | யாழ்ப்பாணம், கிளிநொச்சி |
| 11. வன்னி | ஜே.ஜெனிட்டன் | மன்னார்,வவுனியா,முல்லைத்தீவு |
| 12. மட்டக்களப்பு | எம்.பி.எம். சுபியான் | மட்டக்களப்பு |
| 13. திகாமடுல்ல | கசுன் ஸ்ரீநாத் அத்தநாயக்க | அம்பாறை |
| 14. திருகோணமலை | ஆர்.சசீலன் | திருகோணமலை |
| 15. குருநாகல் | ஆர்.எம்.எச்.பி. ரத்னாயக்க | குருநாகல் |
| 16. புத்தளம் | எஸ்.எல்.ஆர். ஜயநாயக்க | புத்தளம் |
| 17. அநுராதபுரம் | கே. முகுந்தன் | அநுராதபுரம் |
| 18. பொலன்னறுவை | என்.பீ.பீ.ஜ.ஆர்.குணரத்ன | பொலன்னறுவை |
| 19. பதுளை | கே. காந்தீபன் | பதுளை |
| 20. மொனராகலை | என். ரேகன் | மொனராகலை |
| 21. இரத்தினபுரி | சுரங்க அம்பகஹதென்னெ | இரத்தினபுரி |
| 22. கேகாலை | சஜித் பீ. கஸ்துரிசிங்க | கேகாலை |

## பெறுகை அறிவித்தல்

### மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் கிழக்கு மாகாணம்

### நாய்களை மலடாக்கல் நிகழ்ச்சித்திட்டப் பெறுகை – 2024

கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் அம்பாறை, கல்முனை, மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை பிராந்தியங்களில் நாய்களை மலடாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தை செயற்படுத்துவதற்காக தகுதியும் தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.

| விலைமனு குறிப்பீட்டு இலக்கம் | பெறுகையின் தலைப்பு | நாய்களின் எண்ணிக்கை | விலை மனுப்பிணைத் தொகை | விலை மனுப்பிணையின் காலஎல்லை | விலைமனு செல்லும்படி யாகும் காலம் | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|---|---|---|
| EP/PD/Dog Ste/ Amp/2024 | அம்பாறை பிராந்தியத்திற்கான நாய்களைமலடாக்கல் | 606 | 39,000.00 | விலைமனுவை திறப்பதிலிருந்து 63 நாட்கள் | விலைமனுவை திறப்பதிலிருந்து 91 நாட்கள் | 3,500.00 |
| EP/PD/Dog Ste/ Kal/2024 | கல்முறை பிராந்தியத்திற்கான நாய்களைமலடாக்கல் | 303 | 20,000.00 | விலைமனுவை திறப்பதிலிருந்து 49 நாட்கள் | விலைமனுவை திறப்பதிலிருந்து 77 நாட்கள் | 2,500.00 |
| EP/PD/Dog Ste/ Batt/2024 | மட்டக்களப்பு பிராந்தியத்திற்கான நாய்களைமலடாக்கல் | 303 | 20,000.00 | விலைமனுவை திறப்பதிலிருந்து 49 நாட்கள் | விலைமனுவை திறப்பதிலிருந்து 77 நாட்கள் | 2,500.00 |
| EP/PD/Dog Ste/ Tri/2024 | திருகோணமலை பிராந்தியத்திற்கான நாய்களைமலடாக்கல் | 909 | 60,000.00 | விலைமனுவை திறப்பதிலிருந்து 63 நாட்கள் | விலைமனுவை திறப்பதிலிருந்து 91 நாட்கள் | 3,500.00 |

1 விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக் கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.

2. 2024.07.08ஆம் திகதியிலிருந்து 2029.07.29 ஆம் திகதி வரையும் அலுவலக நேரங்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் திருகோணமலை, கிழக்குமாகாண மாகாண சுகாதாரசேவைகள் திணைக்கள கணக்கிடல் கிளையில் ஒவ்வொரு அம்சத்திற்குமான மீளளிக்கப்படாத கட்டணத்ததைச் செலுத்திபெற்றுக் கொண்டபற்றுச் சீட்டுமற்றும் வியாபாரபதிவு சான்றிதழின் அத்தாட்சிப் படுத்தப்பட்ட பிரதியொன்றுடனும் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் மாகாணசுகாதார சேவைகள் திணைக்களகணக்கிடல் கிளையிலிருந்து ஆங்கிலத்திலுள்ள விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதிகளைபெற்றுக் கொள்ளலாம்.

3. இலங்கை மத்தியவங்கியினால் அனுமதிக்கப்பட்ட இலங்கையிலுள்ள வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட விலைமனுப் பிணையொன்று அல்லதுரொக்கப் பணத்தில் செலுத்திபெற்றுக் கொண்டபற்றுச்சீட்டொன்றைகிழக்குமாகாணமாகாணசுகாதாரசேவைகள் திணைக்களகணக்கிடல் கிளைக்கு எந்தவொருவேலை நாளிலும் பி.ப. 3 மணிக்கு முன்னராக சமர்ப்பிப்பதன் மூலம் விலைமனுப் பிணையொன்றை ஒவ்வொரு விலைமனுவிற்கும் இணைக்கலாம். விலைமனுப்பிணையின் பெறமதிமற்றும் விலைமனுப்பிணையின் செல்லுபடியாகும் காலமானதுமேலேயுள்ளஅட்டவணையில் வழங்கப்பட்டுள்ளன.

4. ஒவ்வொரு நிகழ்ச்சித் திட்டத்திற்கு தனித்தனியான விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனுவை சமர்ப்பிக்கும் தபாலுறையின் இடது பக்க மேல்மூலையில் பெறுகையின் தலைப்புமற்றும் விலைமனுகுறிப்பீட்டு இலக்கம் ஆகியனதெளிவாககுறிப்பிடப்படல் வேண்டும்.

5. 2024.07.30 ஆம் திகதியன்றுமு.ப. 10.30 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் தலைவர், திணைக்களபெறுகைக் குழு, மாகாணசுகாதார சேவைகள் திணைக்களம், 120 நீதிமன்றவீதி, திருகோணமலை என்றமுகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் அல்லது பெறுகைஅலகில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை அவைகளை மூடியபின்னர் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாக வேதிறக்கப்படும்.

6. ஆர்வமுள்ள விலைமனுதாரர் விலைமனுக்கோரல் ஆவணங்களை கையேற்பதற்கு முன்னராகவிரும்பின் அவைகளை இலவசமாக பரீட்சிப்பதுடன் திருகோணமலை, மாகாண சுகாதாரசேவைகள் திணைக்கள பிரதான கணக்காளரிடமிருந்து மேலதிகதகவலைப் பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 026-2227438)

7. எந்தவொரு காரணங்களையும் முன்வைக்காமல் எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கும் அல்லது முழு பெறுகையையும் இரத்துச் செய்வதற்கும் விலைமனுவொன்றின் எந்தவொரு பாகத்தையும் ஏற்றுக் கொள்வதற்குமான உரிமையை மாகாண சுகாதாரசேவைகள் திணைக்களபெறுகைக் குழுவானதுகொண்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்களபெறுகைக் குழு,**
**மாகாணசுகாதாரசேவைகள் திணைக்களம்,**
**கிழக்குமாகாணம்.**

### இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## கி.மீ. 1,500 வீதி செயற்திட்டங்களுக்கான விலைமனுக்கோரல் (IFB) (மேல் மாகாணம்)

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்தத்தின் பெயர் | பொறியியலாளர் களின் மதிப்பீட்டுத் தொகை (மேலதிக செலவுகளுடன்) ரூ.மில்லியன்) | CIDA தரம் | மனுப் பாதுகாப்பு பிணைத் தொகை (ரூ) | ஒப்பந்த காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|
| RDA/SP/1500KM/WP/ KAL/219 | ஊருகல வடக்கு சுற்றுவட்டார வீதியை மேம்படுத்தல் (2 Km) | 26.38 | C5 மற்றும் C4 | 350,000.00 | 90 |

மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தங்களுக்காக தேசிய மனுக்கோரல் போட்டி முறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றது. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2024.07.05 ஆம் திகதி முதல் 2024.07.25 ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

SELACINE

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### மாவட்டச் செயலகம் - அனுராதபுரம்

### அனுராதபுரம் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வாகனம் செலுத்துவதற்கு பயிற்சியளிக்கும் இடப்பரப்பின் திருத்தவேலைகள்

அனுராதபுரம் மாவட்டச் செயலாளரின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் தலைவரினால் அனுராதபுரம் மாவட்டத்தில் அனுராதபுரம் கொரக்கவெவ பிரதேசத்தில் பின்வரும் நிர்மாணங்களுக்கு இயைபாக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பெயர் | மதிப்பீட்டுச் செலவு ரூபா மில்லியன் | தேவையான CIDA பதிவு - கட்டிடங்கள் | ஒப்பந்தக் காலம் (நாட்கள்) | விலைக் கோரல் பிணை முறி (இல. ரூபா) செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|
| அனுராதபுரம் மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் வாகனம் செலுத்துவதற்கு பயிற்சியளிக்கும் இடப்பரப்பின் திருத்தவேலைகள் | 14.53 | C5 அல்லது C6 | 112 | 200,000.00 (2024-11-11ஆம் திகதி வரை) |

02. தேசிய போட்டிரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக விலைக்கோரல்கள் செயற்படுத்தப்படும். இந்த பெறுகையின் மொத்த மதிப்பீட்டுச் செலவு 50 மில்லியன் ரூபாவிற்குக் குறைவாக இருப்பதனால் 04/2016(II)ஆம் இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை ஏற்புடையதாகும்.

03. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமையைப் பெற்றுக்கொள்வதற்குத் தேவையான தகைமை மற்றும் தேவைப்பாடுகள் விலைமனு ஆவணங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

04. இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை அனுராதபுரம் மாவட்டச் செயலக பிரதான கணக்காளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி: 071-8345952)

05. மீளளிக்கப்படாத 5000.00 ரூபா கட்டணத்தைச் செலுத்தியதன் பின் 2024-07-08ஆம் திகதி முதல் 2024-07-29ஆம் திகதி வரை 09.00 மணித்தியாலம் முதல் 15.00 மணித்தியாலம் வரைக்கிடையில் அனுராதபுரம் மாவட்டச் செயலகத்தின் மாவட்டச் செயலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மாத்திரம் மேற்கொள்ள வேண்டும்.

06. விலைமனுக்களை 2024-07-30ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் ''மாவட்டச் செயலாளர், மாவட்டச் செயலகம், அனுராதபுரம்'' எனும் முகவரிக்குக் கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்தவுடன் அவ்வேளையில் சமுகம்தருவதற்கு ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

07. விலைமனுக்களுடன் பின்வரும் பெறுமதி மற்றும் செல்லுபடிக் காலம் வரையில் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்யப்பட்ட வர்த்தக வங்கி அல்லது நிர்மாண பாதுகாப்பு நிதியத்திலிருந்து பெற்றுக்கொண்ட விலைக்கோரல் பிணை முறியொன்றை இணைத்து அனுப்புதல் வேண்டும்.

08. பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதி மற்றும் உறுதியான தீர்மானமாகும்.

**ஜே.எம்.ஜே.கே. ஜயசுந்தர,**
**தலைவர், மாவட்ட பெறுகைக் குழு,**
**மாவட்டச் செயலாளர்/ அரச அதிபர்,**
**மாவட்டச் செயலகம், அனுராதபுரம்.**

2024-07-08.

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு அரசாங்கம்
### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

### களுத்துறை பிரதான பொறியியலாளர் பிராந்தியத்திற்கு அஸ்பால்ட் மற்றும் கொன்கிறீட் (தரம் 30) கொன்கிறீட் (தரம் 25) மற்றும் கொன்கிறீட் நடைபாதை புளொக்குகள் (தரம் 25) ஆகியவற்றை வழங்கல்

| ஒப்பந்த இலக்கம் | வீதி | வேலையின் விளக்கம் |
|---|---|---|
| RDA/SP/1500KM/WP/DL/227 | சோமரத்ன மாவத்தை மற்றும் பலீல் ஹாஜ்ஜியார் மாவத்தையின் புனர்நிர்மாணம் | களுத்துறை நிபொ பிரிவிற்கு 01 ஆம் இன அஸ்பால்ட் வழங்கல் |
| RDA/SP/1500KM/WP/DL/228 | மாலேவன கணேஸ்வர நாஹிமி மாவத்தையின் புனர்நிர்மாணம் | களுத்துறை நிபொ பிரிவிற்கு 01 ஆம் இன அஸ்பால்ட் வழங்கல் |
| RDA/SP/1500KM/WP/DL/229 | வீரகல மாத்ரு சயன்யாயட்ட யாண மார்கவின் புனர்நிர்மாணம் | களுத்துறை நிபொ பிரிவிற்கு 01 ஆம் இன அஸ்பால்ட் வழங்கல் |
| RDA/SP/1500KM/WP/DL/230 | குடாவஸ்கடுவ வடக்கு லெக்கோவிலிருந்து சமகிபுர எல பால வீதி வரையுமான பிரதான வீதியின் புனர்நிர்மாணம் | களுத்துறை நிபொ பிரிவிற்கு 01 ஆம் இன அஸ்பால்ட் வழங்கல் |
| RDA/SP/1500KM/WP/DL/243 | வீதகம அட்டலுகம ஹர்ஹா கல்துடே வரையுமான வீதியின் புனர்நிர்மாணம் | களுத்துறை நிபொ பிரிவிற்கு 01 ஆம் இன அஸ்பால்ட் வழங்கல் |
| RDA/SP/1500KM/WP/DL/231 | ஹொரண வேவல கங்கொட வீதியின் புனர்நிர்மாணம் | ஹொரண நிபொ பிரிவிற்கு 01 ஆம் இன அஸ்பால்ட் வழங்கல் |
| RDA/SP/1500KM/WP/DL/232 | திப்பொட்டாவிற்கான பராகொட வீதியின் புனர்நிர்மாணம் | ஹொரண நிபொ பிரிவிற்கு 01 ஆம் இன அஸ்பால்ட் வழங்கல் |
| RDA/SP/1500KM/WP/DL/233 | வெலிப்பன்ன மேற்கு ரண்முத்து உயண வீதியின் புனர்நிர்மாணம் | ஹொரண நிபொ பிரிவிற்கு 01 ஆம் இன அஸ்பால்ட் வழங்கல் |
| RDA/SP/1500KM/WP/DL/234 | யட்டபாத்த 6B மாவத்தையின் புனர்நிர்மாணம் | அகலவத்த நிபொ பிரிவிற்கு 01 ஆம் இன அஸ்பால்ட் வழங்கல் |
| RDA/SP/1500KM/WP/DL/235 | மாவல ஜயசங்க மாவத்தையின் புனர்நிர்மாணம் | களுத்துறை நிபொ பிரிவிற்கு 30 ஆம் தர கொன்கிறீட்டை வழங்கல் |
| RDA/SP/1500KM/WP/DL/236 | குடுநேரிய சமகி மாவத்தையின் புனர்நிர்மாணம் | அகலவத்த நிபொ பிரிவிற்கு 25 ஆம் தர கொன்கிறீட் நடைபாதை புளொக்குகளை வழங்கல் |
| RDA/SP/1500KM/WP/DL/240 | குடுநேரிய சமகி மாவத்தையின் புனர்நிர்மாணம் | அகலவத்த நிபொ பிரிவிற்கு 25 ஆம் தர கொன்கிறீட்டை வழங்கல் |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் களுத்துறை பிரதான பொறியியலாளர் பிராந்தியத்திற்கு வீதி பராமரிப்பிற்காக அஸ்பால்ட் மற்றும் கொன்கிறீட் (தரம் 30), கொன்கிறீட் (தரம் 25), கொன்கிறீட் நடைபாதை புளொக்குகளை (தரம் 25) ஆகியவற்றை வழங்குவதற்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2024 ஜுலை 8 ஆம் திகதியிலிருந்து ஜுலை 25 ஆம் திகதி வரையும் களுத்துறை பிரதான பொறியியலாளரின் அலுவலகம், வீஅஅ /நெடுஞ்சாலைகள் அமைச்சின் www.rda.gov.lk & mohsl.gov.lk ஆகிய இணைய பக்கங்களை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**பிரதான பொறியியலாளரின் அலுவலகம்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை, களுத்துறை.**
**தொலைபேசி: 0342222500, 0342222900.**

## 2024 கண்டி எசல பெரஹரவை கண்டு களிப்பதற்கான கட்டணங்கள் அல்லது அறவிடலை பெற்றுக் கொண்டு ஆசனங்களை வழங்குவதற்கு 1980 இல. 34 கண்டி எசல பெரஹர பொறுப்பு சட்டத்தின் பிரகாரம் விடுக்கும் அறிவித்தல்

என்னால் வழங்கப்படும் அனுமதிப்பத்திரம் மூலம் அன்றி எவராலும் எசல பெரஹரவை கண்டு களிப்பதற்கான கட்டணம் அல்லது அறவிடல்களைப் பெற்றுக் கொண்டு ஆசனங்களை வழங்குதல் மேற்படி சட்டத்தின் 19ஆம் பிரிவின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது. குறித்த அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்ளாது அனுமதியின்றி ஆசனங்களை வழங்குதல் இச் சட்டத்தின் 20ம் பிரிவின் பிரகாரம் நீதவான் நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கக் கூடிய குற்றமாகும்.

02. 2024 கண்டி எசல பெரஹரவை கண்டு களிப்பதற்காக குறித்த அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக் கொண்டு ஆரசனங்களை வழங்குவதற்கு எதிர்பார்ப்போர் அதற்காக கண்டி பிரதேச செயலகத்தினால் விநியோகிக்கப்படும் விண்ணப்பம் ஒன்றின் மூலம் குறித்த தினத்திற்கு முன்பு அனுமதிப்பத்திரத்தைக் கோருதல் வேண்டும்.

03. அனுமதிப்பத்திரத்துடன் 2024ம் ஆண்டு எசல பெரஹரவைக் கண்டு களிப்பதற்கு ஆசனங்களை வழங்குபவர்களிடமிருந்து கீழ்க்காணும் கட்டணங்களை அறவிடுவதற்கு எசல பெரஹர பொறுப்பினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கும்பல் பெரஹர நடைபெறும் ஐந்து (05) தினத்திற்குள் ஒரு தினத்திற்கு ஒரு ஆசனத்திற்காக ரூ. 600/- வீதமும், ரந்தோலி பெரஹர நடைபெறும் முதல் மூன்று (03) நாட்களிலும் ஒரு நாளைக்கு ஒரு ஆசனத்திற்கு ரூ. 1400/- வீதமும், ரந்தோலி பெரஹர நடைபெறும் இறுதி இரு (02) தினங்களிலும் ஒரு தினத்திற்கு ஒரு ஆசனத்திற்கு ரூ. 1700/- வீதமும் அறவிடப்படும்.

04. அவ்வாறே அனுமதிப்பத்திரம் இன்றி ஏதேனும் இடத்தில் ஆசனங்களை அமைப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பின் அவ் ஆசனங்களை அகற்றுவதற்கு அல்லது பொறுப்பின் தீர்மானத்தின் படி தண்டத் தொகையை அறவிட நேருவதால் இரு தரப்பினரும் சிரமத்திற்கு உள்ளாகாதவாறு செயற்படுதல் பொருத்தமானது என உங்களது கவனத்திற்கு கொண்டுவருகிறேன்.

**யூ.ஜே.எம்.எஸ்.எஸ்.பீ. ஜயசிங்ஹ,**
**பிரதேச செயலாளர்,**
**கண்டி மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி,**
**கண்டி எசல பெரஹர பொறுப்பு.**

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### மாவட்டச் செயலகம் - பதுளை

### பதுளை மாவட்டச் செயலகத்தில் கூரை மேல் பொருத்தும் 120kW GRID-TIED சூரிய சக்தி மின்பிறப்பாக்கி முறைமையொன்றை வழங்குதல், நிறுவுதல், பரீட்சித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் பராமரித்தல்

**கேள்வி குறிப்பீட்டிலக்கம்: BD/FMG/PROC/2024/05**

1. விலைமனு ஆவணங்களில் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் மேற்கூறிய கேள்விக்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பதுளை - மாவட்டச் செயலாளரின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் அழைக்கின்றார்.
2. முறைமையை நிறுவுதல், பரீட்சித்தல் மற்றும் செயற்படுத்தலுக்கான பணியை நிறைவு செய்வதற்கான காலம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து 75 நாட்களாகும்.
3. தேசிய போட்டிரீதியிலான நடைமுறையில் விலைக்கோரல்கள் இடம்பெறும்.
4. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகுதியாக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**(அ) அனுபவத் தேவைப்பாடுகள்:**

கடந்த 05 வருடங்களில் (கைத்தொழில் சுற்றாடலில் குறைந்தபட்சம் 80kW கொள்ளளவுள்ள Solar PV முறைமையை வழங்குதல் மற்றும் நிறுவுதல்) சிக்கல் தன்மையான மற்றும் இதனையொத்த தன்மையான குறைந்தபட்சம் 03 திட்டங்களை பிரதான ஒப்பந்தக்காரராக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். (ஒரு திட்டத்தின் குறைந்தபட்ச பெறுமதி ரூபா 10,000,000 (பத்து இலட்சம்) ரூபாவாகவிருத்தல் வேண்டும்)

**(ஆ) SLSEA பதிவு**

விலைமனுதாரர் இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபையில் (SLSEA) கூரைக்கு மேலான சூரிய சக்தி சேவை வழங்குநராக பதிவு செய்திருத்தல் வேண்டும்.

மற்றும்

விலைமனு ஆவணத்தில் விபரிக்கப்பட்டுள்ளதன் பிரகாரம் ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்கான தகைமைத் தேவைப்பாடுகள்.

5. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு விரும்பும் எந்தவொரு தரப்பினரும், ஐந்து மில்லியன் (5,000,000.00 இல. ரூபா) ரூபாவை விஞ்சும் ஒவ்வொரு பொது ஒப்பந்தப் பெறுமதிக்கும் 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தச் சட்டத்தின் பிரகாரம் www.dre.gov.lk (e-ROC) கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் தம்மைப் பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.

(அ) விலைமனு / கேள்வி முடிவுறுத்தப்படும் நாளுக்கு முன் ஒரு முகவர், உப முகவர், பிரதிநிதி அல்லது பெயர் குறிப்பிடப்பட்டவர் பதிவு செய்துகொண்டிருத்தல் வேண்டும்.

(ஆ) கேள்வி விண்ணப்பதாரரும் மற்றும் கேள்விதாரரும் ஒரே தரப்பினராக இருந்தால் கேள்வி கையளிக்கப்படுவதற்கு முன் பதிவு செய்துகொண்டிருத்தல் வேண்டும்.

6. ஒரு ஆவணத்திற்கு ஐயாயிரம் இலங்கை ரூபாவை (5,000.00 இல. ரூபா) மீளளிக்கப்படாத கட்டணமாகச் செலுத்தியதன் பின் 2024-07-29ஆம் திகதி வரையான வேலை நாட்களில் 0900 மணித்தியாலம் மற்றும் 1400 மணித்தியாலங்களுக்கிடையில் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து கீழே கையொப்பமிடப்பட்டவரிடமிருந்து விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களைக் கொள்வனவு செய்வதற்கு முன் அவற்றைப் பரீட்சித்துப் பார்க்குமாறு விலைமனுதாரர்கள் வேண்டப்படுகின்றனர் என்பதுடன் ஒரு முறை கொள்வனவு செய்யப்பட்ட, விலைமனு ஆவணக் கட்டணம் எக்காரணம் கொண்டும் மீளளிக்கப்பட மாட்டாது.
7. பெறுகை செயற்பாட்டிலிருந்து பெறப்பட்ட விலைமனு ஆவணங்களிலேயே விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை பதிவுத் தபால் மூலம் / கூரியர் மூலம் 2024-07-29ஆம் திகதி 1400 மணித்தியாலம் அல்லது அதற்கு முன் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, மாவட்டச் செயலகம், பதுளை (கணக்கிடல் பிரிவு, 03ஆம் தளம்) எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும்.
8. தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் பதுளை, மாவட்டச் செயலகம், 5ஆம் தளம், மாவட்டச் செயலாளரின் கூட்ட அறையில் 2024-07-29ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும்.
9. விலைமனுக்கள் 2024-11-30ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
10. சகல விலைமனுக்களுடனும் 180,000.00 (ஒரு இலட்சத்து எண்பதாயிரம் ரூபா மட்டும்) ரூபாவிற்கான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைக்கோரல் பிணை முறியானது 2024-12-30ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.
11. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று பதுளை, மாவட்டச் செயலகம், அரச அதிபர் கூட்ட அறையில் 2024-07-22ஆம் திகதி 10.00 மணித்தியாலத்தில் இடம்பெறும்.

மேற்கூறிய முகவரியானது:

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**மாவட்டச் செயலகம்,**
**பதுளை.**

it's what you want
www.adz.lk

## இலங்கை இராணுவம்

## விலைமனுக்கோரல்

### விறகுகளை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கோரல் - 2025

1. **2025.01.01 ஆந் திகதி** முதல் **2025.12.31 ஆந் திகதி** வரையான காலப்பகுதிக்குள் இலங்கை இராணுவத்தின் தேவைக்காக கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு விறகுகளை வழங்குவதற்காக கோட்டை, ஸ்ரீ ஜயவர்தனபுரவில் அமைந்துள்ள இலங்கை இராணுவ தலைமையகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| அனுராதபுரம் | துணுக்காய் | மாதுருஓயா |
| அம்பேபுஸ்ஸ | திருக்கோணமலை | மாங்குளம் |
| அம்பாறை | நாவுல | மிருசுவில் |
| இயகச்சி | பதவி பராக்கிரமபுர | முல்லைத்தீவு |
| எம்பிலிபிட்டிய | பலாலி | கோப்பாய் |
| ஒட்டுச்சுட்டான் | புத்தளம் | பலட்டுபான |
| காவந்திஸ்ஸபுர | புதுகுடியிருப்பு | வவுனியா |
| கிளிநொச்சி | பூநகரின் | வீரவில |
| கொக்எலிய | புனானி | வாழைச்சேனை |
| கேகாலை | பருத்தித்துறை | நாகரவெவ |
| கோம்பகஸ் ஹந்திய | மன்னார் | ஹிங்குராங்கொடை |

2. மனு ஆவணங்களை வழங்குதல், மனுக்களை சமர்ப்பித்தல், மனு திறக்கும் திகதி மற்றும் நேரம் ஆகியவை பின்வருமாறும் மற்றும் மனுக்கள் திறக்கப்படும் சந்தரப்பத்தில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் பங்கேற்க முடியும்.

| | | |
|---|---|---|
| மனு ஆவணங்கள் வழங்குவதற்கான தொடக்கம் | - | 2024.07.10 |
| மனு ஆவணங்கள் வழங்குவதற்கான இறுதி திகதி மற்றும் நேரம் | - | 2024.08.07, பி.ப.3.00 வரை |
| மனு சமர்ப்பிப்பின் இறுதி திகதி மற்றும் நேரம் | - | 2024.08.08 மு.ப.11.00 |
| மனு திறக்கும் திகதி, நேரம் மற்றும் இடம் | - | 2024.08.08 மு.ப.11.00<br>இலங்கை இராணுவத் தலைமையகம்,<br>இராணுவத் தலைமையக வாகனத் தரிப்பிடம்,<br>ஸ்ரீ ஜயவர்தனபுர,<br>கோட்டை. |

3. விலைமனு விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு முகாமிற்கும் வேறு வேறாக மீளளிக்கப்படாத **ரூ.2,500.00** பணத்தினை கோட்டை, ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகத்தின் பணிப்பாளர்-(நிதி)க்கு வைப்பிலிடல் வேண்டும். (காசோலை ஏற்றுக்கொள்ளப்படாது) வைப்பிலிடப்பட்ட பணத்திற்காக வழங்கப்பட்ட ரசீதின் பிரதியை, கோட்டை, ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவ தலைமையக வழங்கல் மற்றும் போக்குவரத்து பணிப்பகத்தில் சமர்ப்பித்து விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

4. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"விறகுகளை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கோரல் - 2025"** எனக்குறிப்பிட்டு **தலைவர், இராணுவ கொள்முதல் குழு, உபகரணங்கள் பணிப்பாளர் நாயக கிளை, இராணுவத் தலைமையகம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டை.** எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அம்முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் நேரடியாக வருகைத்தந்து இடலாம்.

5. விண்ணப்பதாரர்கள் விலைமனுவுடன் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

அ. வியாபார பதிவுச் சான்றிதழ் (உறுதிபடுத்தப்பட்ட பிரதி)

ஆ. மீளளிக்கப்படாத கட்டணத்தை வைப்பிலிடப்பட்ட இரசீதின் பிரதி

இ. கடந்த மூன்று ஆண்டுகளுக்கான வருமான வரி கணக்காய்வு அறிக்கைகள்

ஈ. விண்ணப்பதாரர் வைத்திருக்கும் வங்கி கணக்கு தொடர்பான வங்கி அறிக்கை.

உ. வழங்கப்பட்ட சேவையை நிரூபிக்க ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஊ. சொத்துக்கள் மற்றும் நிதிகளின் ஸ்தீரத்தன்மையை உறுதிப்படுத்த மாகாணத்தின் மாவட்ட செயலாளர் / பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட படிவங்களால் (பொது 170) ஒவ்வொரு முகாமுக்குமான **ரூ.200,000.00** க்கு குறையாத சொத்து சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இந்த சான்றிதழ் விலைமனு ஏற்றுக்கொள்ளும் கடைசி திகதிக்கு முன் **30 நாட்களுக்குள்** பெறப்பட்டதாக வேண்டும்.

6. விண்ணப்பதாரரினால் விலைமனு விண்ணப்பங்களை கோரும்போது, அந்த நபர்களின் விபரங்கள் விண்ணப்பிக்கும் இடங்களில் குறிப்பிடப்படல் வேண்டும்.

7. உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். எந்தவொரு விலைமனுப்பத்திரத்தையும் ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவருக்கு உரித்தானது

8. ஆர்வமுள்ள மனுதாரர்கள் இலங்கை இராணுவத் தலைமையகத்தின் வழங்கல் மற்றும் போக்குவரத்து பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும், மேலும் தொடர்புடைய மனு ஆவணங்களை கீழே உள்ள பந்தி 09 இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் **2024.07.10** முதல் **2024.08.07** வரை **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00** வரை வார நாட்களில் இலவசமாக பரிசோதிக்கலாம்.

9. மேலே குறிப்பிட்டுள்ள முகவரி ஆவது

| | | |
|---|---|---|
| **கவனத்திற்கு** | : | **பணிப்பாளர், வழங்கல் மற்றும் போக்குவரத்து** |
| **முகவரி** | : | **இலங்கை இராணுவத் தளபதி,<br>இலங்கை இராணுவத் தலைமையகம்,<br>ஸ்ரீ ஜயவர்தனபுர,<br>கோட்டை.** |
| **தொலைபேசி** | : | **011-2302568, 011-2302569** |
| **மின்னஞ்சல்** | : | **dtesandt@army.lk /dtesandt0@gmail.com** |

இராணுவத் தளபதி,
**இலங்கை இராணுவ தலைமையகம்**
ஸ்ரீ ஜயவர்தனபுர, கோட்டை.

SELACINE

## கேள்வி கோரல் அழைப்பு

### மாவட்ட செயலகம், நுவரெலியா

பதிவு செய்யப்பட்ட விளையாட்டு சமாஜங்களுக்கு விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்தல் சார்பாக கீழ்க் காணும் விளையாட்டுப் பொருட்களை பெறுகை மேற்கொள்வதற்காக தேசிய போட்டி கேள்வி முறைமையை உபயோகித்து தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் பெறுகைக் குழுவின் தலைவரால் கோரப்படுகின்றன.

| உருப்படி | மீளளிக்கப் படாத கேள்வி வைப்பு ரூ. | கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப் படும் கால எல்லை மற்றும் இடம் | கேள்விப் பிணை (ரூபா) மற்றும் செல்லுபடியாகும் கால எல்லை | கேள்வி ஆவணம் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி | கேள்விக்கு முன்னரான கூட்டம் நடைபெறும் தினம் மற்றும் நேரம் இடம் மா. செயலகத்தின் ஆச்சரிய மண்டபம் |
|---|---|---|---|---|---|
| வொலிபோல் தொகுதிகள் - 143 | 3000.00 | 2024.07.08 முதல் 2024.07.22 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மாவட்ட செயலக கணக்குப் பிரிவில் இருந்து | ரூ. 213,060.00 2024.09.05 | 2024.07.23 | 2024.07.16 மு.ப. 10.00 |
| மென்பந்து கிரிக்கெட் தொகுதிகள் - 36 | 3000.00 | | ரூ. 15,480.00 2024.09.05 | | |
| காற்பந்து தொகுதிகள் - 22 | 3000.00 | | ரூ. 347,600.00 2204.09.05 | | |
| உள்ளக விளையாட்டு கரம் தொகுதிகள் -03 | 300.00 | | ரூ. 1,800.00 2204.09.05 | | |

பொறியிடப்பட்ட கேள்விகள் 2024.07.23 மு.ப. 11.00 இற்கு முன்பு தலைவர், பெறுகைக் குழு. மாவட்ட செயலகம், நுவரெலியா என்ற முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அல்லது கேள்விதாரர்/ அவரது பிரதிநிதியொருவரால் அல்லது கையோடு கொண்டுவந்து மாவட்ட செயலகத்தின் முதலாம் மாடியில் செயலாளர் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுவதற்கு அல்லது கிடைக்கச் செய்தல் வேண்டும்.

கேள்விப் பத்திரங்கள் உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 'பதிவு செய்த விளையாட்டு சமாஜங்களுக்கான விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்தல் சார்பாக கேள்வி கோரல்' என்று உருப்படியை தெளிவாகக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். கேள்விதாரர்களுக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு கேள்வி திறக்கப்படும் வேளைக்காக சமுகமளிக்கலாம் நுவரெலியா மாவட்ட செயலகத்தின் முதலாம் மாடியில் செயலாளர் பிரிவில் 2024.07.23 மு.ப. 11.15 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். குறித்த தினம் மு.ப. 11.00 இன் பின் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்விக்கான இறுதித் தீர்மானம் பெறுகைக் குழுவிற்கு உரியது.

(தொடர்புகள் கணக்குப் பிரிவு 052-2222233/36)

**தலைவர்,**
**மாவட்ட செயலக பெறுகைக் குழு.**
**மாவட்ட செயலகம், நுவரெலியா**

Sunday Observer adz it's what you want
தினகரன் வாரமஞ்சரி

Hand over your Classified Advertisements to Our nearest Branch Office

Promotional Rates for a Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

Anuradhapura - TEL : 025 22 22 370 FAX : 025 22 35 411 / Kandy - TEL : 081 22 34 200 FAX : 081 22 38 910
Kataragama - TEL : 047 22 35 291 FAX : 047 22 35 291 / Maradana - TEL : 011 2 429 336 FAX : 011 2 429 335
Matara - TEL : 041 22 35 412 FAX : 041 22 29 728 / Nugegoda - TEL : 011 2 828 114 FAX : 011 4 300 860 / Jaffna - TEL : 021 2225361 FAX : 021 22 25 361

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை/ஆட்சி உரிமையை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணி இருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவரான காணியெடுத்தல் சட்டத்தின் ஏழாம் பிரிவின் (i) உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**காணியின் விபரம் :**

மேல் மாகாணத்தில் களுத்துறை மாவட்டத்தில் மத்துகம பிரதேசிய செயலாளர் பிரிவில் மத்துகம கிராமத்தில் அமையப்பெற்ற நில அளவையாளர் மூலம் 2023.12.19ஆம் தேதி அளந்து ஒழுங்கமைக்கப்பட்ட க.சி.530518 உடைய வரைபடத்தின் இலக்கம் 1,2 என குறிப்பிடப்படும் காணித் துண்டு.

மேலதிக தகவல்களுக்கு இல. 2381/52 மற்றும் 2024.04.27 திகதியுடைய சிறப்பு அரசாங்க வர்த்தமானியை பார்வையிடும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

2024.06.27ம் திகதி

**எல்.கே. மதூஷ சங்கல்ப**
**பிரதேசிய செயலாளர்**
**மத்துகம**

**மத்துகம பிரதேசிய செயலாளர் காரியாலயத்தில்**

## காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7ம் பிரிவின் கீழ் அறிவித்தல்

ஒரு பகிரங்க தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை/ஆட்சி உரிமையை எடுத்துக்கொள்ள அரசாட்சியாளர் எண்ணி இருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவறான காணியெடுத்தல் சட்டத்தின் ஏழாம் பிரிவின் (i) உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**காணியின் விபரம் :-**

மேல் மாகாணத்தில் களுத்துறை மாவட்டத்தில் மத்துகம பிரதேசிய செயலாளர் பிரிவில் மத்துகம கிராமத்தில் அமையப்பெற்ற நில அளவையாளர் மூலம் 2023.12.19ஆம் தேதி அளந்து ஒழுங்கமைக்கப்பட்ட க.சி.530518 உடைய வரைபடத்தின் காணித் துண்டு இலக்கம் 1 என குறிப்பிடப்பட்டுள்ள மொத்த அளவில் காணித் துண்டு 1 ஆகும்.

மேலதிக தகவல்களுக்கு இல. 2381/52 மற்றும் 2024.04.27 திகதியுடைய சிறப்பு அரசாங்க வர்த்தமானியை பார்வையிடும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

2024. 06 மாதம் 27ம் திகதி

**எல்.கே. மதூஷ சங்கல்ப**
**பிரதேசிய செயலாளர்**
**மத்துகம**

**மத்துகம பிரதேசிய செயலாளர் காரியாலயத்தில்**

ஜோன் வில்சன் பார்ட்னர்ஸ்
சட்டத்தரணி மற்றும் பிரசித்த நொத்தாரிசு
இல. 365, டாம் வீதி,
கொழும்பு 12

**விண்ணப்பம் பற்றிய அறிவித்தல்**
**கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்**

இந்த விண்ணப்பமானது கொழும்பு 02, யூனியன் பிளேஸ், ஹில்டன் கொழும்பு ரெஸிடென்சீஸ், இல. 2501 எனும் முகவரில் குடியிருந்து காலஞ்சென்ற **மைக்கேல் சார்ளஸ் தொம்சன்** என்பவரின் இறுதி விருப்பாவணத்தினை மீள்முத்திரையிடுவதற்கான விண்ணப்பம் தொடர்பாக,

(காலஞ்சென்றவர்)

வழக்கு இல : DTS/174/2024
தன்மை : இறுதி விருப்பாவணம்
நடைமுறை : பொது
பெறுமதி : ரூ.7,135,204.59/-

மற்றும்
இந்த விண்ணப்பமானது வெளிநாட்டு ப்ரோபேட் ஆவணத்தினை மீள் முத்திரையிடுவதற்கான குடியியல் சட்டக்கோவையின் பிரிவு XXXVIII B 554 U இன் கீழ் வழங்கப்படும் விண்ணப்பம் தொடர்பாக.

வட அயர்லாந்து, BT9 6DP, பெல்.ஃ.பாஸ்ட், மெலோன் வீதி, வெலிங்க்டன் பார்க், இல. 51 எனும் முகவரியில் வசிக்கும் 51 **ஜேம்ஸ் பெர்னாட் கென்னடி** அவர்களின் அற்றோனித்தத்துவக்காரர்கள் பொரலஸ்கமுவ, அம்பிலாவத்த, கடுவாவல மாவத்தை, இல. 36/1, எனும் முகவரியில் வசிக்கும் தே.அ.அ.இல. 905304119V கொண்ட பெனாசிர் சாஹ்ரா ஹசன் மற்றும் பானந்துரை, கெசெல்வத்த, சென்ட் ஆன்ஸ் வீதி, இல.87/5 எனும் முகவரியில் வசிக்கும் தே.அ.அ.இல. 948370697V அன்ஜலின் வாய்ஸ், கொண்ட

(மனுதாரர்கள்)

2024 ஆம் ஆண்டு ஜூலை 02ஆம் திகதி, கொழும்பில்

காலஞ்சென்ற அமரர் **மைக்கேல் சார்ள்ஸ் தொம்சன்** என்பவரின் இறுதி விருப்பாவணம் தொடர்பாக ஐக்கிய இராச்சியம், ஹார்லோ, குடும்ப பிரிவின் பிரதான மையம், இங்கிலாந்து மற்றும் வேல்ஸின் சட்ட மேல் நீதிமன்றத்தினால் 2023 ஜூலை 07 ஆம் திகதி (2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 21 ஆம் திகதி திருத்தப்பட்டு மீள வழங்கப்பட்ட) வட அயர்லாந்து, BT9 6DP, பெல்.ஃ.பாஸ்ட், மெலோன் வீதி, வெலிங்க்டன் பார்க், இல. 51 எனும் முகவரியில் வசிக்கும் 51 **ஜேம்ஸ் பெர்னாட் கென்னடி** அவர்களுக்கு சார்பாக வழங்கப்பட்ட வெளிநாட்டு ப்ரோபேட் ஆவணத்தினை முத்திரையிடுவதற்கான மேற்கொள்ளப்படும் விண்ணப்பத்தினை பிரசுரத்திலிருந்த 28 நாட்கள் முடிவடைந்த பின்னர் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் குடியியல் நடைமுறைச் நடபடிமுறைக்கோவையின் அத்தியாயம் XXXVIII B 554 U இன் கீழ் விண்ணப்பிக்கப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஜோன் வில்சன் பார்ட்னர்ஸ்
மனுதாரரின் பதிவுசெய்யப்பட்ட சட்டத்தரணிகள்

Marriage Proposals
in the
Sunday Observer
Is the best way to fulfil
your Future Dreams

### சுகாதார அமைச்சு

## ஆய்வுகூடங்களுக்கான மருந்தாக்கங்கள், சத்திரசிகிச்சை நுகர்வுப் பொருட்கள்

**சத்திரசிகிச்சை உபகரணங்கள், சத்திரசிகிச்சை கட்டுத் துணிகள், ஆய்வுகூட இரசாயனங்கள், உபகலவைகள் (Reagents), சோதனைப் பொருட்கள், கண்ணாடிப் பொருட்கள், உலோக பொருட்கள் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் ஆகியன அடங்கலான உள்ளூர் உற்பத்திகளுக்கான அனைத்து மருத்துவ வழங்குநர்களிடமிருந்து வழங்கல் ஒப்பந்தங்கள்**

அரச துறை வைத்தியசாலைகளுக்கு தொடர்ச்சியானதும் தரமுள்ள மருத்துவ வழங்கல்களை வழங்கும் நோக்கத்துடனும் உள்ளூர் உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதன் மூலம் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்கும் மேலேயுள்ள அம்சங்களை உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து நேரடியாக வழங்குவதற்காக ஒப்பந்தமொன்றை உருவாக்குவதற்கு சுகாதார அமைச்சானது தீர்மானித்துள்ளது.

விண்ணப்பங்கள் இலங்கையின் தகைமையுள்ள உள்ளூர் வழங்குநர்களிடமிருந்து சமர்ப்பிக்கப்படலாம். NMRA பதிவு பெற்ற விண்ணப்பதாரிகள் ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள தேவைப்படுத்தப்படும் தகைமைகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதற்கான நடைமுறை:

2024.07.19 ஆம் திகதியன்று மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் 12,500 இலங்கை ரூபாவை மீளளிக்கப்படாத கொடுப்பனவாக செலுத்திய பின்னர், அலுவலக நாட்களில் ஆங்கிலத்திலுள்ள முழுமையான ஆவணங்களின் தொகுதியொன்று ஆர்வமுள்ள உள்ளூர் உற்பத்தியாளர்களினால் சுகாதார அமைச்சின் மருத்துவ வழங்கல் பிரிவின் பிரதி பணிப்பாளர் நாயகத்திடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட ஆவணங்கள் பின்வரும் முகவரிக்கு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட தபாலுறைகளில் பதிவுத் தபாலில் 2024.07.22 ஆம் திகதியன்று பி.ப. 2 மணியளவில் கிடைக்கும் தன்மையில் அல்லது நேரடியாக ஒப்படைக்கப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் 'Application for Supply of Medical Supplies' என குறிப்பிடப்படல் வேண்டும்.

**பிரதி பணிப்பாளர் நாயகம்,**
**மருத்துவ வழங்கல் பிரிவு,**
**சுகாதார அமைச்சு,**
**இல.: 357,**
**வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை,**
**கொழும்பு-10.**
**தொலைபேசி: 011-2694113/4**

### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

### அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனம்

SD&CC
1971-202

## பதவி வெற்றிடங்கள்

சிஎஸ்1 தரம் மற்றும் ISO 9001:2015 பதிவு ஆகியவற்றையுடைய அரசாங்க நிறுவனமொன்றின் கனமான சிவில் பொறியியல் நிர்மாணத்துறையிலுள்ள தொழில்சார் நிபுணர்களின் அணியொன்றுடன் இணைவதற்கான தொழிற்பணி சந்தர்ப்பங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

பின்வரும் பதவிக்காக தகைமையுள்ள இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பொது முகாமையாளர் - தரம் IA (HM 2-1)**

**வெளியக தகைமைகள்:**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து இயைபுடைய பொறியியல் துறையில் பெற்ற இளமாணிப்பட்டமொன்று.

அத்துடன் இலங்கை பொறியியலாளர்கள் நிறுவகத்தின் கூட்டிணைவு அங்கத்துவம் (முழுமையான அங்கத்துவம்)

**மற்றும்**

இளமாணிப் பட்டத்தைப் பெற்றபின்னர் கூட்டுத்தாபனம், நியதிச் சட்டசபை அல்லது புகழ்வாய்ந்த தனியார் அமைப்பொன்றில் ஆகக் குறைந்தது இருபது (20) வருட ''முகாமைத்துவ மட்டத்தில்'' அனுபவம். இலங்கை பொறியியலாளர்கள் நிறுவக அங்கத்துவத்தை (முழுமையான அங்கத்துவம்) பெற்ற பின்னர், ''சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில்'' ஆகக்குறைந்தது 5 (ஐந்து) வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

**உள்ளக தகைமைகள்:**

**(SD&CC ஊழியர்களுக்கு மாத்திரம்)**

அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனத்தில் ''சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில்'' (ஏச்எம் ) வகுதியில் பிரதி பொது முகாமையாளராக (பொறியியல்) ஆகக் குறைந்தது 5 (ஐந்து) வருட அனுபவம்.

**அத்துடன்**

இலங்கை பொறியியலாளர்கள் நிறுவக அங்கத்துவத்தை (முழுமையான அங்கத்துவம்) பெற்ற பின்னர், இயைவுடைய துறையில் 10 வருட தகைமை பின்பட்ட வேலை செய்த அனுபவம்.

**வயதெல்லை:** 35 வயதிற்கு குறைவாகவில்லாமலும் 55 இற்கு மேற்படாமலுமிருத்தல் வேண்டும். (மேல் வயதெல்லை உள்ளக அபேட்சகர்களுக்கு பிரயோகப்படுத்தப்பட மாட்டாது)

**சம்பள அளவு:** தெரிவு செய்யப்பட்ட அபேட்சகருக்கு பின்வருவன அடங்கலாக கவர்ச்சிகரமானதொரு வேதன பொதியொன்று வழங்கப்படும்.

- வருடாந்த மிகையூதியம்
- பாவிக்கப்படாத மருத்துவ விடுமுறைக்கான பணக்கொடுப்பனவு
- ஊக்குவித்தல்கள்
- தொழில்சார் படிகள்
- ஒதுக்கப்பட்ட வாகனம்/போக்குவரத்து படி

தகைமைகளின் முழுமையான விபரங்கள், சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் உறவிரனல்லாத இரு பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள்/தொடர்பு இலக்கங்கள் ஆகியவற்றுடனான விண்ணப்பமானது சிரேஷ்ட முகாமையாளர் (மனித வளங்கள் மற்றும் நிர்வாகம்) இற்கு இந்த விளம்பரம் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 10 நாட்களுள் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை அபேட்சகர்கள் குறித்துரைத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**அரச அபிவிருத்தி மற்றும் நிர்மாண கூட்டுத்தாபனம்,**
**இல. 07, போறுபன வீதி,**
**இரத்மலான.**

**"உட்கட்டமைப்பு நிர்மாணத்தின் முன்னோடிகள்"**

### இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
### வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல் (IFB)

## தம்புள்ளையில் உள்ள ரங்கிரி தம்புலு தேசிய பாடசாலையின் பாதுகாப்பு மேம்பாடுகள்

| ஒப்பந்த இலக்கம் | விபரம் | CIDA தரம் | மனுப் பாதுகாப்பு (ரு) |
|---|---|---|---|
| RDA/DPR/PRO/WK/NCB/MMDV/2024/44 | தம்புள்ள, ரங்கிரி தம்புலு தேசிய பாடசாலையின் பாதுகாப்பு மேம்படுத்தல் | C5 மற்றும் C4 | 655,000.00 |

மேற்குறிப்பிடப்பட்ட ஒப்பந்தங்களுக்காக **தேசிய மனுக்கோரல் போட்டி முறையின்** கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றது. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.07.08** ஆம் திகதி முதல் **2024.07.29** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தலைவர்,
வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் குழு,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை.

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### உயர் கல்விப் பிரிவு, கல்வி அமைச்சு

**விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)**
**துப்புரவு சேவைகளை வழங்கல் 2024/2025**
**HE/PR/NCB/2024/Janitorial**

1. உயர் கல்விப் பிரிவுக்காக துப்புரவு சேவையை வழங்குவதற்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கல்வி அமைச்சு, உயர் கல்விப் பிரிவின் சார்பில் அமைச்சுப் பெறுகைக் குழு (MPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. தேவைகளின் விரிவான விபரக்குறிப்பு விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளது.
2. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
3. வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் 2024 ஜூலை 08 ஆம் திகதியில் இருந்து செயற்படும் மீளளிக்கப்படாத கட்டணமாக மூவாயிரத்து ஐந்நூறு இலங்கை ரூபாவை (3,500.00) செலுத்தி கொழும்பு 07, வோர்ட் பிளேஸ், இல. 18, உயர் கல்விப் பிரிவின் அலுவலகத்தில் இருந்து எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை வாங்க முடியும். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும். மேலதிக விபரங்களை 0112 685139/ 0112 677120 / 0114849123 என்ற தொலைபேசி இலக்கங்களில் பணிப்பாளரை (உட்கட்டமைப்பு அபிவிருத்தி) அழைப்பதன் மூலம் பெற முடியும்.
4. அரச நிறுவனங்கள் தவிர்த்து அனைத்து விலைமனுதாரர்களும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் இருந்து பெறப்பட்ட 50,000.00 ரூபா மீளளிக்கப்படும் விலைமனு பிணை (விலைமனுப் பத்திரம்) ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
5. அதன்படி, துப்புரவு சேவையை வழங்குவதில் ஆர்வம் காட்டும் தரப்புகள் துப்பரவு சேவையின் அனைத்து விபரங்களையும் உள்ளடக்கிய கேள்விமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்களை சமர்ப்பிக்கும்போது, இரு பிரதிகளிலான கேள்விமனுவை "அசல்" மற்றும் "பிரதி" என முத்திரை இடப்பட்ட வெவ்வேறு உறைகளில் இட்டு அந்த கடித உறைகளில் "அசல்" மற்றும் "பிரதி" எனக் குறிப்பிடுதல் வேண்டும். இரு கடித உறைகளும் ஒற்றை கடித உறையில் இட்டு, முத்திரையிட்டு சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுவைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "துப்புரவு சேவைகளை வழங்கல் 2024/2025" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
6. விலைமனுக்களை 2024 ஜூலை 29 ஆம் திகதி மு.ப. 10.30 அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் (உட்கட்டமைப்பு அபிவிருத்தி), உயர் கல்விப் பிரிவு, இல. 18, வோர்ட் பிளேஸ், கொழும்பு 07 என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் மற்றும் மின்னணு முறையில் அனுப்பப்படும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது என்பதோடு நிராகரிக்கப்படும். விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் பணிப்பாளர் (உட்கட்டமைப்பு அபிவிருத்தி), உயர் கல்விப் பிரிவு, இல. 18, வோர்ட் பிளேஸ், கொழும்பு 07 என்ற முகவரியில் அவை உடன் திறக்கப்படும் என்பதோடு இந்த சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரர் அல்லது அவர் தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு பங்கேற்க முடியும்.
7. விலைனுக்களை தயாரிப்பது அல்லது விநியோகிப்பதுடன் தொடர்புபட்டு விலைமனுதாரர்களால் ஏற்படும் எந்த ஒரு செலவுகள் அல்லது எந்த ஒரு இழப்புகளுக்கும் கல்வி அமைச்சின் உயர் கல்விப் பிரிவு பொறுப்பேற்காது.

**தலைவர்**
**அமைச்சு பெறுகைக் குழு**
**கல்வி அமைச்சு,**
**உயர் கல்விப் பிரிவு,**
**இல. 18, வோர்ட் பிளேஸ்,**
**கொழும்பு 07**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### கல்வி அமைச்சு (உயர் கல்விப் பிரிவு)

**விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)**
**பாதுகாப்புச் சேவைகளை வழங்கல் 2024/2025**
**HE/PR/NCB/2024/Security**

1. இல. 18, வோர்ட் பிளேஸ் அலுவலகம் மற்றும் இல. 84 ஏ, விக்ரமசிங்க பிளேஸ், பத்தரமுல்லை, அலுவலக வளவுக்காக பாதுகாப்புச் சேவையை வழங்குவதற்கு பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து கல்வி அமைச்சு (உயர் கல்விப் பிரிவு) சார்பில் அமைச்சுப் பெறுகைக் குழு (MPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.
2. தேவைகளின் விரிவான விபரக்குறிப்பு விலைமனு ஆவணத்தில் தரப்பட்டுள்ளது.
3. தேசிய போட்டிரீதியான விலைமனு நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.
4. மேலதிக விபரங்களை 0112 677120 என்ற தொலைபேசி இலக்கத்தில் பணிப்பாளரை (உட்கட்டமைப்பு அபிவிருத்தி) அழைப்பதன் மூலம் பெற முடியும்.
5. வேலை நாட்களில் அலுவலக நேரத்தில் 2024 ஜூலை 08 ஆம் திகதியில் இருந்து செயற்படும் மீளளிக்கப்படாத கட்டணமாக மூவாயிரத்து ஐந்நூறு இலங்கை ரூபாவை (3,500.00) செலுத்தி கொழும்பு 07, வோர்ட் பிளேஸ், இல. 18 என்ற முகவரியின் அலுவலகத்தில் இருந்து எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியிலான விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை வாங்க முடியும். கட்டணம் ரொக்கப்பணத்தில் இருத்தல் வேண்டும்.
6. அரச நிறுவனங்கள் தவிர்த்து அனைத்து விலைமனுதாரர்களும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்கும் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியில் இருந்து பெறப்பட்ட 50,000.00 ரூபா மீளளிக்கப்படும் விலைமனு பிணை (விலைமனுப் பத்திரம்) ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.
7. அதன்படி, பாதுகாப்புச் சேவையை வழங்குவதில் ஆர்வம் காட்டும் தரப்புகள் துப்பரவு சேவையின் அனைத்து விபரங்களையும் உள்ளடக்கிய விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும். விலைமனுக்களை சமர்ப்பிக்கும்போது, இரு பிரதிகளிலான கேள்விமனுவை "அசல்" மற்றும் "பிரதி" என முத்திரை இடப்பட்ட வெவ்வேறு உறைகளில் இட்டு அந்த கடித உறைகளில் "அசல்" மற்றும் "பிரதி" எனக் குறிப்பிடுதல் வேண்டும். இரு கடித உறைகளும் ஒற்றை கடித உறையில் இட்டு, முத்திரையிட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
8. விலைமனுவைக் கொண்ட கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பாதுகாப்புச் சேவைகளை வழங்கல் 2024/2025" என்று குறிப்பிடுதல் வேண்டும்.
9. விலைமனுக்களை 2024 ஜூலை 29 ஆம் திகதி மு.ப. 10.30 அல்லது அதற்கு முன்னர் பணிப்பாளர் (உட்கட்டமைப்பு அபிவிருத்தி), உயர் கல்விப் பிரிவு, இல. 18, வோர்ட் பிளேஸ், கொழும்பு 07 என்ற முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் மற்றும் மின்னணு முறையில் அனுப்பப்படும் விலைமனுக்கள் ஏற்கப்படமாட்டாது என்பதோடு நிராகரிக்கப்படும்.
10. விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின் கல்வி அமைச்சு, பணிப்பாளர் (உட்கட்டமைப்பு அபிவிருத்தி), அலுவலகம், இல. 18, வோர்ட் பிளேஸ், கொழும்பு 07 என்ற முகவரியில் அவை உடன் திறக்கப்படும் என்பதோடு இந்த சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரர் அல்லது அவர் தம் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகளுக்கு பங்கேற்க முடியும்.
11. விலைனுக்களை தயாரிப்பது அல்லது விநியோகிப்பதுடன் தொடர்புபட்டு விலைமனுதாரர்களால் ஏற்படும் எந்த ஒரு செலவுகள் அல்லது எந்த ஒரு இழப்புகளுக்கும் கல்வி அமைச்சின் உயர் கல்விப் பிரிவு பொறுப்பேற்காது.

**தலைவர்**
**அமைச்சு பெறுகைக் குழு**
**கல்வி அமைச்சு,**
**உயர் கல்விப் பிரிவு,**
**இல. 18, வோர்ட் பிளேஸ்,**
**கொழும்பு 07**

# இலங்கை அணியின் இடைக்கால பயிற்சியாளராகிறார் ஜயசூரிய

## இந்திய மற்றும் இங்கிலாந்து தொடர்களில் பணியாற்றுகிறார்

பதவி விலகிய கிறிஸ் சில்வர்வுட்டுக்கு பதில் புதிய தலைமை பயிற்சியாளர் ஒருவர் தேடப்பட்டு வரும் நிலையில் சொந்த மண்ணில் நடைபெறும் இந்தியாவுக்கு எதிரான தொடர் மற்றும் இங்கிலாந்து டெஸ்ட் சுற்றுப் பயணத்திற்கான இலங்கை அணியின் இடைக்கால பயிற்சியாளராக சனத் ஜயசூரிய செயற்படவுள்ளார்.

சனத் ஜயசூரிய ஓர் ஆண்டு காலத்திற்கு கிரிக்கெட் ஆலோசகராக கடந்த டிசம்பரில் இலங்கை கிரிக்கெட் சபையால் நியமிக்கப்பட்டார். அவர் கெத்தாரமையில் உள்ள இலங்கை கிரிக்கெட்டின் உயர் செயல்திறன் நிலையத்தில் வீரர்கள் மற்றும் பயிற்சியாளர்களுடன் மேற்பார்வையாளராக செயற்பட்டு வருகிறார்.

ஜயசூரிய இம்முறை டி20 உலகக் கிண்ணத்திற்குச் சென்ற இலங்கை அணியுடன் ஆலோசகரமாகவும் இணைந்திருந்தார்.

இந்நிலையில் முழுநேர பயிற்சியாளர் ஒருவரை தேடி வரும் நிலையில் ஜயசூரிய இடைக்காலப் பயிற்சியாளராக செயற்படுவார் என்பதை இலங்கை கிரிக்கெட் உறுதி செய்துள்ளது.

டி20 உலகக் கிண்ணத்தில் இலங்கை அணி மோசமான தோல்வியை சந்தித்து ஆரம்ப சுற்றுடன் வெளியேறியதை அடுத்தே சில்வர்வுட் இலங்கை தலைமை பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகும் அறிவிப்பை வெளியிட்டார். அவருக்கு முன்னர் ஆலோசனைப் பயிற்சியாளராக செயல்பட்ட மஹேல ஜயவர்தனவும் அந்தப் பதவியில் இருந்து விலகினார்.

ஜயசூரியவுக்கு பயிற்சியாளராக செயற்பட்ட அனுபவம் இல்லாதபோதும் அவர் பல தடவைகள் இலங்கை கிரிக்கெட் தேர்வாளராக இருந்துள்ளார்.

இலங்கை அணி அடுத்து இந்தியாவுக்கு எதிராக மட்டுப்படுத்தப்பட்ட ஓவர் கிரிக்கெட் தொடரில் ஆடவுள்ளது. இலங்கை வரும் இந்திய அணி மூன்று டி20 மற்றும் மூன்று ஒருநாள் போட்டிகளில் ஆடவுள்ளது. இதனைத் தொடர்ந்து மூன்று போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடுவதற்கு இலங்கை அணி இங்கிலாந்து செல்லவுள்ளது.



இந்த டெஸ்ட் தொடர் மான்செஸ்டரில் எதிர்வரும் ஓகஸ்ட் 21 ஆம் திகதி ஆரம்பமாகும் முதலாவது டெஸ்ட் போட்டியுடன் தொடங்கவுள்ளதோடு தொடர்ந்து இரண்டு மற்றும் மூன்றாவது போட்டிகள் முறையே லோட்ஸ் மற்றும் ஓவலில் ஓகஸ்ட் 29 மற்றும் செப்டெம்பர் 6 ஆம் திகதிகளில் ஆரம்பமாகவுள்ளன. கடைசியாக 2016 ஆம் ஆண்டு இலங்கை அணி இங்கிலாந்து சுற்றுப்பயணம் மேற்கொண்டபோது 2–0 என தொடரை இழந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இலங்கை டெஸ்ட் அணி வீரர்கள் இந்தத் தொடருக்கு தயாராகும் வகையில் அடுத்த மாதம் ஆரம்பத்திலேயே இங்கிலாந்து பயணிக்கவுள்ளனர். இதில் முன்னாள் டெஸ்ட் அணித் தலைவர் திமுத் கருணாரத்ன, தினேஷ் சந்திமால், விஷ்வ பெரனாண்டோ, லஹிரு குமார, நிஷான் மதுஷங்க, ரம்னேஷ் மெண்டிஸ், பிரபாத் ஜயசூரிய மற்றும் அஞ்சலோ மத்தியூஸ் ஆகிய வீரர்கள் ஓகஸ்ட் முதல் வாரத்திலேயே இங்கிலாந்து செல்ல திட்டமிட்டுள்ளனர்.

# இலங்கையின் 6ஆவது வீரராக அருண ஒலிம்பிக் முன்னேற்றம்



பாரிஸ் ஒலிம்பிக் போட்டிக்கு இலங்கையின் ஆறாவது வீரராக அருண தர்ஷன தெரிவாகியுள்ளார். அவர் ஆண்களுக்கான 400 மீற்றர் ஓட்டப் போட்டிக்கே தகுதி பெற்றுள்ளார்.

அருண தர்ஷன ஒலிம்பிக் தகுதி பெறும் 48 வீரர்களில் இடம்பெறாத நிலையில் அந்தத் தரவரிசையில் 51 ஆவது இடத்தை பெற்றிருந்தார். ஒலிம்பிக்கில் பங்கேற்கத் தவறிய வீரர்களின் புதிய தரவரிசையை உலக மெய்வல்லுனர் சம்மேளனம் வெளியிட்டுள்ளது. இதன்படி அருண ஒலிம்பிக் தகுதிக்கான இடத்தை உறுதி செய்துள்ளார்.

இருபது ஆண்டுகளின் பின்னரே இலங்கை 400 மீற்றர் ஓட்டப்போட்டியில் ஒலிம்பிக்கில் பங்கேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. அருண தர்ஷன தவிர இளம் மத்திய தூர ஓட்ட வீராங்கனை தருஷி கருணாரத்ன மற்றும் ஈட்டி எறிதல் வீராங்கனை டில்ஹானி லேக்கம்கே ஆகிய இருவரும் இம்முறை பாரிஸ் ஒலிம்பிக் விளையாட்டு விழாவிற்கு தகுதி பெற்ற ஏனைய மெய்வல்லுனர்கள் ஆவர். தவிர நீச்சல் மற்றும் பூப்பந்து போட்டிகளில் மேலும் மூன்று வீர, வீராங்கனைகள் ஒலிம்பிக் செல்லவுள்ளனர். இம்முறை ஒலிம்பிக் போட்டி எதிர்வரும் ஜூலை 26 தொடக்கம் ஓகஸ்ட் 11ஆம் திகதி வரை பாரிஸில் நடைபெறவுள்ளது.

# பாடசாலை நீச்சல் சம்பியன்சிப்: நாளை சுகததாசவில் ஆரம்பம்



நெஸ்லே மைலோ அனுசரணையில் 49 ஆவது அகில இலங்கை பாடசாலை நீர் விளையாட்டு சம்பியன்சிப் போட்டி நாளை (09) தொடக்கம் எதிர்வரும் ஜூலை 14 ஆம் திகதி வரை கொழும்பு, சுகததாச தேசிய விளையாட்டு வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை பாடசாலை நீர் விளையாட்டு சம்மேளனத்தினால் நடத்தப்படும் இந்தப் போட்டிக்கு நெஸ்ட்லே மைலோ தொடர்ந்து ஊக்கம் அளித்து வருகிறது. அனைத்து மாணவர்களுக்கும் தமது திறமையை வெளிப்படுத்துவதற்கு சம அளவான வாய்ப்பை வழங்கும் இந்த போட்டியில் நாடு முழுவதிலும் உள்ள 272 பாடசாலைகளைச் சேர்ந்த 2000க்கும் அதிகமான மாணவிகள் மற்றும் 3000க்கும் அதிகமான மாணவர்கள் பங்கேற்கவுள்ளனர்.

# பிரான்ஸில் தீர்க்கமான பொதுத் தேர்தலில் வாக்குப் பதிவு

பிரான்ஸில் தீவிர வலதுசாரிகளான தேசிய பேரணி கட்சி அதிகாரத்தை கைப்பற்ற எதிர்பார்க்கும் நிலையில் நேற்று (7) இரண்டாம் கட்ட தேர்தலில் மக்கள் வாக்களித்துள்ளனர். எனினும் இந்தத் தேர்தலில் எந்தக் கட்சியும் பெரும்பான்மையை பெறாத தொங்கு பாராளுமன்றம் ஒன்று ஏற்பட வாய்ப்பு இருப்பதாக கருத்துக் கணிப்புகள் கூறுகின்றன.

தீவிர வலதுசாரி தேசிய பேரணியும் அதன் கூட்டாளிகளும் கடந்த வாரம் நடந்த முதல் கட்ட வாக்குப் பதிவில் தங்கள் போட்டியாளர்களை விட மிகவும் முன்னேறி, மூன்றில் ஒரு பங்கு வாக்குகளைப் பெற்றனர்.

இந்நிலையில் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோனின் அதிகாரம் பெருமளவிற்கு பாதிக்கப்படலாம் என்று நம்பப்படுகிறது.

எனினும் இந்த நிலை ஏற்படுவதை தவிர்ப்பதற்காக இடதுசாரிகள் உட்பட அரசியல் கட்சிகள் கைகோர்த்துள்ளன. இதனை தொடர்ந்து பாராளுமன்ற தேர்தலில் பெரும்பான்மை பெறுவது குறித்த தீவிர வலதுசாரிகளின் எதிர்பர்ப்பில் பின்னடைவு ஏற்பட்டுள்ளது.

தீவிர வலதுசாரிகள் அதிகளவு ஆசனங்களை கைப்பற்றுவார்கள்



ஆனால் பெரும்பான்மைக்கான 289 ஆசனங்கள் அவர்களுக்கு கிடைக்காது என கருத்துக்கணிப்புகள் தெரிவிக்கின்றன.

பிரான்ஸ் நேரப்படி நேற்றுக் காலை 8 மணிக்கு ஆரம்பமான வாக்குப் பதிவுகள் சிறு நகரங்களில் மாலை 6 மணிக்கும் பெரு நகரங்களில் இரவு 8 மணிக்கும் நிறைவடைந்தன. தேர்தல் முடிவுகள் இன்று (08) வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஐரோப்பிய பாராளுமன்றத் தேர்தலில் தீவிர வலதுசாரிகள் வெற்றியீட்டியதை அடுத்தே ஜனாதிபதி மெக்ரோன் நான்கு வாரங்களுக்கு முன்னர் திடீர் தேர்தலுக்கு அழைப்பு விடுத்தார்.

பாரிஸில் ஒலிம்பிக் போட்டி நடைபெறுவதற்கு சில வாரங்களுக்கு முன்னரே பிரான்ஸில் தேர்தல் இடம்பெற்றுள்ளது. இந்நிலையில் தேர்தல் முடிவுகள் பாரிஸ் மற்றும் ஏனைய நகரங்களில் வன்முறைக்கு வழிவகுக்கக் கூடும் என்ற அச்சமும் அதிகரித்துள்ளது. பாராளுமன்றத்திற்கு முன்னால் நேற்று மாலை திட்டமிடப்பட்ட ஆர்ப்பட்டம் ஒன்றுக்கு தடை விதிக்கப்பட்டது.

பிரான்ஸில் முதல் முறை ஆட்சி அமைக்க எதிர்பார்க்கும் தீவிர வலதுசாரிகள் அந்நாட்டினதும் ஐரோப்பாவினதும் திருப்பமாக அமைய வாய்ப்பு உள்ளது.

# சர்வதேச செய்திகள்

# ஒன்பதாவது மாதத்தை தொட்ட காசா போரில் இஸ்ரேலிய தாக்குதல்களில் மேலும் பலர் பலி



## போர் நிறுத்த முயற்சிகளில் போர் தரப்புகள் ஈடுபாடு

காசா போர் நேற்றுடன் (7) ஒன்பதாவது மாதத்தை எட்டிய நிலையில் இஸ்ரேல் பெரும் உயிரிழப்புகளை ஏற்படுத்தி கடுமையான தாக்குதல்களை முன்னெடுத்திருப்பதோடு பலஸ்தீன போராளிகளுடனான மோதல் தொடர்ந்து நீடிக்கும் நிலையில் போர் நிறுத்தம் ஒன்றுக்கான புதிய இராஜதந்திர முயற்சிகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

கட்டார் மத்தியஸ்தர்கள் அண்மையில் போர் நிறுத்த முயற்சிகளை தீவிரப்படுத்திய நிலையில் அந்தப் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கு எதிர்வரும் நாட்களில் தூதுக்குழு ஒன்றை அனுப்புவதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

எனினும் போர் நிறுத்தம் மற்றும் பணயக்கைதிகளை விடுவிப்பது தொடர்பில் உடன்பாடு ஒன்றை எட்டுவதில் ஹமாஸுடனான இடைவெளி தொடர்ந்து இருப்பதாக இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தெரிவித்துள்ளார்.

'பேச்சுவார்த்தைகளைத் தொடர்வதற்கு இஸ்ரேலிய பிரதிநிதிகள் இந்த வாரம் டோஹா செல்வதற்கு இணக்கம் எட்டப்பட்டுள்ளது. தரப்புகளுக்கு இடையே தொடர்ந்தும் இடைவெளி உள்ளது“ என்று இஸ்ரேலிய அரச பேச்சாளர் ஒருவர் கடந்த வெள்ளி (5) அன்று குறிப்பிட்டிருந்தார்.

எனினும் போரை முடிவுக்குக் கொண்டுவரும் உடன்படிக்கை ஒன்றின் முதல் கட்டத்தின் பின்னர் 16 நாட்களில் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதற்கு படையினர் மற்றும் ஆண்கள் உட்பட இஸ்ரேலிய பணயக்கைதிகளை விடுவிக்கும் அமெரிக்காவின் முன்மொழிவுக்கு ஹமாஸ் இணக்கத்தை வெளியிட்டிருப்பதாக ஹமாஸ் தரப்பை மேற்கோள்காட்டி ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

முன்னதாக உடன்படிக்கை ஒன்றை எட்டுவதற்கு முன்னர் நிரந்தர போர் நிறுத்தம் ஒன்றுக்கு இஸ்ரேல் இணங்க வேண்டும் என்று ஹமாஸ் வலியுறுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது.

இஸ்ரேலினால் இது ஏற்கப்பட்டால் உடன்படிக்கை கட்டமைப்பு ஒன்றுக்கு இது வழிவகுக்கும் என்பதோடு போரை முடிவுக்குக் கொண்டுவரும் என்று இந்த அமைதி முயற்சியில் ஈடுபட்டிருக்கும் சர்வதேச மத்தியஸ்தர்களுக்கு நெருக்கமான பலஸ்தீன அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஹமாஸின் புதிய திட்டம் மத்தியஸ்தர்களால் அமெரிக்காவுக்கு அளிக்கப்பட்டிருப்பதோடு அதனை வரவேற்ற அமெரிக்கா இஸ்ரேலுக்கு வழங்கியுள்ளது என்று குறிப்பிட்ட ஹமாஸ் மூத்த அதிகாரி ஒசாமா ஹம்தான், 'தற்போது பந்து இஸ்ரேல் பக்கம் உள்ளது' என்று ஏ.எப்.பி. செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார்.

அமெரிக்க மத்திய உளவுப் பிரிவு (சி.ஐ.ஏ.) தலைவர் வில்லியம் பர்ன்ஸ் பேச்சுவார்த்தைக்காக இந்த வாரம் கட்டார் செல்லவிருப்பதாக நெருக்கமான வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

'பேச்சுவார்த்தையில் கணிசமான முன்னேற்றம் ஏற்பட்டபோதும் தொடர்ந்தும் பணியாற்ற வேண்டி உள்ளது' என்று அமெரிக்க அதிகாரி ஒருவர் ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.



கடந்த ஒக்டோபர் ஏழாம் திகதி வெடித்த காசா போரில் கடந்த நவம்பரில் ஒருவராம் நீடித்த போர் நிறுத்தத்தில் காசாவில் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் சுமார் 240 பணயக்கைதிகளில் 80 பேர் விடுவிக்கப்பட்டது தொடக்கம் போர் நிறுத்த முயற்சிகள் தொடர்ந்து தோல்வி அடைந்து வருகின்றன.

பணயக்கைதிகளை விடுவிக்கும் உடன்படிக்கை ஒன்றுக்கு செல்வதற்கு இஸ்ரேல் அரசுக்கு எதிராக இஸ்ரேலில் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு கடந்த சனிக்கிழமை இரவு டெல் அவிவில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது இஸ்ரேலியப் பொலிஸார் தண்ணீர் பீச்சியடித்தனர். நெதன்யாகுவை பதவி விலகும்படியும், புதிய தேர்தல் ஒன்றுக்கும் அழைப்பு விடுத்த ஆர்ப்பாட்டக்காரர்கள் பணயக்கைதிகளை உடன் விடுவிக்கவும் கோரினர்.

**பாடசாலையில் தாக்குதல்**

போர் நிறுத்த முயற்சிகளுக்கு மத்தியிலும் காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் மும்முரமாக இடம்பெற்று வருகின்றன. மத்திய காசாவில் இடம்பெயர்ந்த மக்கள் அடைக்கலம் பெற்றிருந்த பாடசாலை ஒன்றின் மீது கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற தாக்குதலில் குறைந்தது 16 பேர் கொல்லப்பட்டுள்ளதாக பலஸ்தீன சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. போராளிகளை இலக்கு வைத்தே தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் குறிப்பிட்டுள்ளது.

அல் நுஸைரத்தில் உள்ள பாடசாலை ஒன்றின் மீது இடம்பெற்ற இந்தத் தாக்குதலில் மேலும் 75 பேர் வரை காயமடைந்துள்ளனர்.

கொல்லப்பட்டவர்களில் சிறுவர்களும் இருப்பதாக சம்பவ இடத்தில் இருந்து ஐமன் அல் அட்ரூனி ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார். 'இலக்கு வைக்கப்பட்ட பகுதியை பார்க்க நாம் விரைந்து வந்தபோது சிறுவர்களின் உடல்கள் துண்டாக்கப்பட்டிருப்பதை கண்டோம். இது ஒரு விளையாட்டு மைதானம் இங்கே ஊஞ்சல்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள் இருந்தன' என்று குறிப்பிட்டுள்ளார்.

காயமடைந்த பலரும் ஆபத்தான நிலையில் இருப்பதால் உயிரிழப்பு எண்ணிக்கை அதிகரிக்கக் கூடும் என்று காசா சிவில் அவசர சேவை பேச்சாளர் மஹ்மூத் பசல் தெரிவித்துள்ளார். அடைக்கலம் தேடி தமது வீடுகளை விட்டு வெளியேறிய குடும்பங்களுக்கு எந்த இடமும் பாதுகாப்பு இல்லை என்பதையே இந்தத் தாக்குதல் காட்டுகிறது என்றும் அவர் கூறினார்.

காசாவில் உள்ள எட்டு வரலாற்று அகதி முகாம்களில் ஒன்றான அல் நுஸைரத்தில் இஸ்ரேல் கடந்த சனிக்கிழமை தொடக்கம் உக்கிர தாக்குதல்களை நடத்தி வருகிறது. முன்னதாக அந்த முகாமில் உள்ள வீடு ஒன்றின் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் குறைந்தது 10 பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்ததாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை இரவு இடம்பெற்ற தாக்குதல்களில் நான்கு ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டதாக ஹமாஸ் ஊடக அலுவலகம் மற்றும் மருத்துவ உதவியாளர்கள் குறிப்பிட்டதோடு தமது பணியாளர்கள் இருவரும் கொல்லப்பட்டதாக ஐக்கிய நாடுகள் நிவாரண மற்றும் பணிகள் நிறுவனம் தெரிவித்துள்ளது. காசா போர் வெடித்தது தொடக்கம் குறைந்தது 158 ஊடகப் பணியாளர்கள் கொல்லப்பட்டிருப்பதாக காசா அரச ஊடக அலுவலகம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக எகிப்து எல்லையை ஒட்டிய தெற்கு காசா நகரான ரபாவில் இஸ்ரேலிய தரைப்படையின் முன்னேற்றம் நீடித்து வரும் நிலையில் கடந்த சனிக்கிழமை இஸ்ரேலிய வான் தாக்குதலில் அங்கு நான்கு பலஸ்தீன பொலிஸார் கொல்லப்பட்டுள்ளனர். அவர்கள் சென்ற வாகனத்தை இலக்கு வைத்தே இஸ்ரேல் தாக்குதல் நடத்தியுள்ளது.

ஹமாஸ் ஆயுதப் பிரிவின் கடைசி படைப் பிரிவுகளை அழிக்கும் இலக்குடனேயே ரபாவில் படை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக இஸ்ரேல் கூறுகிறது.

எனினும் காசாவில் பலஸ்தீன போராளிகளிடம் இருந்து இஸ்ரேலிய படை தொடர்ந்து கடும் எதிர்ப்பை சந்தித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

வடக்கில் காசா நகரின் ஷெய்க் ரத்வான் பகுதியில் வீடு ஒன்றின் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதலை அடுத்து அங்கு நேற்று ஆறு சடலங்கள் மீட்கப்பட்டதாக பலஸ்தீன செய்தி நிறுவனமான வபா குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஒன்பது மாதங்களை எட்டியிருக்கும் காசா போரில் இஸ்ரேலின் தாக்குதல்களில் ஒவ்வொரு நாளும் கணிசமான பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு வருவதோடு காசா முழுவதும் சின்னாபின்னமாக்கப்பட்டு அங்குள்ள சுமார் 90 வீதமான மக்கள் தமது வீடுகளை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளனர். இஸ்ரேலின் முற்றுகையால் உணவு, நீர், மருந்து மற்றும் எரிபொருளுக்கு தட்டுப்பாடு நிலவும் சூழலில் அந்தப் பகுதி பஞ்சம் ஒன்றை நெருங்கி உள்ளது.

இந்தப் போரில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 38,000ஐ தாண்டி இருப்பதோடு கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்கள் மற்றும் சிறுவர்களாவர்.

காசா போரை ஒட்டி இஸ்ரேலின் லெபனான் எல்லையிலும் போர் பதற்றம் அதிகரித்திருப்பதோடு ஹிஸ்புல்லா மற்றும் இஸ்ரேல் இடையே தினசரி மோதல் இடம்பெற்று வரும் சூழலில் அது முழு அளவில் போர் ஒன்றாக வெடிக்கும் அச்சம் அதிகரித்துள்ளது.

தெற்கு லெபனானில் ஹிஸ்புல்லா இலக்குகளை தாக்கியதாகவும் எல்லைப் பகுதியில் பீரங்கி தாக்குதல்களை நடத்தியதாகவும் இஸ்ரேல் இராணுவம் சனிக்கிழமை குறிப்பிட்டிருந்தது. முன்னதாக சனிக்கிழமை காலை வடக்கு இஸ்ரேலின் சைரன் எச்சரிக்கை ஒலி எழுப்பப்பட்டதோடு லெபனானில் இருந்து வந்த சந்தேகத்திற்கு இடமான வான் இலக்கை தகர்த்ததாக இஸ்ரேல் இராணுவம் கூறியது.

கிழக்கு லெபனானில் இஸ்ரேலிய ஆளில்லா விமானம் வாகனம் ஒன்றை இலக்கு வைத்து நடத்திய தாக்குதலில் ஹிஸ்புல்லா அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜூலை மாதம் 8ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.